
கோகுலம்

GOKULAM

மே '93 ரூ. 3.00







கோகுலம்

1993 மே மாத இதழ்
மலர் : 11 இதழ் : 4

அருமைச் சிறுவர் சிறுமியரே,

கோடை விடுமுறை தொடங்கியிருக்குமே? உங்கள் பாடு கொண்டாட்டம்தான். சிலர் விடுமுறையைக் கழிக்க வெளியூருக்குக் கிளம்பிக் கொண்டிருப்பீர்கள். இந்த விடுமுறையில் நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை ஒரு இன்லேண்ட் லெட்டரில் எழுதி உங்கள் வயது, முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட்டு, ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தகுதியுள்ளவை கண்டிப்பாக கோகுலத்தில் வெளியாகும்.


விடுமுறையை முழுவதுமாக விளையாடியே கழித்து விடாதீர்கள். உங்களுக்குத் தெரிந்த, எழுதப் படிக்கத் தெரியாத ஏழை எளியவர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு, அவர்களுக்கு வசதியான ஒரு நேரத்தில் நீங்கள் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கலாம். இதைவிடப் பயனுள்ள பணி இருக்கவே முடியாது. இதைப் பற்றி நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை கோகுலத்திற்கு எழுதுங்கள்.

போன இதழில் வெளியான 'வீட்டுக்கு ஒரு மரம்' கட்டுரையைப் படித்து விட்டு, நாங்களும் 'ட்ரீ கிளப்' நடத்தப் போகிறோம் என்று பல சிறுவர் சிறுமியர்கள் உற்சாகமாக எழுதியிருக்கிறார்கள். இப்படி நீங்கள் ஒவ்வொருவரும் பயனுள்ள ஒரு தொண்டை இந்த விடுமுறையில் செய்ய வேண்டும் என்பதுதான் என் ஆசையும்.

உங்களுக்கு விடுமுறை தொடங்கி விட்டது என்பதை எண்ணும்போதே நான் என்னைத் தயாராக்கிக் கொள்ளுகிறேன். எதற்குத் தெரியுமா? உங்களிடமிருந்து வரும் கட்டுக் கட்டான கதை, கட்டுரைகளைப் படிக்கத்தான். இது உங்கள் கோகுலம். இதில் நீங்கள் எழுதும் படைப்புகளுக்குத்தான் முதல் உரிமை. மற்றவர்களுக்குப் பயன்படக்கூடிய எதை வேண்டுமானாலும் நீங்கள் எழுதலாம். மற்றவர்கள் எழுதியதை மட்டும் காப்பியடித்து விடாதீர்கள்!

''என்ன நடக்குமோ? பரதன் என்ன ஆனானோ?'' என்று நம்மை பதைபதைக்க வைத்து வரும் ''நூறு ரூபாய் இரகசியம்'', அடுத்த இதழில் முடிவடைகிறது. இதை நீங்கள் எத்தனை ஆர்வமாகப் படித்து வருகிறீர்கள் என்பதை உங்கள் கடிதங்களே கூறுகின்றன. எழுதி வருபவர் யார்? பூவண்ணன் ஆயிற்றே. பின் எப்படி இருக்கும்?

புதுமைகள் நிறைந்த புதிய தொடர்கதை ஒன்று விரைவில் தொடங்கப் போகிறது. இதை எழுதப் போகிறவர் கூட சிறுவர் இலக்கிய உலகில் சிறப்பான இடத்தை வகிக்கும் உங்கள் அன்புக்குரிய ஓர் எழுத்தாளர்தான். யாரென்பதை நீங்கள்தான் விரைவில் அறியப் போகி றீர்களே!



கோகுலத்தை உங்கள் நண்பர்களுக்கும், உறவினர் குழந்தைகளுக்கும் அறிமுகப்படுத்தி வாங்கிப் படிக்கச் சொல்லுங்கள். பிறந்த நாள் விழாக்களின் போதும், பாராட்டும் நேரங்களிலும் கோகுலத்திற்கு சந்தா கட்டிக் கொடுப்பதை விடப் பயனுள்ள, மகிழ்ச்சி தரும், சிறப்பான பரிசு வேறு உண்டா?

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும்
தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்.







கோகுலம்

இந்த இதழில்


மே 1993



★ பனிமனிதன் உண்மையா? பக்கம் 4




★ இசை அரசன் ஆனந்தன் பக்கம் 36



* கரடி பொம்மை சொல்லும் கதை பக்கம் 92



* கறையானுக்குக் கண் உண்டா? பக்கம் 83



* கோகோவும் சாக்லேட்டும்! பக்கம் 87

பனிமனிதன் உண்மையா?



இமயமலையின் அடிவாரப் பகுதி. சாலைச் சீரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், கடுமையான பனியைப் பொருட்படுத்தாது ஒரே மூச்சில் தங்கள் பணிகளைச் செய்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு உதவ மிகப் பெரிய ரோடு ரோலர்கள், டிரக் வாகனங்கள், தார் உருக்கி டிரம்கள், மினி கிரேன்கள் எல்லாம் இருந்தன. மாலை நெருங்கியது. அன்றைய பணிகளை முடித்துக் கொண்டு அவர்கள் அருகில் இருந்த கிராமங்களுக்குத் திரும்பி விட்டனர். தினமும் இப்படித்தான்.

அடுத்த நாள் காலையில் தங்கள் பணிகளைத் தொடங்க வந்த சாலைப் பணியாளர்களுக்கு ஓர் அதிர்ச்சிதரும் காட்சி காத்திருந்தது! அவர்கள் விட்டுச் சென்ற கனமான ரோடு ரோலர்கள், டிரக்குகள், தள்ளுவண்டிகள், கிரேன்கள் எல்லாமே குழந்தைகள் வீசியெறிந்த விளையாட்டுச் சாமான்களைப் போல் சிதறுண்டு கிடந்தன! கிரேன் வைத்துத் தூக்கப்பட வேண்டிய கனமான காங்கிரீட் பலகைகள், எங்கோ மூலைகளில் கிடந்தன. ரோட் ரோலர் தலைகீழாகப் புதைந்து கிடந்தது. கிரேன் தலைகீழாகப் புரண்டு கிடந்தது! தார் டிரம், கல் உடைக்கும் மிஷின் எல்லாம் அப்பளமாக நொறுங்கிக் கிடந்தன.

எல்லோரும் திகிலோடு பார்த்த போது ஒரு பணியாளர் தரையில் ஒரு இடத்தைக் காட்டிக் கத்தினார். எல்லோரும் சென்று பார்த்தனர்.

பனித் தரையில் யானையின் காலடிகளைப் போன்ற அளவில், சுமார் 48 செ.மீ. அகலமுள்ள பாதச் சுவடுகள் பதிந்து கிடந்தன! கெட்டியான பனித் தரையில், 48 செ.மீ. அகலக் காலடிகள் பதியுமாறு இருக்க வேண்டும் என்றால், அந்த உருவம் எவ்வளவு எடையுள்ளதாக, உயரமுள்ளதாக, வலிமை உள்ளதாக இருக்க வேண்டும் என்பதைக் கற்பனை செய்து பார்த்ததுமே எல்லோரும் பயத்தால் அரண்டு போனார்கள். இந்த நிகழ்ச்சி நடந்த ஆண்டு 1963 ஏப்ரல் மாதம்.

இரவில் வந்து போனது, எதி (YETHI) என்று குறிப்பிடப்படும் இராட்சசப் பனிமனிதன்தானா? இந்த மாதிரி எதி நடமாட்டம் பற்றிய செய்திகள் எல்லாம் அடிக்கடி



இமயமலைப் பகுதிகளில் எழும். இமய மலை மட்டுமல்ல, உலகத்தின் பல பகுதி களிலும் பனி படர்ந்த மலைச் சரிவுகளில் இந்த எதியின் நடமாட்டம் இருப்பது நாளேடுகளில் செய்திகளாக வெளிவந்து கொண்டே இருக்கின்றன. இங்கிலாந்தில் இந்தப் பனிமனிதனின் பெயர் SAS QUATH.

பறக்கும் தட்டுகளைப் பற்றி அடிக் கடி செய்திகள் வருகின்றன இல்லையா? இதே போல் எதியைப் பற்றியும் அவ்வப் பொழுது பரபரப்பான செய்திகள் வரு கின்றன. மக்கள் போட்டி போட்டுக் கொண்டு இவற்றைப் படிக்கிறார்கள். பத்திரிகைகளுக்கு நல்ல விற்பனை!

பனிமனிதனான எதியைப் பார்த்த தாகக் கூறப்படும் தகவல்களிலிருந்து இவனுடைய உருவம் 3லிருந்து 5 மீட்டர் வரை உயரம் என்றும், கொரில்லாவைப் போல் நீண்டு அடர்ந்த முடிகளால் போர்த்தப்பட்ட உடல் கொண்டது என்றும், முகம் மட்டும் வெளுத்துக் காணப்படுவது என்றும் தெரியவருகிறது.

இரேன்களை வைத்து எடுத்துச் செல் லும் பாறைகளையும் கனரக வாகனங் களையும் பனிமனிதன் மிக எளிதாகத் தூக்கி, நகர்த்தி, புரட்டிப் போடுவதைக் கொண்டு, இவனுக்கு இராட்சச பலம் இருப்பது தெரியவருகிறது. மனிதர்கள் இவனைப் பற்றிப் பீதி கொள்வது இதை எண்ணித்தான்.

பனிமனிதனின் உணவு என்னவாக இருக்கும்? இவன் ஒரு தாவர உண்ணி என்கிறது இமயமலை மக்கள் தரும் தகவல்கள். இவன் மாமிச உண்ணி என் கிறது சைபீரியா, இங்கிலாந்துத் தகவல் கள். எதியின் கால்களில் கட்டை விரலும் அதற்கடுத்த விரலும் மிகப் பெரியவை என்கிறது ரஷ்யத் தகவல்கள்.

இப்படிப்பட்ட ஒரு ராட்சச மனி தனை யாராவது நேருக்கு நேர் பார்த் திருக்கிறார்களா என்று கேட்டால், இல்லை என்ற பதில்தான் வருகிறது. அவன் வந்து சென்ற அடையாளங்கள் தான் தெரிகின்றனவே தவிர, எதியை நேரில் சந்தித்தவர்கள் இல்லை!

இமயமலைக்கு அருகே 'ரிஷ்முக்' என்று ஒரு குக் கிராமம். அங்கே வனத் துறைப் பணியாளர் ஒருவர் 'எதி'யை நேரில் பார்த்ததாகத் தகவல் கிடைக்கவே ஆராய்ச்சியாளர்கள் விரைந்தனர். தான் மறைந்திருந்து பார்த்த போது, எதி ஒரு முழு கோவேரிக் கழுதையைத் தின்று கொண்டிருந்ததாகவும், ஆப்பிள் பழங் களை முழுசு முழுசாக வாயில் போட்டுக் கடித்ததாகவும், தான், தன்னை அறியாது தும்மியதும் எதி பயந்து ஓடி விட்டதாக வும் கூறியதை ஆராய்ச்சியாளர்கள் உண்மை என்று ஏற்கவில்லை.

அப்படியானால் 'எதி'யைப் பற்றி ஆராய்ச்சியாளர்களின் முடிவு என்ன?

பனிமனிதன் என்ற எதி, உண்மை யாகவே இருக்கலாம். ஆனால் அவனைப் பற்றிக் கூறப்படும் தகவல்கள் மிகைப்படுத்தி, மக்கள் தாங்களாகவே தங்கள் கற்பனைக்கு ஏற்ப வளர்த்துக்

கொண்ட பொய்ச் செய்திகளே. அவனை ஓர் இராட்சஸனாகக் கற்பனை செய்து கொண்டவர்களின் பொய்யான தகவல்களே இவை என்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன் சீனாவில் பனிமனிதனுடைய மண்டை ஓடுகள் கிடைத்த தகவலை அவர்கள் ஏற்கவில்லை. இது மனித நாகரீகத்தை அறியாத பனிமலைக் காட்டு வாசியாக இருக்கலாம். இவர்கள் வளர்ச்சியடையாத மனித உருவங்கள். பாதி மனிதன், பாதி மனிதக் குரங்கு. வளர்ச்சியடையாத குரங்கு. மனித சந்ததியின் எஞ்சிய இனங்கள் இவை. மனிதர்களைக் கண்டால் எதி பயந்து ஒளிவது இதனால் தான் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

'எதி'யைப் பற்றி அதிகமான தகவல்கள், அதிலும் அதிசயமான தகவல்கள் அடிக்கடி வருவது இமயமலைப் பகுதிகளில் இருந்து தான். எனவே, எவரெஸ்ட் வீரரான எட்மண்ட் ஹில்லாரியை, இந்தப் பனிமனிதனைப் பற்றிய ஓர் அறிக்கையை அளிக்குமாறு ஆராய்ச்சியாளர்கள் கேட்டனர். அதன்படியே ஹில்லாரி ஒரு விவரமான அறிக்கையை அளித்தார்.



இவர் அளித்துள்ள அறிக்கையின் படி 'எதி' வெறும் புரட்டுச் செய்திகளின் மொத்த உருவமே!

தரையில் பதியும் இராட்சசக் கால் தடங்களைப் பற்றி ஹில்லாரி என்ன கூறுகிறார்? எந்த ஓர் அச்சுச் சுவடும் பனியில் பதிந்து, பின்பு கலையும் போது தானாகவே விரிந்து பெரிதாவது இயற்கை. பாதி கலைந்து பெரிதான நிலையில் இவற்றைப் பார்த்து மக்கள் பீதியடைகிறார்கள் என்கிறார் ஹில்லாரி.

பனிமனிதன் அடிக்கடி நடமாடுவதாகத் தகவல் வரும் திபெத், நேபாளம், பூடான் பகுதிகளில், பனிமனிதனைக் கண்டால் பிடிக்க முயல்வதும், சுடுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது! ஆராய்ச்சிப் பணிக்காக வருபவர்களுக்கு பனிமனிதனை உயிருடன் பிடிக்க மட்டும் தனி அனுமதி வழங்கப்படுகிறது; சுடுவதற்கு அல்ல. ஆனால் இது வரை எந்த எதியும் பிடிபடவில்லை. கண்டிப்பாகப் பிடிபடுவார்கள் என்ற நம்பிக்கை ஆராய்ச்சியாளர்களுக்கு இருக் கிறது. பொறுத்திருந்து பார்ப்போம். அதுவரை பனிமனிதனைப் பற்றி அவ்வப்பொழுது வெளிவரும் சுவையான (கப்சா) செய்திகளை நாமும் படித்து ரசிப்போம்!

- அப்துல்

விஷயமா வெளியூர் சென்றிருந்தார். அப்போ எனக்கு ஹிந்தி எக்ஸாம் வந்தது! பரீட்சைக்கு உடனே பணம் கட்ட வேண்டும். வீட்டில் அப்பாவின் பீரோவில்தான் காசு இருக்கும். அந்த முறை அவர் ஊருக்குப் போன போது மறந்து போய் பீரோ சாவியையும் கையோட எடுத்துக்கிட்டுப் போயிட்டார்! இப்போ அவசரமாக பீஸ் கட்டப் பணம் தேவை. என்ன பண்றது? அப்பா வர எப்படியும் நாலைந்து நாளாவது ஆகும்! திடீரென்று எனக்கு, நான் பள்ளியில் சேர்த்த பணம் ஞாபகம் வந்தது! அவசர அவசரமாகப் போய் எண்ணிப் பார்த்தேன்! எழுபத்தைந்து ரூபாய் இருந்தது! 'அப்பாடா' என்று நிம்மதி வந்தது. எக்ஸாம் பீஸ் கட்டிட்டேன்! அப்பா வந்து விஷயம் அறிந்ததும் என்னை 'மிகவும் பொறுப்புள்ள பெண்' என்று பாராட்டி மேலும் பரிசும் அளித்தார்! இப்போ நினைத்தாலும் இது எனக்கு ரொம்பப் பெருமையாக இருக்கிறது!



* கஸ்டமர்கள் கடைக்கு வரும் போது நான் இல்லாவிட்டால் 'எங்க சார் உங்க பொண்ணு?'ன்னுதான் அப்பாவிடம் கேட்கிறாங்களாம்
- ஸ்ரீதேவி ஸ்ரீநிவாசன்.



* நான் சும்மா இருப்பேனா? மறுபடியும் நோண்ட ஆரம்பிச்சேன்.
- யோகேஷ்.

ஆர். அரவிந்த் :

எனக்கு அப்போ ஏழு வயது. குடும்பத்தோடு காரில் திருப்பதிக்குச் சென்றிருந்தோம். கோவிலுக்கெல்லாம் போய் விட்டு ஊருக்குத் திரும்பக் கிளம்பிய போது காரில் பெட்ரோல் தீர்ந்து போச்சு. அப்பா, அம்மாவெல்லாம் இறங்கிக் கொண்டு டிரைவரை மட்டும் பெட்ரோல் போட்டு வரச் சொன்னார்கள். என்னை இறங்கச் சொன்ன போது, 'முடியாது' என்று அடம்பிடித்தேன். அதனால், டிரைவர் மாமா, என்னையும் பெட்ரோல் பங்கிற்குக் கூட்டிப் போனார். நான், அவர் பக்கத்தில் உட்கார்ந்து இருந்தேன்! பெட்ரோல் போடும் இடம் வந்ததும், டிரைவர் இறங்கிச் சென்று, பெட்ரோல் போட்டார். பிறகு பணம் கட்டும் இடத்திற்குச் சென்றார். அப்போ நான் என்ன செய்தேன் தெரியுமா? டிரைவர் சீட்டில் உட்கார்ந்து கொண்டு சாவியை முடுக்கினேன். அவ்வளவுதான்! கார் கிளம்பி விட்டது! தெரியாத்தனமாக காலால்



* ஓடிப் போய் கண்ணிமைக்கிற நேரத்துல பாப்பாவை இழுத்துக்கிட்டு வந்துட்டேன்
- எஸ். விஷ்ணு.

கிளட்சை வேறு அழுத்தி விட்டேன். வண்டி கிளம்பி விடவே, பயந்து போய் வலது காலால் இன்னொரு பக்கத்தில் இருந்த ஸ்பீட் ரெய்ஸரை அழுத்த... அவ்வளவுதான்! ஒரு குலுக்கு... உடனே வண்டி பறக்க ஆரம்பிச்சிட்டுது! டிரைவரும் மற்றவர்களும் பயந்து போய் பின்னால் ஓடி வர... எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சடாரென்று ஞாபகம் வந்தது. டிரைவர் வண்டியை நிறுத்துவதற்கு 'பிரேக்' கட்டையை அழுத்தியதைப் பார்த்திருந்தேன். அதே போல் ஒரே அழுத்து! பலத்த

பெருமைப்பட்டேன்!

ஒவ்வொருவருக்கும் பெருமைப் படக்கூடிய வாய்ப்புகள் கண்டிப் பாகக் கிடைத்திருக்கும். அவை சுவை யாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகமே இருக்காது. அதிலும் சிறுவர்களாக இருந்தால் இன்னும் சுவையாக இருக்கும். அந்த மாதிரி தாங்கள் பெருமைப்பட நேர்ந்த சில நிகழ்ச்சிகளை உங்களோடு சில தம்பி தங்கைகள் பகிர்ந்து கொள்கிறார்கள்.



* டீச்சரே அடிக்கடி என்கிட்டே வந்து அன்பா பேசுவாங்க. யாருக்கு இந்தப் பெருமை கிடைக்கும்?
- இர. சிவதர அதியமான்.



* பொறுப் புள்ள பொண்ணுன்னு அப்பா பாராட்டினார்
- ஜே. மீனா.



* சாவியை முடுக்கி னேன். கார் கிளம்பிட்டது!
- ஆர். அரவிந்த்.

இர. சிவதர அதியமான். :

நான், எல்.கே.ஜி. படிக்கிறேன். ஸ்கூல்ல இங்கிலீஷ் மீடியம்னாலும், தமிழ்தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும். குறிப்பா திருக்குறள். குட்டி குட்டியா இருக்கறதுனால படிக்கறது ரொம்ப சுலபம்! எங்கம்மா தினமும் திருக்குறள் சொல்லிக் குடுப்பாங்க. கொஞ்சம் கொஞ்சமா அப்படிக் கத்துண்டு இப்ப எனக்கு முன்னூறு திருக்குறள் மனப் பாடமா தெரியும். எங்க, எப்படிக் கேட் டாலும் டக்டக்குனு சொல்லிடுவேன். எங்க டீச்சர், கரஸ்பாண்டன்ட், அப்புறம் நிறைய நிறைய படிச்ச பெரியவங் களெல்லாம் என்னை உட்கார வைத்து, திருக்குறளில் கேள்வி கேட்பாங்க. நான் எல்லாத்தையும் கரெக்டா சொல்லிடு வேன். எல்லாரும் என்னை ரொம்பப் பாராட்டுவாங்க! அதுதான் எனக்கு ரொம்ப சந்தோஷமான விஷயம்! எங்க டீச்சர்கிட்ட எல்லாப் பசங்களும் பயந்து பயந்துதான் பேசுவாங்க. ஆனா, என் னோட திருக்குறள் ஒப்பிக்கிற திறமை யால எங்க டீச்சரே அடிக்கடி என்கிட்ட வந்து அன்பா பேசுவாங்க. யாருக்கு இந்தப் பெருமை கிடைக்கும்? அதுக் காக நான் கர்வப்படலே.

ஜே. மீனா :

எங்கப்பா எப்போதாவது எனக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்ன்னு ஏதா வது வாங்கிச் சாப்பிடுவதற்காகத் தரு வார். ஆனா எனக்குக் கடையில் விற்கும் மிட்டாய்களையெல்லாம் சாப்பிடப் பிடிக்காது. அதனால அப்பா தரும் காசை, எங்கள் பள்ளி சிறு சேமிப்பு வங்கியில் அப்பப்போ போட்டு வைப் பேன். ஒரு சமயம் எங்கப்பா வேலை

சப்தத்துடன் வண்டி நின்று விட்டது! நல்லவேளை... விபரீதமாக ஒன்றும் ஆகவில்லை!

அத்தனை தூரம், மூச்சு வாங்க ஓடி வந்த டிரைவர், ரொம்ப பயந்து போய் விட்டார்! நான் அவரிடம் மன்னிப்புக் கேட்டேன். அவர், ''எப்படி நிறுத்தினே?'' என்றார்.

''நான்தான், நீங்க ஓட்டும் போது கவனமா பார்த்துக்கிட்டே வந்தேனே!'' என்றேன்.

அவர் என்னைத் தட்டிக் கொடுத்து 'க்ரேட்' என்றார்! எனக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது!

ஸ்ரீதேவி ஸ்ரீனிவாசன் :

எங்கப்பாவுக்கு ஒரு மருந்துக் கடை இருக்கு. ஆனால் அவரால் முழு நேரமும் கடையிலேயே உட்கார்ந்திருக்க முடியாது. அடிக்கடி வெளியில போகும்படி இருக்கும். அந்த மாதிரி சமயத்துல கடையைப் பார்த்துக்க ஒரு ஆளை நியமிக்க அவருக்கு விருப்பம் இல்லை. அதனால அவரால் முடியாத நேரங்களில் நான் போய் கடையில் உட்கார ஆரம்பித்தேன். கொஞ்சம் கொஞ்சமாக மருந்துகள் பற்றிய எல்லாத் தகவல்களும் எனக்குத் தெரியவந்தது. இப்போ, எங்க கடையில் இருக்கற அத்தனை மருந்துகளும் எனக்கு அத்துப்படி. அகர வரிசைப்படி, மருந்துகளை அடுக்கி, யார், என்ன மருந்து, மாத்திரை கேட்டாலும் நானே எடுத்துத் தருவேன். தூக்க மாத்திரை போன்றவைகளை டாக்டர் சிபாரிசு இருந்தாலொழிய யார் கேட்டாலும் கொடுக்கவே மாட்டேன். டாக்டர்கள், எத்தனை கிறுக்கலாக ப்ரிஸ்கிருப்ஷன் எழுதியிருந்தாலும் எனக்குப் புரிஞ்சிடும். கடையில் மருந்துகள் ஏதாவது காலியாகி விட்டால் நானே கம்பெனிக்கு டெலிபோன் பண்ணி ஆர்டர் கொடுத்து விடுவேன்! ஆரம்பத்தில், 'நிக்கனூண்டு' பொண்ணுக்கு என்ன தெரியும் என்று ஏளனமா எண்ணின கஸ்டமர்கள், இன்று கடைக்கு வரும் போது நான் இல்லாவிட்டால் 'எங்கே சார் உங்க பொண்ணு?'ன்னுதான் அப்பாவிடம் முதலில் கேட்கிறார்களாம்!


இதனால் என் பள்ளிப் படிப்பு துளி கூட பாதிக்கவில்லை. வகுப்பிலும் கூட எப்போதும் நான்தான் முதல் ரேங்க்! என் படிப்புக்கும், இடைஞ்சல் இல்லாமல், அதே சமயம் அப்பாவுக்கும் தொழிலில் உதவ முடிகிறதே என்பதை நினைத்து நான் ரொம்பப் பெருமைப்படறேன்!

யோகேஷ் :

எனக்கு எதையாவது சில்மிஷம் பண்ணிட்டே இருக்கறதுன்னா ரொம்ப இஷ்டம். வீட்டுல சும்மாவே உட்கார மாட்டேன். எதையாவது 'நோண்டிண்டே' இருப்பேன்! அப்பாகிட்டே அதுக்காக அப்பப்ப 'டோஸ்' வாங்க



''பானையைத் தலைகீழா போட்டால் என்னடா ஆகும்...?''
''பம்பரமாகும். Pot ஐத் திருப்பிப் போட்டால் top ஆயிடுமே...!''
– சீர்காழி வி. ரேவதி



''இந்த வருஷம் சுதந்திர தினத்தன்னிக்கு நமக்கு ஸ்கூல்ல லீவு விட மாட்டாங்கடா. அன்னிக்குத்தான் ஞாயிற்றுக்கிழமையாச்சே!''
– டி. எஸ். திரவியம், தேனி.



''அப்பா : நீங்க மறந்து வைச்சிட்ட கண்ணாடி கிடைச்சிடுச்சு...!''

''நான் எப்படா கண்ணாடி போட்டுக்கிட்டேன்?''

- ஆவூர் ஜெ. குத்ராஸ்



''போலீஸ்காரர்களுக்குப் பிடித்த மொழி எது?''

'' 'லத்தி'ன் சார்!''

- ஏ. ஆர். கலை, சிதம்பரம்.

றதும் உண்டு! அப்படித்தான் ஒருநாள் டீ.வி.யை என்னமோ குடைஞ்சிட்டிருந்தேன்! அவ்ளோதான்! டீவில படம் வரவே இல்லை. பயந்து போயிட்டேன்! நைஸா அப்படியே ஆஃப் பண்ணிட்டு நகர்ந்துட்டேன். சாயங்காலம் அப்பா ஏதோ கார்ட்டூன் கேஸட் வாங்கிட்டு வந்து, வி.ஸி.ஆரில் போட்டு 'ஆன்' பண்ணினார்! நான் பயந்துண்டே பார்த்துக் கொண்டிருந்தேன்! டீவியாவது, ஓர்க் ஆகறதாவது? பாவம் அப்பா! என்னென்னமோ பண்ணிப் பார்த்தார். ம்ஹூம்! அலுத்துக்கிட்டே மெக்கானிக்கைக் கூட்டி வர வெளியே போனார்! நான் சும்மா இருப்பேனா? மறுபடியும் 'நோண்ட' ஆரம்பிச்சேன். என்ன பண்ணேன்னு எனக்கே தெரியல்லே! திடீர்னு டீ.வி. சரியாகி நல்லா ஓட ஆரம்பிச்சுடுத்து! அப்பா வந்து பார்த்து, அசந்து போயிட்டார்! 'என்னடா பண்ணே?'ன்னு கேட்டார்! எனக்கென்ன தெரியும்? பேசாம சிரிச்சுட்டு போயிட்டேன். ''பின்னாடி பெரிய இஞ்சினியரா வருவே''ன்னு அந்த மெக்கானிக் கூடப் பாராட்டிட்டுப் போனார்! எனக்கு சிரிப்பா வந்தாலும் உள்ளுக்குள்ள பெருமையாவும் இருந்தது!

எஸ். விஷ்ணு :

நான்தான் விஷ்ணு. அஞ்சாங் கிளாஸ் படிக்கறேன். போன வருஷம், அரையாண்டுப் பரீட்சை முடிஞ்சி லீவ் விட்ட போது, மைலாப்பூர்லே எங்க பாட்டி வீட்டுக்குப் போயிருந்தேன். மைலாப்பூர் தெருவெல்லாம் குட்டி குட்டியா இருக்கும்! 'அத்தனூண்டு' ரோடுல கார், லாரியெல்லாம் வேகமாப் போகும்! ரொம்பப் பயமா இருக்கும்! ஆனா அதுக்காக விளையாடாமலே இருக்க முடியுமா? நான், என்னோட ஃபிரெண்ட்ஸ் கூட கிரிக்கெட் விளையாடிக்கிட்டிருந்தேன். அப்போதான் ஒரு ஆட்டோ, ரொம்ப ஸ்பீடா அந்த குட்டி தெருவுக்குள்ள வந்தது! பசங்க எல்லாரும் ஓரமா போயிட்டாங்க. ஆனா ஒரு குட்டிப் பாப்பா மட்டும் தொபுக்குன்னு விழுந்துடுத்து. ஆட்டோகிட்ட வந்துடுச்சி. ஒரே நிமிஷம்... நான் ஓடிப் போய் கண்ணிமைக்கிற நேரத்துல அந்தப் பாப்பாவை இழுத்துண்டு வந்துட்டேன். கை, கால்ல எல்லாம் நல்ல காயம்! அதனால என்ன? எங்கப்பா, அம்மா, பாட்டி, அந்தக் குழந்தையோட பேரண்ட்ஸ் எல்லாரும், என்னாலதான் குழந்தை பிழைச்சுது ன்னு என்னை ரொம்பப் பாராட்டினாங்க. 'காட்பரீஸ்' எல்லாம் வாங்கிக் கொடுத்தாங்க. எனக்கு எவ்ளோ பெருமை தெரியுமா?

பேட்டி : ரமாமணி பார்த்தசாரதி



க்விஸ் க்விஸ் க்விஸ், வாண்டுமாமா, பக். 160, ரூ. 40/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017.

பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும், கூர்மையாக்கிக் கொள்ளவும் உதவக் கூடிய வகையில் 68 தலைப்புகளில் வினாக்கள் எழுப்பப்பட்டு, அதற்கான பதில்களும் படங்களுடன் தரப்பட்டுள்ளன. வினாடி வினா நடத்துவோருக்கும், பொது அறிவுக்காக ஏங்குவோருக்கும் பெரிய புதையல்.

அந்தக் குரல், எஸ்.வி. நாதன், பக். 100, ரூ. 13/- தமிழ்ப் புத்தகாலயம், 58, டி.பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

கடந்த தலைமுறைச் சிறுவர்களுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியர் மீண்டும் குழந்தைகளுக்காக எழுதத் தொடங்கி, தனது (11 சிறுகதைகள் + 2 நாடகங்களை) இந்தத் தொகுப்பில் தந்துள்ளார். வித்தியாசமான கதைக் களங்கள், நூலுக்குச் சுவையூட்டுகின்றன. உ.ம். ரயிலில் தான் பயணம் செய்ய ரிசர்வ் செய்த டிக்கெட்டை நண்பனுக்குக் கொடுத்து பயணப்பட வைத்து, டிக்கெட் பரிசோதகரிடம் குட்டு வெளிப்பட்டு நண்பன் தண்டனை பெறும் 'தப்பவில்லை' கதை. பயனுள்ள தொகுப்பு.

வங்கிகளில் சேமித்து வளமான தொழில் செய்வது எப்படி? எம். இராமச்சந்திரன், பக். 58, ரூ. 12/- வசந்த் பதிப்பகம், 19, கண்ணதாசன் தெரு, முத்துக் குமாரசாமி நகர், S.S. காலனி, மதுரை - 625 016.

இந்தப் புதுமையான பயன்தரும் புத்தகத்தின் நோக்கம் வங்கிகளால் பயன் பெறுவது எப்படி என்பதே. இந்த நோக்கத்தை இந்த நூல் நன்கு பூர்த்தி செய்கிறது. வங்கிகள் என்பவை என்ன, அவை சமுதாயத்திற்கு எந்த விதங்களில் பயன் படுகின்றன என்பவை, மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. எல்லோருக்கும் பயன்படும்படி எழுதப்பட்டுள்ளதை எத்தனை முறை வேண்டுமானாலும் பாராட்டலாம்.

சிலந்தியும் வண்ணத்துப் பூச்சியும், வேணு சீனுவாசன், பக். 96, ரூ. 12/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017.

கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரின் வித்தியாசமான 15 சிறுகதைகளின் தொகுப்பு. பெரும்பாலான கதைகள் காட்டு விலங்குகளின் வாழ்க்கையைச் சுற்றியே நடக்கின்றன. கோகுலத்தில் வெளிவந்த இரு கதைகளும் உள்ளன. வித்தியாசமான சூழ்நிலைக் கதைக் களங்கள், புதுமையாக அமைந்து சுவையூட்டுகின்றன. ஆசிரியருக்குப் பெருமை சேர்க்கும் நூல். கண்கவர் படங்கள் ஒரு பிளஸ் பாயிண்ட்.

பாரதப் பண்டிகைகள், சாந்தா மூர்த்தி, பக். 160, ரூ. 25/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017.

பாரதநாடு பல்வேறு மதங்களையும் வித்தியாசமான கலாசாரங்களையும் கொண்ட நாடு. இங்கு கொண்டாடப்படும் பண்டிகைகள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றன. இவற்றையெல்லாம் தொகுத்து ஒரே நூலாக வந்தால் ஒருவரை ஒருவர் அறியவும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு உதவியாகவும் இருக்கும். இந்த ஏக்கத்தை இந்த உயரிய நூல் தீர்த்து வைத்துள்ளது. இந்த நாட்டில் கொண்டாடப்படும் பல வேறு மதங்களின் இருபது பண்டிகைகளைப் பற்றி மிகத் தெளிவாக ஆசிரியை எழுதியிருக்கிறார். நாம் அறியாத பிஹு, லோஹ்ரி, போன்ற பண்டிகைகளின் விவரங்கள் அதிசயிக்க வைக்கின்றன. வினுவின் ஓவியங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன. பரிசளிக்க முற்றிலும் ஏற்ற நூல்.

மதிப்புரைக்கு இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். அறிவியல், பொது நூல்களும் சிறுவர் நூல்களும் மட்டுமே மதிப்புரை செய்யப்படும். கட்டணம் இல்லை. அனுப்ப வேண்டிய முகவரி ஆசிரியர் கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

எதனுடைய கால்? - போட்டி முடிவு

ஏராளமானவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டிருந்தபோதிலும் ஒருவர் கூட சரியான விடையை எழுதவில்லை! அதனால் ஒரு தவறு செய்தவருக்கு பாராட்டுப் பரிசும், இரண்டு தவறு செய்தவர்களில் குலுக்கல் முறையில் பதினைந்து ஆறுதல் பரிசும் தர முடிவு செய்யப்பட்டது.

சரியான விடை : 1. குதிரை அல்லது கழுதை, 2. வாத்து, 3. பன்றி, 4. பூனை, 5. கோழி, 6. பல்லி, 7. ஆமை.

ஒரு தவறு செய்து பாராட்டுப் பரிசாக ரூ 20 பரிசு பெறுபவர் :

ஏ. முத்துகிருஷ்ணன், துறையூர்

(ஒரு தவறு செய்தவர் இவர் ஒருவர் மட்டுமே!)

இரண்டு தவறு செய்து ஆறுதல் பரிசாக ஐந்து ரூபாய் பெறுபவர்கள் (குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டவர்கள்)

1. T. **சுரேஷ், ஈரோடு, 2. ஈ. எஸ். ஸ்ரீஜித், கொங்க நாயக்கன் பாளையம், 3. நா. குமரதரன், புதுவை - 5, 4. ஆர். கருணாகரன், நைனாங்குளம், 5.** B. **பிரேம், எண்ணூர், சென்னை - 57, 6. ஜெ. ரேணுகா, வேலூர் - 6, 7.** P. **மீரா, செங்கல்பட்டு, 8. இரா. வேல்முருகன், பெருமுளை, 9.** P.T. **சரவணன், ஈரோடு - 10, 10. சி. ஜெயஸ்ரீ, வாலாஜாபேட்டை, 11. எஸ். பாஸ்கரன், குருமந்தாங்கல், 12. தே. அருள், குத்தாலம், 13. மு. அப்துல் கபூர், உப்பிலிபாளையம், 14.** B. **பாலகுருநாதன், கோவை - 12, 15.** J. **ஜெரின், நாசரத்.**

பரிசு பெற்றவர்களுக்கு கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள்.

போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

வாள் புராணம்





புராண, இதிகாச, இலக்கிய, வரலாற்றுக் காலங்களில் இருந்தே, அரசர்களின் வாழ்க்கையில் வாள் முக்கிய பங்கு வகித்து வந்துள்ளது. அரசகுமாரர்கள் பெற வேண்டிய முக்கிய பயிற்சிகளுள் வாள் பயிற்சி சிறப்பான இடம் பெற்று வந்திருக்கிறது. வாளால் பகைவர்களைக் கொல்வது, வீரத்தின் செயலாகப் பெருமையுடன் பேசப்பட்டு வந்துள்ளது. நமது நாட்டில் மட்டுமல்ல, உலக நாடுகள் எல்லாவற்றிலும் 'வாள்' வீரர்களின் பெருமைக்குரிய சின்னமாகவே இருந்து வந்துள்ளது.

ஒவ்வொரு வகையான வாளுக்கும் ஒரு காரணப் பெயர் இருந்திருக்கிறது. திகிரி வாள் என்பதும், சக்ரவாள் என்பதும் ஒரு கூட்டத்தையே தடுத்து நிறுத்தும் சக்தி படைத்த வாள் வகையாகும். சுருள் வாள் என்பது முறுக்கேறிய கயிற்றைப் போன்ற அமைப்புடையது. இதை இலேசாகத் குத்தி, ஒரு சுற்றுச் சுற்றி, வெளியே இழுத்தால், மனித உடலுக்குள் உள்ள அத்தனை குடல்களும் வெளியே வந்து விடுமாம்!

விஸ்வாமித்ர முனிவர், கௌசிக மன்னராக இருந்த காலத்தில் அவர் பயன்படுத்தி எதிரிகளைத் திணறடித்த பெருமைமிக்க வாளின் பெயர் 'நந்தன்'. யாதவர்களின் மன்னரான கிருஷ்ண பகவான் வைத்திருந்த வாளின் பெயரும் இதுவேதான். ராமபிரானிடம் இருந்த சக்தி மிக்க வாளின் பெயர் 'அஸிரத்தன்'.

தருமன் என்ற தர்மராஜரின் தலைக்குமேல் சிம்மாசனத்தில் எப்பொழுதும் ஒரு வாள் தொங்கிக் கொண்டிருக்குமாம். அந்தரத்தில் தரும





தேவதையின் கருவியாகத் தொங்கிய இந்த வாளின் பெயர் 'தர்ம சூரி'.

மராட்டிய மாமன்னர் சத்ரபதி சிவாஜியின் வீரவாளுக்குப் பெயர் 'பவானி'. பூனாவின் சிவனேரி ஆலயத்தில் இன்றைக்கும் இது வணங்கப்பட்டு வருகிறது. ஆறு பேர் சேர்ந்து தூக்கினாலும் இது கனக்கவே செய்கிறது! இதை ஒரே கையால் தூக்கி வீசி, சண்டை போட்டார்கள் என்றால் நம்மால் வியக்காது இருக்க முடியவில்லை.

ஔரங்கசீப்பிடம் இருந்த சிறப்பான வாளின் பெயர் ஆலம்கீர். இது அவரது தந்தையார் ஷாஜஹான் அவருக்குப் பரிசளித்தது.

போர்க் களத்தில் தனது கணவன் காட்டிய வீரத்தைப் பாராட்டி பேரரசி நூர்ஜஹான், ஷாஜஹானுக்குப் பரிசாக அளித்த அன்பு வாளின் பெயர் 'வர்தல்'. இது நவரத்தினக் கற்கள் பதிக்கப் பெற்று வேலைப்பாடுமிக்கது.

வீரர்களின் வீரத்தைப் பாராட்டி வாள்களைப் பரிசாக அளிப்பது சரித்திர கால மரபு. தலைமைப் படைத் தளபதியாக அமர்த்தப்படுவோருக்கு, அரசரே தன் கையால் வாளைக் கொடுத்து பெருமைப்படுத்துவது வழக்கம். அதே போல் தளபதிகளும், தாங்கள், அரசரின் பணியிலிருந்து விலக நேர்ந்தால், மன்னர் கொடுத்த வாளைத் திருப்பியளிப்பது வழக்கம்.

போரிடும் போது வெள்ளைக் கொடி அனுப்பினால், அமைதியை விரும்புகிறார் என்று தெரிந்து கொள்வது போலவே, ஒரு மன்னர் தனது பட்டத்து வாளை அனுப்பி வைத்தால், அவர் சண்டையை நிறுத்திவிட்டு சரணா கதி அடைய விரும்புகிறார் என்பது பொருள்.

மன்னர், அதிகாரிகளின் வாள்களைத் தயாரிக்க கை தேர்ந்த கலைஞர்கள் இருந்தனர். வாள்கள் இரும்பினாலேயே செய்யப்பட்டன என்றாலும், அவற்றின் பிடிகள் அவற்றை அணியப் போகிறவர்களின் பதவிகளுக்கு ஏற்ப தந்தம், வெள்ளி, தங்கம் போன்றவைகளில் செய்யப்பட்டு, விலை மிக்க இரத்தினக் கற்கள் பதிக்கப் பெற்றன. பிடிகளின் வேலைப்பாடுகளைக் கொண்டே இவைகளுக்கு புலிப்பிடி வாள், சிங்கப்பிடி வாள், பாம்புப் பிடி வாள் என்றும் பெயர்கள் இருந்தன. சாதாரண காலங்களில் இவை, இதற்கான கூடுகளில் வைக்கப்பட்டு இடுப்பில் தொங்க விடப்பட்டன. அணி வகுப்பு, அரசு மரியாதை போன்ற சந்தர்ப் பங்களில் இவை வெளியே எடுக்கப்பட்டு, கைகளில் நிமிர்த்திப் பிடிக்கப்பட்டன. இது மிகப் பெரிய மரியாதை. தலைமுறை தலைமுறையாகப் போர் வீரர்களாக இருப்பவர்கள், தங்கள் மூதாதையரின் வாள்களை தெய்வங்களுடன் வைத்து வணங்கி வந்தனர்.

துப்பாக்கி கண்டு பிடிக்கப்பட்ட பிறகு, வாள்களின் உபயோகம் குறைந்து போயிற்று. இன்று பெரிய பெரிய பட்டாக் கத்திகளை வைத்துக் கொள்ள வேண்டுமென்றால் அதற்குத் தனி அனுமதி வைத்திருக்க வேண்டும். வாளின் பெருமை மங்கி விட்டாலும் பழமையைப் போற்றுவது மனித இயல் பல்லவா? அரசியல் தொண்டர்கள் தங்கள் அன்புத் தலைவர்களுக்கு வெள்ளிவாள் தந்து சிறப்புச் செய்வதையும் நாம் இன்றும் காணலாமே.

– ஜப்பார்

என்ன பலகாரம்? போட்டி!

பலகாரம் என்றால் விரும்பாதவர்கள் இருக்கவே மாட்டார்கள். அதிலும் உங்களுக்குக் கேட்கவா வேண்டும்! கீழே உள்ள கட்டத்தில் மொத்தம் 32 எழுத்துக்கள் உள்ளன. இதில் உங்களுக்குப் பிடித்தமான, நீங்கள் விரும்பும் ஒன்பது பலகாரங்களின் பெயர்கள் ஒளிந்துள்ளன! கீழே இந்தப் பலகாரங்களுக்கான குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் பலகாரங்களின் பெயர்களைக் கண்டுபிடித்து, குறிப்புகளுக்கு எதிரே எழுதி, கூப்பனையும் பூர்த்தி செய்து ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டியது தான். பரிசு உண்டு. ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. சரியான விடை எழுதி, பரிசு பெறாதவர்களின் பெயரும் கூட இயன்றவரை வெளியிடப்படும்.

ங்	பா	மு	ச	தி	ம்	ப்	பூ
ர	அ	க	ர	து	று	கு	வா
அ	ரி	க்	ல்	வ	ல்	அ	ச
ஷா	டை	பொ	ல்	ம்	கு	ப	லா

குறிப்பு	விடையை இங்கே எழுதவும்
★ கல்கத்தாவின் பெயர் போன இனிப்பு வகை	....
★ அனுமாருக்கு இதில் மாலை போடுவார்கள்	....
★ அட! இந்தப் பெயரில் ஓர் ஊர் கூட இருக்கிறது!	....
★ திருப்புகழில் முதலில் இதுதான்	....
★ திருநெல்வேலி என்றால் இதுதான் நினைவுக்கு வரும்!	....
★ பெயரில் ரசம் உள்ள இனிப்பு வகை பலகாரம் இதுதான்!	....
★ பல் இல்லாதவர்களால் இதைக் கடிக்க முடியாது!	....
★ அட! முகலாய மன்னர்களுக்கும் இதே பெயர்தான்!	....
★ பலகாரமே பண்டிகையின் பெயர்தான்!	....

என்ன பலகாரம்? போட்டி

பெயர் : ....

வயது : ....

முகவரி : ....

....

பின்கோடு : ....

முடிவு தேதி : 15.5.93

காக்காடா நீ!

அன்று சனிக்கிழமை. இரவு நேரம். டியூஷன் முடிந்து, தன் சைக்கிளில் வேகமாக வீடுதிரும்பிக் கொண்டிருந்தான் வேணு திடீரென்று -

''டேய் வாண்டு, ஒனக்கு எவ்வளவு தைரியம்?

லைட் இல்லாத சைக்கிள்; அதுலே ஒன்வே டிராபிக்லே சவாரி வேறேயா? வாடா இப்படி'' - காவலர் ஒருவரது அதட்டல் கேட்டுக் கைகால்கள் உதறல் எடுக்க அருகில் சென்றான் வேணு. ஏற்கெனவே அவர் அருகில் பல சைக்கிள்காரர்கள்.

''எல்லாரும் அவங்கவங்க வண்டிகளை உருட்டிக் கிட்டு ஸ்டேஷனுக்கு நடங்க. சப்-இன்ஸ்பெக்டர் கிட்டே உங்க அட்ரஸ்களைக் கொடுத்துட்டுப் போகணும். நாளைக்கிக் கோர்ட் சம்மன் வந்ததும் அபராதம் கட்ட ரெடியா இருங்க'' - போலீஸ்காரர் கூறியது அவனது அடி வயிற்றில் புளியைக் கரைத்தது. காவலர்கள் முன்னும் பின்னும் வர, ஸ்டேஷன் நோக்கிச் சென்ற லைட் இல்லாச் சைக்கிள்களின் உருட்டல் அணிவகுப்பில் வேணுவும் வேதனையோடு சென்றான்.

'சார்பு ஆய்வாளர் - சட்டம் ஒழுங்கு' என்ற பெயர்ப் பலகையின் கீழ் அமைந்த இருக்கையில், போலீஸ் சீருடையில் அமர்ந்திருந்த அந்தக் கம்பீர வடிவத்தை வேணுவால் நன்றாகப் பார்க்க முடிந்தது. அவரது முகத்தைக் கூர்ந்து கவனித்தவனின் நினைவோட்டத்தில் ஏதோ ஒரு சிறு தடுமாற்றம் நிகழ்வது போன்ற உணர்வு!

'இவரை... இவரை.... எங்கோ பார்த்தது போலிருக்கிறதே!' - தனக்குத் தானே கேட்டுக் கொண்டான் வேணு. ஆனால் நினைவுக்குத்தான் வர மறுத்தது.

வரிசையில் நின்றவர்களை ஒவ்வொருவராக அழைத்து விசாரித்து முகவரியை எழுதிக் கொண்டிருந்த அந்த சப்-இன்ஸ்பெக்டர், தன் தலையிலிருந்த தொப்பியை எடுத்து மேஜையில் வைத்து விட்டு கைக்குட்டையால் முகத்தைத் துடைக்க முற்பட்டார். அந்நிலையில் அவரைப் பார்த்த வேணுவுக்குப் 'பளிச்' சென்று ஞாபகத்திற்கு வந்து விட்டது. ஒரு மாதத்திற்கு முன் நிகழ்ந்த அந்தச் சம்பவங்கள் கோவையாக அவனது மனக்கண் முன்னால் தோன்றி மலரலாயின.

அன்றொரு நாள் மாலை, பள்ளி முடிந்ததும் வேணுவும் அவன் நண்பன் பாலாஜியும் ஒரே சைக்கிளில் ஏறி வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். சைக்கிள், மார்க்கெட் வீதியைக் கிராஸ் பண்ணிக் கடக்கும் நேரத்தில் கேரியரில் அமர்ந்திருந்த பாலாஜி, ''வேணு வேணு! ஒரு நிமிஷம் நில்லுப்பா!'' என்று கூவினான். என்னவோ ஏதோவென்று பதறிப் போன வேணு பிரேக் போட்டு வேகத்தைக் குறைத்தான். அதற்குள் கீழே குதித்த பாலாஜி காய்கறி மார்க்கெட்டிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த ஒரு உயரமான ஆளை நோக்கி வேகமாக ஓடினான். விஷயம் புரியாமல் வேணுவும் பின் தொடர்ந்தான்.

''ஹலோ பாலாஜியா? சௌக்கியமா? நல்லாப் படிக்கிறியா? என்ன இந்தப் பக்கம்?'' என்று பாசத்தோடு விசாரித்தார். அந்த உயரமான ஆள். அவரைக் கைகூப்பி வணங்கிய பாலாஜி, ''உங்க ஆசியாலே சௌக்கியமா இருக்கேன் சார். பள்ளிக் கூடம்

குருசீனிவாசன்

போயிட்டு வீடுதிரும்புறோம். உங்களைப் பார்த்ததும் ஓடி வந்தேன்'' என்று மூச்சிறைக்கச் சொல்லி விட்டுத் தன் அருகில் வந்து நின்ற வேணுவை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

''இவன் என்னோட நெருங்கிய நண்பன். பக்கத்து வீடு. கிளாஸ் மேட்டும் கூட; பெயர் வேணுகோபால்.''

''அப்படியா? வெரிகுட்; நல்லாப் படிங்க'' என்று அன்பொழுகக் கூறினார்.

உடனே பாலாஜி, ''சார், ரெண்டு பைகளைத் தூக்க முடியாமே தூக்கிட்டு



நிக்கிறீங்களே! ஒண்ணை என் கிட்டே குடுங்க; நான் உங்க வீட்டு வரைக்கும் கொண்டு வந்து கொடுத்துட்டுப் போறேன்'' என்று கூறியபடி அவரது இடது கையிலிருந்து பையை வாங்குவதற்கு நெருங்கினான். ஆனால் அவரோ கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு, ''நோ நோ; வேண்டாம் பாலாஜி! பக்கத்து மெடிக்கல் ஷாப் முன்னே என் மோட்டார் சைக்கிள் நிக்குது. நான் போயிடுறேன்'' என்று மறுத்தார்.

பாலாஜி விடுவதாக இல்லை. பறிக்காத குறையாய் அவர் கையிலிருந்த பையை வலுவில் சென்று வாங்கிக் கொண்டு, ''வாங்க சார், வண்டி வரைக்கு மாவது நான் கொண்டு வந்து




தருகிறேன்'' என்று வம்பு செய்தான். மறுக்க மாட்டாத அவர் முன்னே நடந்தார்.

பாலாஜியின் நடவடிக்கைகளை அமைதியாகக் கண்காணித்துக் கொண்டிருந்த வேணுவுக்கு, அவன் கடைசியாகச் செய்தது அறவே பிடிக்கவில்லை. என்ன நினைத்தானோ, பாலாஜியைப் பற்றியே கவலைப் படாதவனாய்த் தான் மட்டும் சைக்கிளில் ஏறி வீடு நோக்கிப் பறந்தான்.

மறுநாள் காலை வேணு, பாலாஜியைப் பார்த்த போது, முதல் நாள் மார்க்கெட்டில் சந்தித்த நபரைப் பற்றி விசாரித்தான்.

பாலாஜி என்றைக்கோ ஒரு நாள் தன் பாட்டிக்கு ஐம்பது ரூபாயை மணியார்டர் செய்யப் போஸ்டாபீஸ் போயிருந்தானாம். மணியார்டர் பாரத்தை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டு, தன் அப்பா கொடுத்தனுப்பிய ரூபாயையும் முகவரியையும் அங்கிருந்த ஒவ்வொருத்தர் கிட்டேயும் நீட்டி நீட்டிப் பாரத்தைப் பூர்த்தி செய்து தருமாறு கெஞ்சினானாம். எவருமே அவனை ஏறெடுத்துப் பார்க்கவில்லையாம்! அப்போ ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த அந்த 'மார்க்கெட் மனிதர்' பாலாஜியை அழைத்துப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு, மணியார்டர் பாரத்தைப் பூர்த்தி செய்வது எப்படி என்ற விவரத்தை வாத்தியார் விவரிக்கிற மாதிரி படிப்படியாகச் சொல்லிக் கொடுத்தாராம். அதற்கப்புறம் அவன் கையில் பேனாவைக் கொடுத்துத் தனது மேற் பார்வையில் அவன் கையாலேயே பாரத்தைப் 'ஃபில் அப்' செய்ய வைத்தாராம். அவனும் அப்படியே செய்து முடித்ததும், அந்த மனிதர் இவனது பெயர் மற்ற விவரங்களைக் கேட்டறிந்து, இவன் முதுகில் தட்டிக் கொடுத்து, 'சபாஷ்' சொல்லி விட்டுப் போனாராம்.

அதனாலேதான் நேற்று மார்க்கெட்டிலே அவரைப் பார்த்த உடனேயே அடையாளம் தெரிஞ்சிட்டு ஓடிப் போயி, அவர் வேணாமுன்னு சொல்லச்



கழுதை

அழுக்கு மூட்டை சுமக்கும்
அழுக்கு நெஞ்சில் இல்லை.
உழைக்கும் ஜீவன் கழுதை,
உதைக்கும் கால்கள் உண்டு.

கத்தும் சத்தம் போட்டு,
கனைப்ப தாகச் சொல்வோம்.
மெத்தை போல எண்ணி,
புழுதி மேட்டில் புரளும்.

துள்ளித் துள்ளித் திரியும்,
குதிரை போலத் தெரியும்.
வெள்ளை மூக்குக் கழுதை,
பொதி சுமக்கும் முதுகில்.

துணிவெ ளுக்கும் வண்ணான்,
தோழன் போல உதவி
பணிகள் செய்யும் இதனை
பழித்துப் பேச வேண்டாம்.

- சி. விநாயகமூர்த்தி

சொல்ல பையைப் பறிச்சி சுமந்துட்டுப் போயி, கைமாறு பண்ணினானாம்!

விவரங்களைப் புரிந்து கொண்ட வேணு, பாலாஜியைப் பார்த்து, ''அசல் காக்காடா நீ! மார்க்கெட்டிலே உன் செய்கைகளைப் பார்த்த பிறகு உன்னை நினைத்து வெக்கப்படறேன்'' என்றான். பாலாஜியின் முகம் அவமானத்தால் கருங்கிப் போயிற்று.

''காலத்தால் செய்த உதவி கடுகளவு ஆனாலும், அது கடலினும் பெரிதுன்னு படிச்சிருக்கோமே வேணு. அவர் யாரோ? நான் யாரோ? என்னிக்கோ ஒரே ஒரு தடவை பார்த்துப் பேசிய அவர் இன்னும் என்னோட பேரை மறக்காம வச்சிருக்கார் பாத்தியா? அப்படின்னா என்மேலே அவருக்கு எவ்வளவு பிரியம் - பாசம் இருக்கணும்? அப்படிப்பட்ட வரோட செருப்பைத் தூக்கக் கூட நான் தயங்க மாட்டேன் பா.''

அவன் இதைக் கூறி முடித்ததும், 'தூ'வென்று காறி உமிழ்ந்து விட்டுப் போன வேணு, அதற்குப் பிறகு பாலாஜியைத் தன் சைக்கிளில் ஏற்றுவதே இல்லை. அங்கே இங்கே என்று பார்க்க நேர்ந்தாலும் அவனை இளக்காரமாகப் பார்த்து ஏளனப் புன்னகை புரிந்து விட்டுப் போய் விடுவான்.

''மிஸ்டர் வேணு என்ற வேணு கோபால், கமான்! என்ன, ஏதோ சிந்தனையிலே உன்னையே மறந்து நின்னுட்டே போலிருக்கே?''

தான் பெயர் சொல்லி அழைக்கப் படுவதை உணர்ந்த வேணு, ஏதோ கனவுலகிலிருந்து மீண்டவனைப் போலத் தன்னைச் சுற்றிலும் பார்த்தான். தன்னுடன் சைக்கிள்களை உருட்டி வந்து, தனக்கு முன்னால் வரிசையில் நின்ற அத்தனை பேரும் அனுப்பப்பட்டு விட்டதை இப்போதுதான் புரிந்து கொள்ள முடிந்தது.

அன்றொருநாள் காய்கறி மார்க்கெட்டில் பாலாஜியால் அறிமுகம் செய்யப்பட்ட அந்த மனிதர் - சப்-இன்ஸ்

பெக்டர் உடையில் அமர்ந்திருந்த அந்தக் கம்பீர உருவம், தன் பெயர் சொல்லி அழைத்ததை அவனாலேயே நம்ப முடியவில்லை.

'ஒரே ஒரு நிமிடம் தானே அன்று மார்க்கெட் வாசலில் இவர் முன்னால் நின்றோம்? பிறகு எப்படி நம் முகத்தை நினைவு வைத்துப் பெயரையும் மறக்காமல் கூற முடிந்தது?' என்பன போன்ற எண்ணற்ற வினாக்கள் அவனுள் எழுந்து அவனைக் குழப்பின.

''கமான் வேணு, இப்படி முன்னாடி வா. உன்னோட பிரண்ட் பாலாஜி சௌக்கியமா?''

''ஆமாம் சார்!'' - அச்சம் அகலாதவனாகத் தலையை ஆட்டியபடி அவர் அருகில் சென்றான்.

''பயப்படாதே; தவறு செய்யறது மனித இயல்பு. திருத்திக்கிடுறது மனிதப் பண்பு! இது உன் முதல் தவறு; மன்னிக்கப்பட வேண்டியதுதான்.''

''இனிமே செய்ய மாட்டேன் சார்!''

''நீ நிச்சயம் செய்யமாட்டே; எனக்கு நல்லாத் தெரியும். ஏன்னா, நீ பாலாஜியின் நண்பனாச்சே!''

சப்-இன்ஸ்பெக்டரின் சொற்கள் ஒவ்வொன்றும் வேணுவின் இதயத்தில் படர்ந்து கிடந்த இறுமாப்பு என்னும் விஷவேர்களை அறுத்தெறியும் ஆயுதங்களாக ஊடுருவிப் பாய்ந்தன.

'பாலாஜியை எவ்வளவு கேவலமாக நினைத்து உதாசீனம் செய்தோம்! இன்று அவனால் அல்லவா நமக்கு மன்னிப்பும் மதிப்பும் கிடைத்தது? நான் வெறும் நார், என்னை மணம் பெறச் செய்தது அவனது நட்புதான்'' என்று எண்ணிய போது அவனை அறியாமலே கண்களில் நீர் துளிர்த்தது.

''சரி வேணு; நீ உன் சைக்கிளை எடுத்துக் கொண்டு போகலாம். பாலாஜியை நான் கேட்டதாச் சொல்லு.''


'ஆகட்டும்' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டிய வேணுவின் கரங்கள் அவரை நோக்கிக் குவிந்து வணங்கின.



''இன்னிக்கு பத்து பூனைகளைத் தின்னுட்டேன் வயிறு நிரம்பிடுச்சி.....!''


''என்னது பத்து பூனைகளையா...?''

''ஆமாம்ப்பா....! பத்து பிஸ் "CAT" களைச் சாப்பிட்டேனாக்கும்....!''




''என்ன இது வாயெல்லாம் சிவந்திருக்கு...! வெற்றிலை போட்டியா?''

''இல்லே தெரியாத்தனமா மருதாணியை மென்னு தின்னுட்டேன்...!''



''ஏம்ப்பா, கிண்டல் செய்ய நேரங்காலமே கிடையாதா...? கபடி விளையாடறப்போ கரடி கரடின்னா ராகம் பாடணும்!''



எங்கள் ஊரில் நடந்தது!

சயின்!

எங்க மாமா பையன் சிலம்பரசன் படுகட்டி. எல்.கே.ஜி. படிக்கிறான். முழுக்க ஆங்கிலத்தில் போதிக்கும்



கான்வென்ட். அவனுடைய ஆசிரியை ரேங்க் கார்டை அவனிடம் தந்து, 'சயின்' வாங்கி வா என்று கூறியிருக்கிறாள். அவனும் அதைக் கொண்டு போய் வீட்டில் கொடுத்திருக்கிறான். அதோடு நிற்கவில்லை, அவன் அம்மா கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை எடுத்து வைத்துக் கொண்டு ஆசிரியரிடம் கொடுத்திருக்கிறான். ஆசிரியை பாவம். எதுவும் புரியாது திகைத்து விவரம் கேட்க, ''நீங்கதானே மிஸ் செயின் கேட்டீங்க?'' என்று இவன் விளக்கியிருக்கிறான். சயினை, செயினாகப் பொருள் கொண்டு சிலம்பரசன் பண்ணின கலாட்டாவை எல்லோரும் ரசித்தோம்!

– என். ஸ்ரீதர்,
சென்னை – 19.

1800 குறள்!

எங்கள் ஊரில் உள்ள துவக்கப் பள்ளி ஒன்றில் பள்ளி மாணவர்களுக்கான விழா ஒன்று நடைபெற்றது. விழாவில் பல அறிஞர்கள் பங்குகொண்டு அருமையாகப் பேசினர். திருக்குறளின் அருமை பெருமைகளை எல்லோரும் விளக்கினர். குழந்தைகள் திருக்குறளைப் படிக்க வேண்டும் என்பதை மிக அழகாக உணர்த்தினர். அந்த நேரத்தில் சுய விளம்பரப் பிரியர் ஒருவர் மைக்கில் பேச வந்தார். அவர் அறிஞரும் அல்ல நல்லவரும் அல்ல. எவரும் தடுக்கும் முன் அவரே மைக்கை வற்புறுத்திக் கைப்பற்றிக் கொண்டு, ஏதேதோ தொடர்பு இல்லாது பேசி போரடித்தார். திருக்குறளை முதல் வகுப்பில் இருந்தே மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்று கூறிய அவர் முதல் வகுப்பில் 100 குறளும், 2-ஆம் வகுப்பில் 200 குறளும், 3-ஆம் வகுப்பில் 300 குறளும், 4-ஆம் வகுப்பில் 500-ம், 6வதில் 800-ம், 7-ஆம்



வகுப்பில் 1000-ம், 8-ஆம் வகுப்பில் 1300-ம், 9-ஆம் வகுப்பில் 1500-ம், 10-ஆவதில் 1800-ம் படிக்க வேண்டும் என்று கூறினார். மாணவர்கள் கலாட்டா பண்ணக் கேட்கவா வேண்டும்?

– எம். அகமது அலி, மதுக்கூர்.

பக்கத்துலதான்!

எங்க ஊரில் தபால் நிலையமும், கூட்டுறவுச் சங்கமும் அருகருகே உள்ளன. வெளியூரிலிருந்து வந்த ஒருவர் எதிரே வந்தவரிடம், ''ஏங்க



சொஸைட்டி எங்கே இருக்கு?'' என்று கேட்டார். ''போஸ்ட் ஆபீஸ் பக்கத்துல'' என்று அவர் கூறிவிட்டுப் போய் விட்டார். பின்னால் வந்த இன்னொருவரிடம், ''ஏங்க, தபாலாபீஸ் எங்கே இருக்கு?'' என்று புதியவர் கேட்டார். ''சொசைட்டிக்குப் பக்கத்துலதாங்க'' என்று அவரும் கூறிவிட்டுப் போய் விட்டார். பாவம் புதியவர், அடுத்து வந்த ஒருவரிடம் ''ஏங்க இங்க போஸ்ட் ஆபீசும், சொசைட்டியும் எங்கே இருக்குங்க?'' என்று கேட்டார். அந்த அவசரக்காரர், ''ரெண்டுமே பக்கத்துப் பக்கத்துலதாங்க இருக்கு'' என்று கூறி, சைக்கிளில் பறந்து விட்டார். பின்னால் வந்த என்னிடம் புதியவர், விஷயத்தைக் கூற, எனக்கும் சிரிப்பு வந்தாலும் அடக்கிக் கொண்டு அவருக்கு வழிசொல்லி விட்டுத் திரும்பினேன்!

– சிவ. ஜெயசங்கர்,
கரியாப்பட்டணம்.

தாத்தாவின் ராமஜெயம்

வைகுண்ட ஏகாதசி, 'நாங்கள் கண் விழிக்கப் போகிறோம்' என்று எல்லோரும் ஒரு வாரம் முன்னதாகவே பீற்றிக்



கொண்டோம். ஏகாதசி வந்தது. இரவு முழுக்கக் கண் விழிக்கக் கூடியவர்கள் ஒவ்வொருவராகத் தங்களை அறியாது சொக்கி விழுந்து தூங்கி விட்டார்கள். ஆனால் எங்கள் வயதா .ந்தா மட்டும் விழித்திருந்து அமைதியாக, ''ராமஜெயம்'' எழுதிக் கொண்டிருந்தார். பொழுது விடிந்ததும் தாம் எழுதிய 'ராம ஜெயத்தை'க் கோவிலுக்கு அனுப்பி வைத்தார். பெருமாளை தரிசனம் செய்யக் கோவிலுக்கு வந்தவர்களுக்கு தாத்தாவின் ராமஜெயத்தையும் தரிசனம் செய்து வியக்கும் வாய்ப்புக் கிடைத்தது. விளம்பரம் இல்லாது ராமனை நினைத்து கண்விழித்து, மற்றவர்களுக்கு வழிகாட்டிய தாத்தாவை கோவில் நிர்வாகம் பாராட்டியது.

– ஏ.எல். சண்முகம், கண்டலூர்.

வாடா சார்!

எதிர் வீட்டுச் சிறுவன் எல்லோரையும் மரியாதை இல்லாமல், ''வா போ'' என்று பேசுவான். யார் என்ன கண்டித்தும் அவன் தன்னை மாற்றிக் கொள்ளவில்லை. விளைவுகளைப் பற்றி அறியாத சின்னப் பையன்தானே? ஒருமுறை வீட்டுக்கு வந்த மிகவும் வேண்டிய ஒருவரை அவன் ''டேய் வாடா'' என்று கூப்பிட்டு விட்டான்.

அவன் தந்தைக்கு வந்ததே கோபம், அவனை அடித்து மிரட்டி, ''யார் வந்தாலும் சார் போட்டுக் கூப்பிடணும்''



என்றார். அவனும் ''சரிப்பா'' என்று அழுது கொண்டே சொன்னவன், வந்தவரைப் பார்த்து, ''டேய் வாடா சார்!'' என்றான்! வந்தவர் சிரிக்க, நாங்களும் சிரித்தோம்!

– மா. வெ. கிருஷ்ணன்,
அம்மையார் குப்பம்.

என்ன தெரிகிறது?

பள்ளியில் வேதியியல் பாடம். ஆசிட் என்ற அமிலத்தின் தன்மையை ஆசிரியர் விளக்கி விட்டு, செய்முறையைச் செய்து காட்ட ஒரு குடுவையில்



ஆசிட்டையும், இன்னொரு குடுவையில் நீரையும் எடுத்து வந்தார். இரண்டிலும் சில புழுக்களைப் போட்டார். அமிலத்தில் விழுந்தவை இறந்து விட்டன. நீரில் போட்டவை உயிருடன் இருந்தன. ''இதிலிருந்து என்ன தெரிகிறது?'' என்று ஆசிரியர் எங்களைக் கேட்டார். ''அமிலத்தைக் குடித்தால் வயிற்றில் உள்ள புழுக்களெல்லாம் இறக்கும்'' என்றான் ஒரு குறும்புக்காரன். ஆசிரியரும் சிரித்து விட்டார்.

– ப. கணேஷ், சென்னை – 19.

கூடவே வருது!

வீட்டில் பெயிண்ட் அடிக்க டப்பா வாங்கி வைத்திருந்தார்கள். அன்று ஞாயிற்றுக் கிழமை. மாலையில் எல்லோரும் திரைப்படம் பார்த்துக்




கொண்டிருந்தோம். மாமா பையன் படுசுட்டி. அவனும் வந்திருந்தான். திரைப்படம் பார்க்கும் கவனத்தில் யாரும் அவனை கவனிக்கவில்லை. அவன், உள்ளே போய் ஏதோ விஷமம் பண்ணி பெயிண்ட் டப்பாவைத் திறந்து கொட்டியிருக்கிறான். அது காலில் நன்றாக ஈஷி இருக்கிறது. அவன் வீடு முழுக்க நடந்திருக்கிறான். போன இடமெல்லாம் பெயிண்ட் காலடிச் சுவடுகள்! நான்தான் கவனித்து விட்டு, ''என்னடா இது?'' என்று கேட்டேன். ''அது என்னமோ தெரியலே! நான் எங்கே போனாலும் இது என் கூடவே வருது!'' என்று குழந்தைத்தனமாக அவன் கூறிய பதில் எல்லோருக்கும் சிரிப்பை வரவழைத் தது!

– எஸ். தட்சிணாமூர்த்தி,
நாகலூர்.

அப்பவும் இதேதான்!

என் தம்பிக்கு எட்டு வயது. மூன்றாவது படிக்கிறான். பாட்டிக்கு ரொம்ப செல்லம். ஒருநாள் பள்ளி முடிந்ததும் வீடு திரும்பிய தம்பியை பாட்டி ஆசையாக அருகே அழைத்து வைத்துக் கொண்டாள். ''பள்ளிக்கூடத்துல என்னடா பாடம் படிச்சே?'' என்று கேட்டாள். ''பூகோளம் பாட்டி'' என்றான் தம்பி. ''என்னப்பா கேட்டாங்க?'' என்றாள் பாட்டி. ''இந்தியா எந்தக் கண்டத்துல இருக்குன்னு கேட்டாங்க?'' என்றான் தம்பி. ''நான் படிச்ச காலத்துல இருந்து இதையேதான் கேட்கிறாங்க'' என்று பாட்டி அலுத்துக் கொள்ள, ''அப்படின்னா ஐம்பது வருஷமாவா



இதுக்கு விடைதெரியாம கண்டுபிடிச்சிட்டிருக்காங்க?'' என்று பேரன் கேட்க, எனக்கு ஒரே சிரிப்பு!

– சு. துர்காதேவி,
சோழன் மாளிகை.

என்னடா ஏப்!

என் தந்தை டான்சியில் பணியாற்றி வருகிறார். ஒருநாள் அவரைத் தேடிக் கொண்டு அவரது அலுவலக நண்பர் ஒருவர் வந்தார். அவரைப் பார்த்ததும் என் தந்தை, ''வாடா ஏப்'' என்று அன்புடன் அழைத்தார். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏப் என்றால் மனிதக் குரங்கு அல்லவா? இப்படி அழைப்பதை அந்த நண்பர் எப்படித் தாங்கிக் கொள்கிறார்? எங்களுக்குத் தான் மனம் குறுகுறுத்ததே தவிர, வந்த



நண்பர் இதைப் பற்றிக் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை. சிரித்து சிரித்துப் பேசி விட்டு அவர் போனதும் அப்பாவிடம் கேட்டோம். அவர் சிரித்து விட்டு, ''டான்சி நிறுவனத்தில் அஸிஸ்டெண்ட் பிராஜெக்ட் இஞ்சினியரை சுருக்கமாக APE என்றுதான் அழைப்போம்'' என்று விளக்கினார். பாவம் APE -க்கள்!


– எஸ். செந்தில்குமார்,
கீழ்ப்பெரும்பாக்கம்.

கடைவீதி உடல்!

140 பவுண்ட் எடை கொண்ட நம் உடல் ஒரு கடைவீதியாகவும் செயல்படும். என்ன! ஆச்சரியமாக உள்ளதா! ஆம். 7 சோப்புக் கட்டிகள் செய்யும் அளவுக்கு கொழுப்பும், 9000 பென்சில்கள் செய்ய உதவும் கரிய பொருளும், (கார்பன்), 2200 தீக்குச்சி மருந்துக்குத் தேவையான பாஸ்பரஸும், 1 டோஸ் உப்புக்கு தேவையான மாங்கனீசும், 3 ஆணிகள் செய்ய உதவும் அளவுக்கு இரும்பும், ஒரு சிறு அறைக்கு வெள்ளையடிக்கத் தேவையான சுண்ணாம்பும், 10 காலன் தொட்டியை நிரப்பும் அளவு நீரும் நமது உடலில் தங்கியுள்ளது. எனவே இனி யாரையும் உப்புக்கும் பிரயோஜனமில்லாதவன் எனக் கூற வேண்டாம்.

– ஏ. ஆர். கலை, பரங்கிப்பேட்டை.

எத்தனை கொடிகள்?



யாருடைய நீதி?



அந்த மன்னன் நாட்டு மக்களுக்குப் பறையறைந்து அறிவித்திருந்தான்.

''இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், இந்த நாட்டில், எந்தவொரு குடிமகனுக்காவது, யாராவது அநீதி இழைத்தால், பாதிக்கப்பட்ட அந்த நபர், எந்தவிதப் பயமும் இன்றி, எந்த நேரத்திலும், அநீதி பற்றிப் புகார் செய்யலாம். மன்னரே நேரில் அது பற்றி உடனடியாக விசாரித்துத் தகுந்த பரிகாரம் கண்டு உதவுவார்....''

இவ்விதம் நாடு முழுவதும் செய்தி அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு, அந்த நாட்டில் நியாயமும் நேர்மையும் தழைத்தோங்கின. மக்கள் குற்றம் செய்ய அஞ்சினர்.


அப்போது ஒருநாள்!

ஒரு வயதான மூதாட்டி மன்னனை நேரில் பார்க்க விரும்பி, அரண்மனைக்கு வந்தாள்.

''யாரம்மா...? என்ன வேண்டும்...?'' என்றான் அரண்மனைக் காவலாளி.

''ஐயா! நான் ஆதரவற்றவள். எனக்கு ஒருவர் அநீதி இழைத்து விட்டார். அது பற்றி மன்னரிடம் புகார் செய்து, நியாயம் பெற வேண்டும். எனவே, என்னை அரண்மனைக்குள் செல்ல அனுமதியுங்கள்...'' என்றாள் கிழவி.

ஜானகி மணாளன்



காவலாளி வழிகாட்ட, கிழவி மன்னரிடம் போனாள். "மகாராஜா! என் வீட்டில் ஒரு கிணறு இருக்கிறது. அடுத்த வீட்டில் ஒரு பெரிய பணக்காரன் இருக்கிறான். அவன் மகா முரடன். தனது அடியாட்களைக் கொண்டு, என்னை மிரட்டி, அவன் என் வீட்டுக் கிணற்றை அபகரித்துக் கொண்டு விட்டான். என்னை அந்தக் கிணற்றுக்கு அருகில் நெருங்கக் கூட விடுவது இல்லை. நான் குடிநீருக்கு மிகவும் சிரமப்படுகிறேன். போய்க் கேட்டால் அடிக்க வருகிறான். பயமாக இருக்கிறது. நான் மட்டுமல்ல. ஊரே அவனைக் கண்டு அஞ்சுகிறது. நீங்கள் தான் விசாரித்து நியாயம் வழங்க வேண்டும்" என்று கெஞ்சினாள்.

உடனே அரசன் கிழவியிடம், "தாயே! நான் விரைவில் வந்து விசாரித்து நியாயம் வழங்குகிறேன். சென்று வாருங்கள்...." என்று கூறி அவளை அனுப்பி வைத்தான். கிழவி மகிழ்ச்சியுடன் விடைபெற்றாள்.

அந்த மன்னன் ரகசியமாக ஒரு ஒற்றனை அழைத்தான். "நீ உடனே அந்தக் கிராமத்துக்குப் போய் உண்மையை அறிந்து வா..." என்று அனுப்பி வைத்தான். அவனும் அவ்வாறே சென்று வந்து, "கிழவி கூறியது அனைத்தும் மெய்..." என்று உரைத்தான்.

சில நாட்களாயின. ஒருநாள், மகாராஜா யாரிடமும் சொல்லாமல் திடீரென்று அந்தக் கிராமத்துக்குச் சென்றான். ஊரில் பலரிடம் விசாரித்துக் கொண்டு, அந்தக் கிழவியின் வீட்டுக்குப் போனான்.



கிணற்றடியில் போய் நின்று கொண்டான். ஒரு பக்கத்திலிருந்து கிழவி வந்தாள். இன்னொரு பக்கத்திலிருந்து பக்கத்து வீட்டுக்காரன் வந்தான்.

''இந்தக் கிணறு யாருக்குச் சொந்தமானது...?'' என்றான் மன்னன், உரத்த குரலில்.

''என்னுடையதுதான் மகாராஜா...'' என்று சொல்ல வாயெடுத்தாள் கிழவி.


அதற்குள் அந்தப் பக்கத்து வீட்டுப் பணக்காரப் போக்கிரி, அவளைப் பார்த்துக் 'கொன்று விடுவேன்' என்பது போல் ஜாடை காட்டி மிரட்டினான். அரசன் அதைக் கவனித்து விட்டான்.

அடுத்ததாக, ''என் கிணறுதான்'' என்று அந்தப் பணக்காரப் போக்கிரி சொல்ல வேண்டும். அதற்குள் மன்னன் முந்திக் கொண்டான்.


''இந்தக் கிணறு பற்றி எனக்கு ஒரு ரகசியத் தகவல் கிடைத்துள்ளது...'' என்றான் அரசன்.

''என்ன மகாராஜா...?'' என்று பதறினான் போக்கிரி.

''இது உன் கிணறு என்று கேள்விப்பட்டேன். இதில் அரசாங்கத்துக்குச் சொந்தமான ஆயிரம் பொற் காசுகள் போடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. எனவே, நீ இப்போதே இக் கிணற்றில் இறங்கி, அந்த ஆயிரம் பொற்காசுகளையும் எடுத்து என்னிடம் ஒப்படைக்க வேண்டும். கிணற்றில் அக் காசுகள் இல்லை என்றால், அந்தத் தொகைக்கு நீயே பொறுப்பு... நீதான் அதை அரசுக்குக் கட்டியாக வேண்டும்... கிணறு உன்னுடையதுதானே...?'' என்றார் மகாராஜா.



அவ்வளவுதான். முரடன் பயந்து போனான். எப்படிச் சொன்னாலும் மாட்டிக் கொள்ள வேண்டும். ஆகவே அவன், ''மகாராஜா! இந்தக் கிணறு என்னுடையது என்று யார் சொன்னது? இல்லையே... எப்போதாவது வேண்டும் போது தண்ணீர் இழுத்துக் கொள்வேன். அவ்வளவுதான். இதற்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை...'' என்று கூறி விட்டான்.



புத்தாண்டே வருக!

ஸ்ரீமுக என பெயர்சூட்டி
தமிழ் புத்தாண்டே வருக
அமோக நன்மைகள் தருக
அல்லல் எல்லாம் போக்குக!

கல்வி எங்கும் ஓங்க
கலவரம் நாட்டில் நீங்க
பல்கி கலைகள் வளர
பண்பு நாளும் உயர!

புத்தம் புதுமைகள் பூக்க
பல்வகை தொழில்கள் ஆக்க
சுத்தம் எங்கும் காக்க
சீர்மிகு புத்தாண்டே வருக!

பருவ மழை செழிக்க
பயிர்கள் நன்கு கொழிக்க
பெருகி விளைச்சல் குவிய
பொருள்கள் நன்கு மலிய!

அருமை மக்கள் மகிழ
அன்பு வீட்டில் நிலவ
பெருமை நாட்டில் உயர
பாங்காய் புத்தாண்டே வருக!

- நாஞ்சில் இராமநாதன்

அரசன் விடுவதாக இல்லை. ''உன் கிணறுதான் என்று எல்லோரும் சொல்கிறார்களே...'' என்றான். அந்தப் போக்கிரியைத் தன் வாயால் கிழவியின் கிணறுதான் என்று கூற வைக்க வேண்டும் என்பது அரசனின் நோக்கம்.

''ம்... சரி... போகட்டும்... அப்படியானால் இது யாருடையது...?'' என்றான் மன்னன்.

சட்டென்று முரடன், ''இது இந்தக் கிழவியின் கிணறுதான் மகாராஜா...'' என்று கூறி விட்டான்.

மன்னனின் நோக்கம் நிறைவேறி விட்டது.

உடனே அரசன் கிழவியை அருகில் அழைத்துச் சொன்னான். ''இந்தக் கிணறு உங்களுடையதுதான். உங்கள் பக்கத்து வீட்டுக்காரரே சொல்லி விட்டார். ஆகவே நீங்கள் இனிமேல் இதில் தாராளமாகத் தண்ணீர் எடுத்துப் பயன்படுத்தலாம். எந்தத் தடையும் இல்லை...''


போக்கிரி வாயடைத்துப் போனான். கிழவிக்கு நியாயம் கிடைத்து விட்டது. அவள் மகிழ்ச்சியடைந்தாள்.

இப்படி மிகுந்த சாதுர்யமாக வழக்கு விசாரணை செய்து நீதி வழங்கிய அந்த மன்னன் யார் தெரியுமா?

பஞ்சாபை ஆண்ட மகாராஜா ரஞ்சித் சிங்!

சீக்கியர்களின் சிங்கம் என்று ஆங்கிலேயர்களால் புகழப்பட்ட பெருமைக்கு உரியவர் மகாராஜா ரஞ்சித் சிங். பஞ்சாபை அடிமைப்படுத்த ஆங்லேயர்கள் தொடுத்த தாக்குதல்கள் அத்தனையையும் முறியடித்த பெருமைக்கு உரியவர் ரஞ்சித் சிங். இவரது காலத்திலேயே அமிர்த சரஸ்ஸில் உள்ள சீக்கியர்களின் பொற் கோயில் கட்டப்பட்டது. போரில் தமது ஒரு கண்ணையும் ஒரு கையையும் இழந்தும் கூட, சீக்கியர்களின் பகைவர்களுக்கு இவர் ஒரு சிம்ம சொப்பனமாக இருந்தார்.

சாதி மத வேறுபாடுகளைக் கடந்து மக்களது நலன்களுக்காகவே பாடுபட்ட ரஞ்சித் சிங்கின் அவையில் எல்லா மதங்களையும் சேர்ந்த கவிஞர்களும் இருந்தனர்.



ஆர். புனிதா, கோனேரிராஜபுரம்.

? எனக்குத் தெரிந்த நபர் ஒருவர் அடிக்கடி பாக்கு சாப்பிடுவார். பாக்கு சாப்பிட்டால் ரத்த சோகை வரும் என்று பலரும் அவரை எச்சரிக்கின்றனர். அது உண்மையா?

! உண்மைதான், புனிதா! பாக்கிலுள்ள நச்சுப் பொருள்கள் ரத்தத்திலுள்ள 'ஹீமோகுளோபின்' அமைப்பைக் கெடுக்கிறது. இதனால் ஹீமோகுளோபின் அளவு குறைந்து, ரத்த சோகை வருகிறது.



கோ. களஞ்சிய குமார், அந்தமான்.

? ஒரு மனிதனின் உடலில் எத்தனை சதவீதம் நீர் உள்ளது?

! ஆண்களுக்கு அவர்களுடைய உடம்பின் எடையில் 65 சதவீதமும், பெண்களுக்கு 55 சதவீதமும் நீர் உள்ளது.



இ. சாய்ராம், சென்னை – 110.

? உறைந்த ரத்தத்திலிருந்து எவ்வாறு ரத்தப் பிரிவைக் கண்டுபிடிக்கிறார்கள்?



! உறைந்த ரத்தத்தில் சிவப்பு அணுக்கள் (Red Cells) இறந்து போனாலும், அவற்றின் திரளும் தன்மை (AGGLUTINATION) நிலைபெற்றிருக்கும். ஆகவே அந்தத் திரளும் தன்மையை உபயோகித்து, உறைந்த ரத்தத்தின் பிரிவைக் கண்டுபிடிக்கிறார்கள்.



எச். பிஜு, மொரப்பூர்.


? காதினுள் பூச்சி, வண்டு நுழைந்து விட்டால் உடனடியாக செய்ய வேண்டிய முதலுதவி என்ன, டாக்டர்?

! சிறிது வெதுவெதுப்பான தண்ணீரைக் காதினுள் ஊற்றினால் பூச்சியோ, வண்டோ இறந்து வெளியே வந்து விடும். ஹைட்ரஜன் பெராக்ஸைடு (HYDROGEN PEROXIDE) கைவசமிருந்தால் மூன்று சொட்டுகள் காதில் ஊற்றலாம். பலன் கிடைக்கும்.

ப. ரேகா, சென்னை – 28.


? காய்கறிகளிலும், பழம், கீரை போன்றவற்றிலும் 'வைட்டமின்' சத்து இருக்கிறதல்லவா? இப்போது விளைவும் பயிர்களுக்கு செயற்கை உரங்கள் போடுவதால் அதில் உள்ள சத்து குறைந்து விடுமா?

! சுவையான கேள்வி; சிந்தனைக்குரிய கேள்வி. செயற்கை உரங்களால் மண்ணில் விளையும் காய்கறி, பழங்களில் இருக்கும் சத்தில் சிறிய சதவீதம் குறைய வாய்ப்பிருக்கிறது. எடுத்துக் காட்டாக, அமோனியம் சல்பேட், அமோனியம் பாஸ்பேட் உரங்களைப் போடும் போது, காய்கறிகளுக்குத் தேவையான துத்தநாகச் சத்து, மேற் சொன்ன உரங்களோடு வினை புரிந்து துத்தநாக சல்பேட் மற்றும் துத்த நாக பாஸ்பேட்டாக மாறி விடுவதால், அக் காய்கறிகளுக்கு, துத்தநாகச் சத்து கிடைக்காமல் போய் விடும்!



எம். கே. சக்திவேல், சேலம்.

? மின்சாரம் பட்டு உயிர் இழந்ததாகக் கேள்விப்படுகிறோம். நம் உடல் அதிகபட்சமாக எந்த அளவிற்கு மின்சாரத்தைத் தாங்கும்? மின்சாரம் நம் உடம்பில் பாய்ந்ததும் என்ன மாற்றங்கள் ஏற்படும்? எப்படி உயிர் இழக்க நேரிடுகிறது?



! நம் உடம்பில் பாயும் மின்சாரத்தின் அளவு 240 வோல்ட்டிற்கு அதிகமாக இருக்கும் பட்சத்தில் உயிருக்கு ஆபத்து நிகழ்கிறது. அதிலும் DC மின்சாரத்தை விட (DIRECT CURRENT) AC மின்சாரத்தால் (ALTERNATING CURRENT) ஐந்து மடங்கு அதிக ஆபத்து. மின்சாரம் நம் உடம்பில் பட்டதும் ரத்தக் குழாய்கள் வழியாக உடல் முழுவதும் பரவுகிறது. அப்போது மூளையும் தண்டுவடமும் மிகுந்த பாதிப்படைந்து, செயலிழக்கிறது. அதனைத் தொடர்ந்து இதயத் துடிப்பும், சுவாசமும் 'சட்'டென நின்று விடுகிறது. சிலருக்கு மின்சாரத்தின் அளவு குறைவாக இருந்தால் கூட, அதிர்ச்சி, பயம் போன்ற காரணங்களால் இருதயத் துடிப்பு நின்று, இறப்புக்கு வழி அமைக்கிறது.

தூங்க மாட்டேன்



காலை ஆறரை மணி. விஜய குமார் இன்னும் எழுந்திருக்கவில்லை.

''டேய் விஜய் எழுந்திருடா'' - அம்மா குரல் கொடுத்தாள். ஆனால் விஜய் அசையவில்லை. அம்மா தொடர்ந்து குரல் கொடுத்து எழுப்பிக் கொண்டிருந்தாள்.

தினம் தினம் நடக்கும் நிகழ்ச்சிதான் இது. விஜயகுமாருக்குத் தூங்குவது என்றால் மிகவும் பிடிக்கும். பிடிக்கும் என்பதை விட, தூக்கத்துக்கு அவன் அடிமை என்பதே பொருந்தும்.

வார நாட்களில் ஏழு அல்லது ஏழரைக்குக் குறைந்து எழுந்திருக்க மாட்டான். அது கூட அவன் அம்மா ஆயிரம் முறை கூப்பிட்டு உலுக்கி, தண்ணீரைக் கொண்டு வந்து தெளித்த பின்தான். சனி, ஞாயிறு என்றால் கேட்கவே வேண்டாம். எட்டு மணிக்குத்தான் போர்வையிலிருந்து தலையை வெளியில் நீட்டுவான். அது கூட டீ.வி.யில் 'திரைமலர்' இருந்தால்தான்!

பள்ளிக்கு எட்டரைக்குள் கிளம்பியாக வேண்டும். எட்டரை மணிக்கு கிளம்ப, ஏழரைக்கு எழுந்திருந்தால் எப்படி? அவசரம் அவசரமாக எல்லாவற்றையும் செய்வான். தினமும் ஏதாவது ஒன்றை மறந்து விட்டுச் செல்வான். அல்லது பேருந்தைத் தவற விட்டு விட்டு பள்ளிக்குத் தாமதமாகச் செல்வான். எது எப்படியானாலும், விஜயகுமார் காலையில் தாமதமாக எழுந்து கொள்வதை நிறுத்தவில்லை.

விஜயகுமாரின் அம்மா நல்லதனமாகச் சொல்லிப் பார்த்தாள். கண்டித்தும் சொன்னாள். விஜயகுமார் திருந்துவ தாக இல்லை.

விஜயகுமாருக்கு அரையாண்டுத் தேர்வுகள் ஆரம்பமாயின. தேர்வுகள் வந்து விட்டால் மற்ற மாணவர்களைப் போல விஜய் பரபரப்படைய மாட்

ஜமதக்னி

டான்! கடுமையாக உழைக்கவும் மாட்டான்! உழைப்புக்கு ஏற்ற கூலிதானே கிடைக்கும்? மார்க்கும் ஏனோதானோ வென்றுதான் வரும். அதைப் பற்றியும் அவன் கவலைப்பட மாட்டான்.

விஜயகுமாருக்குத் தேர்வுகள் நடந்து கொண்டிருந்தன. காஞ்சிபுரத்தில் இருந்த விஜயகுமாரின் தாத்தாவிற்கு உடல்நலம் சரியில்லாமல் போயிற்று. மாலைதான் தகவல் வந்தது. அப்பா அலுவலகத்திலிருந்து வந்ததும் அம்மா விஷயத்தைச் சொன்னாள். ''விஜிக்குத் தேர்வுகள் நடக்கிறதே? என்ன செய்வது?'' என்று கவலைப் பட்டாள்.

''என்ன செய்வது? அதிகாலையில் கிளம்பி, பார்த்து விட்டு நாளை இரவே திரும்பி விடுவோம்'' என்றார் தந்தை.

''சரி, சீக்கிரம் எழுந்து சமையலை முடித்து விடுகிறேன்'' என்றாள் அம்மா.

விஜயகுமாரிடம் விஷயத்தைச் சொன்னாள் அம்மா. ''நாங்க காலை ஆறு மணிக்கெல்லாம் கிளம்பிப் போய் விடுவோம். நாங்கள் போன பிறகு நீ தூங்கிக் கொண்டிருக்கக் கூடாது. ஆறு மணிக்குள் எழுந்து, பாடங்களைப் படிச்சாத்தான் பரீட்சைக்குக் கிளம்ப சரியா இருக்கும். இதோ இதோன்னு தூங்கிக் கிட்டே இருந்தால் பரீட்சைக்குப் போகவே நேரம் இருக்காது'' என்று புத்திமதி சொன்னாள் அம்மா. விஜயகுமார் ''சரி.. சரி''யென்று தலையை ஆட்டிக் கொண்டிருந்தான்.

மறுநாள்...

அம்மா விடியற்காலையில் எழுந்து எல்லா வேலைகளையும் முடித்து விட்டு ஆறு மணிக்கெல்லாம் விஜயகுமாரையும் எழுப்பினாள். ''விஜய்... நாங்க கிளம்பறோம்டா. கதவைச் சாத்திக் கொள். தூங்காதே. மணி ஆறாகி விட்டது'' என்று உசுப்பினாள்.

''ஊரெல்லாம் திருட்டுப் பயமா இருக்குடா விஜய். சீக்கிரம் எழுந்து தாள் போட்டுக்க'' என்று எச்சரித்து விட்டுக் கிளம்பினர் பெற்றோர்.

''பேனாவுக்கு இங்க் போட்டுக் கோடா. தூக்க ஜோரில் விட்டுடாதே'' என்றார் அப்பா மறுபடி திரும்பி வந்து!

விஜய் கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஆறு ஐந்து ஆகியிருந்தது. தூக்கம் சொக்கியது. இன்னும் ஒரு பத்து நிமிஷம் தூங்கி விட்டு எழுந்து விடலாம் என்று தூங்கினான். கதவைக் கூடத் தாளிடவில்லை!

அவ்வளவுதான்! நன்றாகத் தூங்கி விட்டான். அவன் விழித்துக் கொள்ளும் போது மணி ஒன்பது! தேர்வு ஒன்பது மணிக்குத்தான் ஆரம்பம்!

விஜய்குமாருக்குப் பக்கத்தில் ஒரு சீட்டும், பறந்து விடாமல் இருக்க அதன் மேல் ஒரு கல்லும் வைக்கப்பட்டிருந் தன! விஜய் சீட்டை எடுத்துப் படித்தான். அதில், ''தூங்குமூஞ்சி விஜயா, உன் போலவே வீட்டுக்கு ஒரு தூங்குமூஞ்சி இருந்து, வாசல் கதவும் தாளிடாமல் இருந்தால் எங்கள் பாடு கொண்டாட்டம்தான். தூங்குமூஞ்சியான உனக்கு அலாரம், கடிகாரம் எதற்கு? நான் எடுத்துக் கொண்டு போகிறேன்'' என்று எழுதப்பட்டிருந்தது! படுக்கை அருகே இருந்த அலாரம் கடிகாரம் காணாமல் போயிருப்பதை விஜய் அப்பொழுது தான் கவனித்தான்.

கடிகாரம்தான் போச்சு. பரீட்சை என்ன ஆவது?



அவசரம் அவசரமாக முகத்தை அலம்பிக் கொண்டு, பேனாவையும் பேப்பரையும் எடுத்துக் கொண்டு ஓடி னான். தெரு திரும்பியதும்தான் வீட்டைப் பூட்டவில்லை என்ற ஞாபகம் வந்தது. மறுபடி வீட்டிற்கு வந் தான். கதவைப் பூட்டிக் கொண்டு பஸ் நிறுத்தத்திற்கு வரும் போது பஸ் புறப் பட்டுச் சென்று விட்டது. அடுத்த பேருந் தைப் பிடித்து அவன் பள்ளிக்குப் போய்ச் சேர்ந்த போது மணி ஒன்பது நாற் பது! தேர்வுகள் ஆரம்பித்து அரை மணிக்கு மேலாகி விட்டதால் உள்ளே விட மறுத்தார்கள். எப்படியோ கெஞ்சி கூத்தாடி, அவன் இருக்கையில் அமர்ந்து தேர்வு எழுத ஆரம்பிக்கும் போது மணி பத்து! இரண்டு வரி எழுதியதும் பேனா வில் மசி தீர்ந்து போய் விட்டது! அப்பா சொன்னதைக் கேட்காது தூங்கியதன் விளைவு!


ஒருவழியாக இன்னொரு நண்ப னிடம் கெஞ்சிக் கூத்தாடி இரவல் பேனா வாங்கி தேர்வு எழுதி விட்டு வெளியே வரும்போது பசி வயிற்றைக் கிள்ளியது. காலையில் அவசரத்தில் சாப்பிடவில்லை. வீட்டிற்கு வந்ததும் சாப்பிட்டு விட்டு காலையில் நடந்ததை நன்கு யோசித்துப் பார்த்தான். இன்று தூங்கிய தால் எவ்வளவு நஷ்டம் என் பதை எண்ணிப் பார்த்த போதே அவன் மனம் நடுங்கியது. அம்மா தினம் தினம் சொன்ன போது கேட்காமல் போய் விட்டோமே என்ற வருத்தம் மேலோங் கியது. ''இனி தூக் கத்தை ஒரு போதும் என் வாழ்வில் இடைஞ்சலாக இருக்க விட மாட்டேன்'' என்று முடிவு எடுத் தான் விஜய்.


ஊரிலிருந்து வந்த விஜயகுமாரின் பெற்றோருக்கு ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது!




இசை அரசன் ஆனந்தன்

கதை: ஆனந்தி   படம்: கரோ





இப்ப என்ன குறைஞ்சு போச்சு? சந்தோஷ-மாத்தானே இருக்கோம்?...
அப்படிச் சொல்லுடா ஆனந்தா...
உனக்கு சரியான பேர் வச்சேன்... கிடக்கு, உனக்கு என்ன வேணும்? சொல்லலியே...?
எனக்கா...?
ம்... சொல்லு!
எனக்குத் துட்டு கொடு; வேண்டி-யதை வாங்கிக்கறேன்!
அதுவும் சரிதான்... ஆளுக்கொரு வெள்ளிக் காசு தாரேன். வேண்டியதை வாங்கிக்குங்க...
சந்தை தினம் -
ரமா, நீ என்ன வாங்கினே?...
நான் பெல்ட் வாங்-கிட்டேன்...
இதோ பார், கை நிறைய வளையல்!
நான் புதுப் பாவாடை...



ஆனந்தன் ஒரு கடையில்...
அந்த பிடிலுக்கு ஒன்னரைப் பணம் கேக்கறீங்களே, என்கிட்டே ஒரு வெள்ளிக் காசுதான் இருக்கு...
சரி, கொடு...
ஆனந்தன் பிடிலை வாங்கிக் கொண்டதும்...
தம்பி! இருட்டிப் போச்சு. கடை மூட உதவி பண்றியா?...
ஓ!
கடை மூடியதும்...
தம்பி! நீ நல்ல பையன். உன்னை ஏமாத்த மன-சில்லே... இந்த பிடிலுக்கு தந்தி போடறது ரொம்பக் கஷ்டம்!...
இரவு முழுவதும் நூல் நூற்கும் சகோதரிகள் நூற்ற நூல் கிடைத்-தால்தான் இதற்குத் தந்தி போட முடியும்!
பரவா-யில்லே, நான் அவங்களைக் கண்டு பிடிக்கி-றேன்...
வீட்டில்...
பூ! போயும் போயும் பிடிலா? வேற உப-யோகமா எதுவும் வாங்கியிருக்கக் கூடாதோ?...
இசை மனசுக்கு சந்தோ-ஷமளிக்கும்... அதுதான் பயன்!



ஆனந்தன் சுள்ளி திரட்டப் போகையில் ஒரு கிழவர் தென்பட...
தாத்தா, இரவு முழுவதும் நூல் நூற்கும் பெண்களைக் கண்டதுண்டா?...
எனக்கு மூட்டை தூக்கி உதவினால் அழைச்சிட்டுப் போறேன்...
ஆனந்தன் சந்தோஷமாய் உதவினான்...
பாட்டுப்பாடி மகிழ்வேனே, ஆட்டம் ஆடிக் களிப்பேனே! மூட்டை தூக்கி நடப்பேனே, முதியோர்க்கு உதவி உழைப்பேனே!...
கிழவன் அதிசயித்து...
சிரமத்தைப் பார்க்காம உன்னைப் போல் ஆனந்தமா பாடிண்டு வரவனை நான் பார்த்ததே இல்லே!..
என் பேரே ஆனந்தன்தானே!...
காலையில் ஒரு ஊரை அடைந்தனர்...
இவர்கள் நன்றாக உழைக்கிறார்கள்; ஆனால் ஒருவர் முகத்திலேயும் சிரிப்பைக் காணோமே!...
மூச்சு விடாமல் வேலை செய்து செல்வச்செழிப்பில் வாழறாங்க... ஆனா, சந்தோஷம் எங்கே போச்சு?...



கிழவன் வீட்டை அடைந்ததும்...
தாத்தா, இந்த ஊரில் யாரும் சிரிச்சு விளையாட மாட்டாங்களா?...
சேச்சே! அப்படியெல்லாம் நேரத்தை வீணடிக்க மாட்டோம்...
ஆனந்தனுக்குப் புரியவில்லை...
...பகலில் உழைப்பு; இரவில் தூக்கம்-அவ்வளவுதான்!...
சந்தோஷமா இருந்தா என்ன தப்பு...?
அன்று மாலை ஊர் சுற்றிப் பார்க்கப் போனான்...
நண்பரே... இந்த ஊரில் எல்லோரும் உழைக்கிறார்கள், சரி. ஆனால் ஏன் மகிழ்ச்சியே இல்லை?
ஓ! நீ புதுசா? கூடைக் கிழவனுடன் வந்தாயா? அவன் ஒரு மந்திரவாதி! சந்தோஷம் என்ற வார்த்தையே இங்கே எல்லாருக்கும் மறந்து போச்சு... இங்கிருந்து யாரும் தப்பிப் போகவும் முடியாது!
எங்க ராணியம்மா இந்த மந்திரவாதியைக் கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னுட்டாங்க. அன்றிலிருந்து இந்த ஊரில் சந்தோஷமே இல்லாமப் பண்ணிட்டான்.


அன்றிரவு ஆனந்தன் இனிய ஒலிகேட்டுக் கண் விழித்தான்...
எழுந்து போய்ப் பார்ப்போம்...
ஒலி வந்த திக்கில் செல்ல...
ஆ! நீங்கதான் இரவில் நூல் நூற்கும் சகோதரிகளா...?
ஏன்? என்ன வேண்டும்?
என் பிடிலுக்குத் தந்தி தருவீங்களா?
தருகிறோம்! ஆனா முதலில் நீ மந்திர மாம்பழம் கொண்டு வரணும்!
ஆனந்தன் புறப்பட்டுச் சென்றான்... ஊருக்கு வெளியே...
மந்திர மாம்பழமாம்... எங்கே போய், எப்படித் தேடுவது?
ஒரு சோலையில் சோர்வுடன் அமர...
குக்கூ...
குக்கூ...
ஆம்! ஊருக்கு வெளியேதான் பட்சிகளின் குரல் கேட்கிறது...


பறவைகள் இல்லாத ஊரும் ஒரு ஊரா?
இந்த ஊருக்கு நீ குதூகலம் கொண்டு வரலாமே?
எப்படி?
என்னுடன் வா... அழுத்திக்கொள்! ஏழுமலையிருந்தால் நீ தேடும் மந்திர மாம்பழம் கிடைக்கும்!
ஏழுமலை ஏறி வந்த பிறகும் நீ சலிப்பின்றி உற்சாகமாய் இருக்கிறாய்! நல்லது, இதோ பார்!
ஆ!
வேண்டிய அளவு பறித்துக் கொள்...
மூன்று போதும்...
அதிசயப் பறவையே இறுதியில் மகிழ்ச்சி கிட்டும் என்றால் எத்தனை கஷ்டத்தையும் ஏற்கலாம்...
...ஒன்று எனக்கு; அந்த சகோதரிகளுக்கு இரண்டு...
நீ ஆனந்தமாக இருப்பதோடு பேராசை அற்றவனாகவும் இருக்கிறாய். உனக்கு வெற்றி நிச்சயம்...



ஆனந்தன் திரும்பி வந்து இரவு முழுவதும் நால் நாளிலும் பெண்களிடம் பழங்களைத் தர...
நீ நல்ல பிள்ளை...
பிடிலுக்குத் தந்தி போடுவதுடன் வாசிக்கவும் கற்றுத் தருகிறேன்...
அட, தங்கத் தந்திகள்! பிடிலும் சத்தம் மதுரமாகி விட்டது!
ஆனந்தா, இந்த ஊரில் செல்வம் இருந்தது. ஆனால் மகிழ்ச்சி இல்லை. அதை உண்டாக்கு...
அவர்கள் விருப்பப்படி ஆனந்தன் செயல்பட...
ஆ! இத்தனை இனிமையாய் எனக்கு வாசிக்க வருகிறதே!...
இசை கேட்டு எல்லோரும் மகிழ்ந்தார்கள்...
எல்லோர் முகத்திலும் புன்சிரிப்பு... உம்முணா மூஞ்சிகளே இனிமே இங்கு இல்லை!
அரண்மனை எதிரேயும் ஆனந்தன் பிடில் வாசிக்க... ராணியும் தோழிகளும்...
கோலாட்டம் அடிப்போம். தோழியரே, கோலாட்டமும் காண்போம்!



ஊரில் எல்லோரும் கவலை நீங்கிக் குதூகலித்தார்கள்...
ஆடுவோம், பாடுவோம், ஆனந்தமாய் இருப்போம்!....
மந்திரவாதிக் கிழவன் ரொம்பக் கோபத்துடன் வர...
இவனையும் சந்தோஷப் படுத்த முடிந்தால் தான் எனக்கு முழு வெற்றி...
மந்திரவாதி இசையில் மயங்கி ஆடினான்...
மந்திரம் போச்சு, மாயம் போச்சு; மங்கள இசையில் மகிழ்ச்சி வந்தாச்சு!...
ஆனந்தன் ஊருக்குப் புறப்பட்டான்
சதா துக்கப் பட்டுக் கொண்டிருந்த எங்களுக்கெல்லாம் சந்தோஷத்தை திருப்பிக் கொடுத்தாய். நீ நன்றாய் இருக்கணும்...
இந்தா, உனக்கு கூடை நிறைய பரிசுப் பொருள்கள்!....





எனக்கு இவ்வ-ளவெல்லாம் வேண்டாம், பத்து வெள்ளிக் காசுகள் போதும்...
இது என்ன கணக்கு?
அடுத்த தடவை எங்க ஊரில் சந்தை வரும்போது குடும்பத்தில் அனைவருக்-கும் ஒவ்வொரு வெள்ளிக் காசு தர ஆசைப் படறேன்...
ஆனந்தன் வீடு திரும்பியதும்...
இத்தனை நாள் எங்-கேடா போயி-ருந்தே?
சம்பா-திக்கத்தான். இந்தாங்க, ஆளுக்கொரு வெள்ளிக்காசு. சந்தை நடக்கும் போது வேண்டி-யதை வாங்கிக் கலாம்!
ஆ, இவ்வளவு தானா?...
தேவைக்கு மேல் ரொம்ப சம்பாதிச்சா சந்தோஷம் போயிடும். சந்தோஷம் தான் மிகப் பெரிய செல்வம்!...
ஆனந்தன் தன் பிடிலின் உதவியுடன் அனைவருக்கும் மகிழ்ச்சியை அள்ளி வழங்கி வந்தான்...



Photographs : Gopinath




1
2
3
7
8
9
13
14
15
19
20
21



கோடை விடுமுறைப் போட்டி - 1

இங்கே மொத்தம் 24 படங்கள் இருக்கின்றன. 12 படங்கள் மூன்றெழுத்து உள்ளவை. 12 படங்கள் இரண்டெழுத்து உள்ளவை. இரண்டெழுத்து உள்ளவை எல்லாமே, மூன்றெழுத்து உள்ளவைகளுக்குள் அடங்கிவிடும்! எல்லாம் மாறி மாறி இருக்கின்றன.

எவை, எதற்குள் அடங்கும் என்பதைக் கண்டு பிடித்து, தனிக் காகிதத்தில் எண்களை மட்டும் குறிப்பிட்டு எழுதி, கூப்பனையும் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். பரிசு உண்டு. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. பார்க்க மலைப்பாக இருக்கிறதே என்று எண்ணாதீர்கள். இதை விட எளிதான போட்டி இருக்கவே முடியாது.

இந்தப் பக்கத்தைக் கிழிக்காதீர்கள். கூப்பனை மட்டும் கத்திரியுங்கள்.

பெயர் :..................................

வயது :..................................

முகவரி :..................................

....

....

....

பின்கோடு :..................................

முடிவு தேதி 15.5.93

பழைய கோமாளி

தமிழில் :
தம்பி சீனிவாசன்

வெகு நாட்களுக்கு முன் போலந்து ராஜாவாக ஜான் என்பவர் ஆண்டு வந்த போது, அரண்மனையின் கோமாளியாக இருந்தவன் மாதங்கோ. ஜான் அரசருக்குப் பல்லாண்டு காலமாக ஊழியம் செய்து வந்த மாதங்கோ எல்லாருக்கும் பிரியமானவன். அரசரும், அரசியும் மிகவும் விரும்பிய ராஜாங்கக் கோமாளி. அந்த நாளில் ஒவ்வொரு அரண்மனையிலும் ஆஸ்தான விதூஷகர் என்று கோமாளிகள் இருப்பது வழக்கம். இவர்களுடைய நடை உடையும் நடவடிக்கையும் எதிர் பாராத பேச்சும் திடீர்ச் சிரிப்பை வரவழைக்கும். வயதாக ஆக மாதங்கோவின் செயலோ பேச்சோ யாருக்கும் சிரிப்பூட்டவில்லை. தர்பாரில் அரசவைப் பிரபுக்கள் எல்லாரும் கொட்டாவி விட்டுத் தங்கள் அலுப்பைக் காட்டிக் கொண்டனர். ''இது என்ன கோமாளி! இவரால் சிரிப்பு மூட்ட முடியவில்லையே! இவனை வீட்டுக்கு அனுப்பி விடுங்கள் அரசே!'' என்று சிலர் வெளிப்படையாகவே மன்னரிடம் சொல்லி விட்டார்கள்!

அரசவைப் பிரபுக்கள் எல்லோரும் கூறியது உண்மைதான். மாதங்கோவால் முன்போல் ஆடிப் பாடி சிரிப்பு மூட்ட முடியவில்லை. தள்ளாமையும், வறுமையும் அவரைப் பெருமளவுக்குப் பாதித்திருந்தன. தனது குறைபாடு என்ன என்பதை அவரே அறிந்திருந்தார். ஆனாலும் அதை அரசவைப் பிரபுக்கள் குத்திக் காட்டி கிண்டல் செய்த போது அதை அவரால் தாங்க முடியவில்லை. சோகமும் வேதனையும் அவரைப் பிழிந்தன.

தளர்ந்து அடி அடியாக சோகத்துடன் மெல்ல நடந்து மன்னருக்கு முன்னால் மண்டி போட்டுக் கொண்டு தாங்க முடியாத மன வேதனையுடன் கேவினார் மாதங்கோ. ''என் பழைய சாதனைகளையெல்லாம் மறந்து இவர்கள் இப்படி இகழ்கிறார்களே! இதையெல்லாம் கேட்டுக் கொண்டு இன்னும் உயிருடன் இருக்கிறேனே? இந்தக் கணமே என் உயிர் போய் விட்டால் நன்றாக இருக்குமே!'' என்று விம்மினார்.



போலந்து
கதை

''மாதங்கோ! இவர்கள் கூறியதில் உள்ள உண்மையை உணருங்கள். உங்களுக்கும் வயசாகிறது. இந்தக் கோமாளி உடுப்பையெல்லாம் களைந்து விட்டு சாதாரணக் குடிமகனாக இருந்து விடுங்கள். எங்கே போவீர்கள்? கிராமத்திலே உங்களுக்கும் உங்கள் மனைவிக்குமாக ஒரு சின்னக் குடிசை கொடுக்கிறேன். கொஞ்சம் பணமும் தருகிறேன். அங்கே





போய் இருந்து கொண்டு மிச்ச காலத்தைக் கழியுங்கள். இங்கே அரசாங்கத்திடமும் பணமும் அதிகம் இல்லை. அரண்மனைக்கும் வரவு குறைந்து செலவு பெருகி விட்டது'' என்றார் மன்னர்.

''புரிகிறது மன்னரே!'' என்று மனச் சுமையுடன் மெல்ல வெளியேறினார் மாதங்கோ. வீட்டுக்கு வந்ததும் மாதங்கோ தன் விதூஷகன் குல்லாயைக் கழற்றினார்; வண்ண வரிகளும் வட்டங்களும் கொண்ட உடையைக் களைந்தார். கழுதைக் காது அலங்காரத்தை அழித்துக் கொண்டார். சத்தமிடும் சலங்கைகளை அவிழ்த்தார். மனைவி எல்குனியாவின் கையைப் பற்றி, நடந்து நடந்து, கிராமத்துக்குப் போய் அரசன் அளித்த குடிசையிலே அடைக்கலமானார்.

கொஞ்ச நாளில் மாதங்கோவின் கையிலிருந்த பணம் எல்லாம் தீர்ந்து விட்டது. அரசன் அளித்த தொகை மிகச் சிறிதே. அதனால் அதுவும் சீக்கிரம் தீர்ந்து விட்டது. வயதாகி விட்ட மாதங்கோ தம்பதியர் மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தனர். மாதங்கோ ஏதாவது வேலை செய்யத் தயாராக இருந்தாலும், அவருக்கு யார் வேலை தருவார்கள்? அவருக்கும் அப்படி என்ன வேலை தெரியும்? கோமாளியாக நடிக்கத் தெரியும், அவ்வளவுதானே? பசித் துன்பம் அவர்களை வாட்டியது. எதுவும் வாங்கப் பணம் இல்லை. வறுமை தீர எந்த விதமான வழியும் இல்லை.

இரவு நேரம். திடீரென்று மாதங்கோ மனைவியை அழைத்தார் : ''தூங்கி விட்டாயா?''

''இல்லையே! என்ன விஷயம்?''

''ஒரு நல்ல யோசனை. நாளை நீ அரண்மனைக்குப் போ. ராணியிடம் போய் நான் இறந்து விட்டதாகச் சொல்லு. போவதற்கு முன் கண்ணிலே வெங்காயத்தைத் தேய்த்து விட்டுக் கொண்டு போ!''

அடுத்த நாள் காலை. அரண்மனையில் ராணியின் முன்னால் அழுதுச் சிவந்த கண்களுடன் அலறியபடி நின்றாள் எல்குனியா.

''ஏன் அழுகிறாய்? என்ன விஷயம்?'' என்று ராணி கேட்க, ''நேற்றிரவு எனது கணவர் இறந்து விட்டாரே! ஐயோ! இனி நான் ஏன் உயிர் வாழ

வேண்டும்? இந்த உயிர் இனி எதற்கு?'' என்று புலம்பினாள் எல்சூனியா.

''அடப் பாவமே. என்ன செய்வது? எல்லோரையும் சிரிக்க வைத்த மாதங்கோ நம்மை அழ வைத்து விட்டாரே! இது எவ்வளவு பெரிய கஷ்டம் என்று எனக்குப் புரிகிறது'' என்றாள் அரசி. உள்ளே போய் சிறிது பணம் கொண்டு வந்தாள். ''இந்தா, இதை வைத்துக் கொள். அரண்மனை விதூஷகன் மாதங்கோவின் ஈமச் செலவுக்குப் பயன்படட்டும்.''

ஐம்பது பொன் காசுகளைக் கொடுத்தாள் அரசி.

வீடு திரும்பிய எல்சூனியா சிரித்தபடி கைக் காசை, கணவரிடம் கொடுத்தாள். ''வெகு சுலபமாக ஐம்பது பொற் காசு கிடைத்து விட்டது. ஆனால் நீ எப்போது நீ சாக முடியும்?'' என்று குறும்புடன் சொல்லிச் சிரித்தாள்.

''இப்போது உனது முறை. நீ சாகப் போகிறாய்!'' என்று சிரித்துக் கொண்டே கூறினார் முன்னாள் கோமாளி மாதங்கோ. சொல்ல முடியாத அளவு முகத்தைக் கோணிக் கொண்டு சோகமான நடையும் துயரமான குரலுமே துணையாக அரசன் முன் போய் நின்றார். தோள்கள் குலுங்கக் குலுங்க 'ஓ' வென்று கேவிக் கேவி அழுதார்.

''என்ன மாதங்கோ? என்ன துக்கமான விஷயம்? சொல்லு'' என்று பல முறை அரசன் கேட்ட பிறகு, உள்ளத்தை உடைக்கும் குரலில், ''என்ன சொல்லுவேன், எப்படிச் சொல்லுவேன்! என் அன்பு மனைவி இன்று அதிகாலையில் ஆண்டவன் திருவடியைச் சேர்ந்து விட்டாளே. நான் தனியாக நிற்கிறேனே. ஒட்டாண்டியாக திக்கு திசை எதுவும் இன்றி நிற்கிறேனே!'' என்று புலம்பினார் மாதங்கோ. ''கையிலே கால் காசு கூட இல்லையே நான் என்ன செய்யப் போகிறேன்!'' என்று கதறிக் கதறி அழுது புரண்டார் கோமாளி மாதங்கோ.



அரசர் அவரைத் தேற்றினார். உள்ளேயிருந்து ஒரு துணி மூட்டையில் பணம் கொண்டு வந்தார். ''இந்தப் பணப் பையைக் கொண்டு போங்கள். பெண்டாட்டியை இழப்பது என்றால் சாதாரண துக்கமா? யாராலுமே தாங்க முடியாத துக்கம் கோமாளியாரே'' என்றார் அப்பாவி மன்னர்.

குடிசைக்கு வந்து சேர்ந்த மாதங்கோ அந்தப் பையிலே இருநூறு பொன் காசு இருக்கக் கண்டான். பெண்டாட்டியை ஆசையோடு பார்த்து, ''பார்! ராஜாவுக்கு இரக்க மனம் அதிகம். ராணி கொடுத்தது ஐம்பதுதான். ராஜா இருநூறு பொன் கொடுத்தாரே! கையிலே உள்ள இந்தக் காசு கொஞ்ச நாளைக்குத் தாக்குப் பிடிக்கும். ஆனால் ஒன்று. ராஜாவோ ராணியோ இரண்டு பேருமே இப்போது இங்கே துக்கம் கேட்க வரலாம். அப்போது நாம் இருவரும் செத்தது போலக் கிடக்க வேண்டும்'' என்று அவர் சொல்லி முடித்தாரோ இல்லையோ அதற்குள் தூரத்தில் அரச தம்பதியர் வருவது தெரிந்தது.


பரபரப்பாக இருவரும் ஒருவர் முகத்திலே ஒருவர் மாவு அப்பிக் கொண்டு கீழே படுத்துக் கொண்டு வெள்ளைச் சல்லாத் துணியால் உடலைப் போர்த்திக் கொண்டார்கள்.

எல்குனியாவிற்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. ஆனால் மாதங்கோ அதட்டினார் : ''உஷ்! சிரிக் காதே! சிரிக்கிற விஷயமா இது? கப்சிப் என்று செத்தது போலக் கிட! தெரிந் ததா?'' என்று கூறினார்.

''நீங்களும் சிரிக்காம சும்மா கிடங்கள்'' என்றாள் அவரது அன்பு மனைவி.

தலைமாட்டிலே ஒரு மெழுகு வர்த்தி எரிந்து கொண்டிருக்க இருவரும் சவம் போலக் கிடந்தார்கள்!

அரண்மனையிலே இதற்குள் அரசனும் அரசியும் ஒரு சர்ச்சையில் ஈடுபட்டிருந்தார்கள். ''உங்கள் விதூஷகன் இறந்து விட்டாராமே!'' என்று ராணி



குதிரையின் வயது

குதிரையின் முன் பற்களில் ஆழமான குழி இருக்கிறது. அவற்றின் தேய்மானத்தைக் கொண்டு குதிரையின் வயதைக் கணக்கிடுகிறார்கள்.



காபிபோஸா சட்டம்

போதை மருந்து கடத்துபவர்கள் காபிபோஸா (COFEPOSA) சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார்கள் என்று படிக்கிறோம். இந்த காபிபோஸா என்ற சொல்லுக்கு என்ன பொருள்? இது Conservation Of Foreign Exchange and Prevention Of Smuggling Activity Act என்பதன் சுருக்கமே!

- என். ஆர். சுப்பிரமணியம்,
பூனாம்பாளையம்.

மன்னரிடம் கேட்கவும், ''என்ன உளறுகிறாய்? அவன் பெண்டாட்டிதான் இறந்து விட்டாள்!'' என்றார் அரசர்.

''விதூஷகர்தான் இறந்தது!'' - இது ராணி.

'இல்லவே இல்லை.. அவர் மனைவிதான் இறந்தது!'' என்று அடித்துப் பேசினார் அரசர்.

பேச்சு வளர்ந்தது. இருவரும் வார்த்தைகளைக் கொட்டினார்கள். விவாதம் முற்றியது. இரண்டு பேருமே குடிசைக்குப் போய் நேரே பார்த்து விடுவோமே என்று புறப்பட்டு இதோ வந்தும் விட்டார்கள்!

குடிசைக்குள்ளே வெள்ளைப் போர்வையுள்ளே முன்னாள் ஆஸ்தான விதூஷகனும் அவன் மனைவியும் சவமாகக் கிடக்கக் கண்டார்கள். அவர்கள் தலைப் பக்கம் மெழுகுவர்த்தி.

அரசனும் அரசியும் அந்தக் காட்சியைக் கண்டு வருத்தப்பட்டார்கள். அவர்கள் பழைய நாட்களை நினைத்துப் பார்த்ததும் கண்ணீர் கசிந்தது. அப்படியே மௌனமாக அஞ்சலி செய்து, இறந்தவர்களுக்காக சற்றே தியானம் செய்தபின் மெல்ல நகர்ந்தனர்.

வாசலைக் கடக்கு முன்னே அரசர் பேசினார் : ''இந்த இரண்டு பேரிலே யார் முதலில் இறந்தார்களோ! பாவம்! இது நமக்குத் தெரியவே தெரியாதே!''

பின்னால் ஒரு குரல் திடீரென்று கேட்டது.

''அரசே. உண்மையில் முதலில் இறந்தது என் மனைவிதான். ஆனால் நான் அதற்கு முன்பே இறந்து விட்டேன்!''

விதூஷகரின் கேலிக் குரல்!

துக்கமெல்லாம் மறைய அரசர் பெருவியப்புடன், ''அடக் கோமாளியாரே! இது என்ன கோமாளித்தனம்? எழுந்திருங்கள், எழுந்திருங்கள். ஏன் இந்த ஏமாற்று வேலை?'' என்று கேட்டார்.

மாதங்கோ தலைகுனிந்தார். அரசரிடம் தான் அத்தனை காலமும் பெற்று வந்த சொற்பச் சம்பளம் கால் காசு கூட சேமித்து வைக்க முடியாத அளவே இருந்ததையெல்லாம் எப்படி அவர் வாயை விட்டுச் சொல்வார்?


ஆனால் அரசரே நல்ல வேளையாக அவருடைய மௌனத்திலிருந்தே அதையெல்லாம் ஓரளவு புரிந்து கொண்டு விட்டார்! பழம்பெருமை மிக்க அந்த விதூஷகர் இப்படித் தானே இறந்து விட்டதாக ஒரு நாடகம் ஆடத் தாமே மறைமுகமான காரணம் என்பதை அரசர் நன்கு உணர்ந்து கொண்டார். எத்தகைய பெருந் துன்பத்தில் இருந்தால் அவர் தன்னையும் தன் மனைவியையும் இறந்ததாகப் பொய் கூறியிருப்பார்! அரசரின் கண்கள் கலங்கின. மாதங்கோவுக்கு இன்னும் இருநூறு பொன் காசுகளைக் கொடுத்தார். ''நீங்கள் இருவரும் இறக்கும் வரை அரண்மனை செலவில் உங்கள் இருவருக்கும் உணவு கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். இனி இம்மாதிரி விளையாடாதீர்கள்'' என்று மெல்லச் சொன்னார்!

''இராமருக்குப் பிடித்த பாட்டு எது...?''

'' 'வில்லு'ப் பாட்டுதான்!''

- வி. ராஜப்பா




சிரிப்...
என்ன பலூனுங்க இது! ஊதவே மாட்டேங்குதே...?
பையன் தான் 'ஊதா' பலூன் கேட்டான்...
மதுக்கூர் ரமேஷ்
அவரு ஏன் இப்படி மேலும் கீழும் குதிக்கிறாரு?
மருந்தை குலுக்காம குடிச்சிட்டா ராம்
சந்தோஷ்
சந்திரனுக்கு ஏண்டா நீ போக மாட்டேங்கறே?
அங்கே காத்து இல்லையாமே... காத்தாடி விட முடியாதே.
வி.ராஜப்பா
அறுக்க சிறந்தது ரம்பமா நீயாடா?
ரெண்டும் இல்லை. நீதாண்டா!
கு.அருணாசலம்
ரேஷன் கடைல என்ன போடறாங்க?
சண்டை!
ஸ்ரீவித்யா காளிதாஸ்
உப்புமா பண்ண முடியாத ரவை எது?
துப்பாக்கி ரவை!
கௌண்டின்யன்

நூறு ரூபாய் இரகசியம்



டாக்டர் பூவண்ணன்

12. மருது

பரதன் தோட்டத்துக்குள்ளே இருந்த ஓட்டு வீட்டை நோக்கி மெல்ல நடந்தான்.

ஓட்டு வீட்டின் வெளிக்கதவு மூடியிருந்தது. பரதன் அதைக் கையால் தொட்டு, மெதுவாகத் தள்ளிப் பார்த்தான். கதவு திறக்கவில்லை. அது உட்புறமாகத் தாளிடப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான்.

வீட்டை ஒட்டி மெல்ல நடந்த பரதன், கிழக்குப் பகுதியை அடைந்தான்.

அங்கே ஒரு சன்னல் இருந்தது.

பரதன் சன்னலருகே சென்றான்.

சன்னல் உயரத்தில் இருந்தது. பரதனால் சன்னல் வழியே உள்ளே பார்க்க முடியவில்லை. அதே நேரத்தில் உள்ளே இருந்து பேச்சுக் குரல் கேட்டது. பரதன் உற்றுக் கேட்டான்.

''என்ன தம்பி, உன்னை எனக்குத் தெரியாதா? முதலாளியிடமிருந்து சீட்டு வாங்கிட்டு வந்திருக்கறையே.''

''சோமு அண்ணே, என்னை உனக்குத் தெரியும். ஆனால், நான் இங்கே வர்ற போது நீ இல்லாம, வேறே யாராவது இருந்தா என்ன செய்யறது? அதனாலே தான் ஐயாவிடம் கடிதம் கேட்டேன். அவர் பெரிய மனுஷர். விசிட்டிங் கார்டிலே 'இவர் கேட்பதைக் கொடுத்தனுப்பவும்'னு எழுதிக் கொடுத்துட்டார். இங்கே வந்து பார்த்தா, எனக்குப் பழக்கமான நீங்களே இருக்கிறீங்க, இல்லேன்னா, கேட்டதைக் கொடுக்கவும்னு ஒரு முதலாளி எழுதித் தருவாரான்னு மத்தவங்களுக்கு சந்தேகம் வரும்.''

''தம்பி மருது, நீ கோயமுத்தூருக்கு வந்து பல நாளாச்சன்னு சொல்றே. அப்புறம் ஏன் இவ்வளவு தாமதிச்சு வர்றே?''

''அண்ணே, சமயத்திலே நாம ரொம்ப புத்திசாலி, நமக்குத் தெரிஞ்ச வழி பிறருக்குத் தெரியலே... தெரியாதுன்னு நினைக்கிற திமிர் எங்கிட்டே இருக்கு. அதுக்கு ஒரு பலமான அடி கிடைச்சுட்டுது. இல்லேனா, உங்க டெலிபோன் நம்பரை ஒரு காகிதத்திலே எழுதியிருக்க மாட்டேனா? அப்படிச் செய்யாம, ஒரு பக்கம் அச்சான நம்ம நூறு ரூபா நோட்டிலே இருக்கிற நம்பரைப் பார்த்து, அதிலேயிருந்த சைபரை ஆறா மாத்தி எனக்கு நானே சபாஷ் போட்டுக்கிட்டேன். அதனாலே வந்தது தான் எல்லா சங்கடமும்.''

பரதன் இதைக் கேட்டதும் திடுக்கிட்டான். உள்ளே பேசுகிற இருவரில் ஒருவன் - சோமு அண்ணன், இந்தத் தோட்டத்தைச் சேர்ந்தவன். 'மருது தம்பி' என அழைக்கப்பட்டவன், நிச்சயமாக அதிசயப் புருவத்தினர் இருவரில் ஒருவன்.

உள்ளே இருப்பவன் புருவமில்லாதவனா? டீத் பிரஷ் புருவத்தானா?

அதை உடனே தெரிந்து கொள்ளும் ஆவல் பிறந்தது. ஆனாலும் பரதன் அவர்கள் மேலும் பேசுவதைத் தொடர்ந்து கேட்க விரும்பி, வேறு செயலில் ஈடுபடவில்லை.

''டெலிபோன் நம்பருக்கும் நூறு ரூபாய் நோட்டு நம்பருக்கும் என்ன சம்பந்தம்? மருது கொஞ்சம் விளக்கமாகச் சொல்லு?''

''சொல்றேன்.''

உள்ளே இருந்த மருது அந்த 'நம்பர் கதை'யை விளக்கமாகச் சொன்னான்.

மருதுவின் சொந்த ஊர் சிவகாசி. மருதுவின் அண்ணன் மாணிக்கம் ஒரு அச்சகம் நடத்தி வந்தான். அதில் வந்த லாபம் போதவில்லை. அதனால் கள்ள நோட்டு அச்சிட்டான். தான் அச்சிடும் நோட்டுகளை சென்னை, பெங்களூர், கோயம்புத்தூர் ஆகிய மூன்று ஊர்களில் மூன்று பெரிய புள்ளிகள் மூலம் மக்களிடம் பரவ விட்டான். இதை அவ்வப்போது மேற்பார்வை பார்க்க, தனக்குச் சேர வேண்டிய பணத்தை வசூல் செய்ய தன் தம்பிகள் மருதுவையும், சண்முகத்தையும் இந்த ஊர்களுக்கு அனுப்புவான். இந்தத் தம்பிகளும் கள்ள நோட்டு வியாபாரத்தில் தாமே ஈடுபடுவதுண்டு.

பெங்களூரில் சில மாதங்கள் தங்கிய மருதுவையும் சண்முகத்தையும் அண்ணன் மாணிக்கம் கோயம்புத்தூருக்குப் போகச் சொன்னான். தம்பிகள் இருவரும் மறுநாளே கோவைக்குப் புறப்படுவதாகச் சொன்னார்கள்.

''கோயம்புத்தூரின் போன் நம்பர் சொல்றேன். எழுதிக்கோ. அங்கே போய் இந்த நம்பரைக் கூப்பிட்டு, நமது சங்கேதச் சொல்லைச் சொல்லு. அட்ரஸ் தரு



வாங்க. அப்புறம் அந்த இடத்துக்குப் போகலாம்'' என்றான் அண்ணன்.


''எதுக்கு போன் நம்பர்? எனக்குத் தான் அந்த இடமே தெரியுமே! ஆனைக் கட்டியிலே இருக்கிற தோட்டந்தானே? ஆறு மாசத்துக்கு முன்னாடி போயிருக் கேனே?'' என்றான் மருது.

''ஒரே இடம் ரொம்ப நாள் இருக்கக் கூடாது. அதனால் மாத்திட் டாங்க. புது போன் நம்பரை எழு திக்கோ. 42695.''

மாணிக்கம் சொன்னதைக் கேட்டு மனத்தில் பதித்துக் கொண்ட மருது. அச் சகத்தின் குப்பையிலிருந்து ஒரு பக்கம் அச்சான ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்தான். அவன் பார்வை நோட்டின் நம்பரில் பட்டது.

''042095! அடே, சைபரை மாத்தினா நமக்குத் தேவையான நம்பர் வரும்'' என்று நினைத்த மருது, இரண்டாம் சைபரை ஆறாக்கி, நோட்டை இரண் டாய் மடித்துப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்.

மருதுவும் சண்முகமும் கோயமுத் தூரை அடைந்து ஆர். எஸ். புரத்தில் ஒரு ஓட்டலில் தங்கினார்கள். காலாற நடந்து வந்து ஜி.சி.டி. வளாகத்தில் நுழைந்து ஓய்வெடுத்துக் கொண்டார்கள்.



மருது கைக்குட்டையை வெளியே எடுத்த போது, பாக்கெட்டிலிருந்த நோட்டு கீழே விழுந்து விட்டது. அதைக் கவனிக்கவில்லை.

இருவரும் ஜி.சி.டி.யிலிருந்து வெளியேறி ஓட்டல் அறைக்குச் சென்றனர். அங்கே போன் செய்ய நோட்டைத் தேடிய போது, அது கிடைக்கவில்லை.

அந்த நோட்டு எங்கே விழுந்தது?

'ஜி.சி.டி. வளாகத்தில் விழுந்திருக்குமோ?' என்று சந்தேகம் கொண்டதால் மீண்டும் அங்கே சென்று பார்த்தனர்.

நோட்டுக் கிடைக்கவில்லை.



'போனால் போகட்டும். சிவகாசிக்கு ஒரு கால் போட்டா அண்ணாச்சி சொல்லிடுறார்' என்று மருது நினைத்தான்.

சிவகாசி அச்சகத்துக்குப் பலமுறை போன் செய்தும் அதை யாரும் எடுக்கவில்லை. வீட்டுக்குப் போன் செய்தும் பலனில்லை.

சிவகாசியில் கள்ள நோட்டு அச்சாவது காவல் துறைக்குத் தெரியும். போலீஸின் தேடல் அதிகமாவது தெரிந்து மாணிக்கம் தலைமறைவாகி விட்டான். மாணிக்கத்தின் குடும்பம் குமரிமாவட்டத்தில் உள்ள சொந்த ஊருக்குப் போய் விட்டது. இந்த விஷயம் அப்போது தெரியாது. இன்று மாலை சுமார் நாலு மணிக்கு ஒரு ஓட்டலில் மயில்சாமி தோட்டத்துச் சொந்தக்காரரும் ஆனைக்கட்டி தோட்டத்தில் கள்ளநோட்டைப் பதுக்கி வைத்தவருமான தங்கவேலுவைத் தற்செயலாகச் சந்தித்த போது தான் தெரிந்தது.

போன் நம்பர் அவசியம் தேவை!

அதை எப்படிக் கண்டுபிடிப்பது?

போன் நம்பர் நினைவில் இருக்கிறதா?

மருது யோசித்தான்.

''நோட்டின் முதல் நம்பர் ஜீரோ. அது நமக்கு டம்மிதான். தேவையில்லை. அப்புறம் நாலு ரெண்டா? ரெண்டு நாலா? மூணாவது நம்பர் ஜீரோ. அதை ஆறாக்கினோம். அப்புறம் ரெண்டு நம்பர் என்ன?''

மருது திணறினான்.

பிறகு, ''420 என்று மூன்று நம்பரை சுழற்றி, பிறகு ஏதோ ரெண்டு நம்பரைப் போட்டு, சங்கேதச் சொல்லான, 'சதாவதானி இருக்கிறாரா' என்று கேட்போம். இருக்கிறார் என்றால், நாம் 'நான் தசாவதானி'ன்னு பதில் சொன்னால், நமக்கு எல்லா விவரமும் கிடைக்கும்'' என்று முடிவு செய்த மருது ஓட்டல் அறையிலிருந்து பல நம்பருக்குப் போன் செய்தான். 'சதாவதானி இருக்கிறார்' என்ற பதில் வரவில்லை.

42 என்று முதல் இரண்டு எண்களுடன் பல வேறு எண்களைச் சேர்த்துச்

சொல்லி, தொடர்புபடுத்துமாறு ஆபரேட்டரிடம் மருது கேட்டான். ஏராளமான எண்களுக்குத் தொடர்பு தந்த ஆபரேட்டர், ''சார், டைரக்டரியைப் பார்த்து சரியான நம்பர் சொல்லுங்க. இல்லே பேரைச் சொல்லுங்க. நான் சரியான நம்பரைக் கண்டுபிடிக்க சொல்றேன்'' என்று அலுத்துக் கொண்டதுடன், ''யாரு சார் சதாவதானி? அவருக்குப் பேரில்லையா?'' என்றும் கேட்டான். ஆபரேட்டர்தான் பேசுவதையும் கேட்டிருக்கிறான் என்பது அப்போதுதான் மருதுக்குத் தெரிந்தது. அதற்கு பின்பு மருது, ஓட்டலில் போன் செய்வதை விட்டு விட்டான்.

மருதுவும் சண்முகமும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு எண்களுக்குப் போன் செய்தார்கள். மற்றவர்களுக்குச் சந்தேகம் வரக் கூடாது என்று ஒரு போனில் ஒருமுறை மட்டுமே போன் செய்தார்கள்.

ஆர்.எஸ்.புரத்தை விட்டு விட்டு டவுன் ஹால் பகுதியில் போன் செய்தார்கள். ரயில் நிலையப் பகுதியிலிருந்து போன் செய்தார்கள். கடைசியில் காந்தி புரத்தில் போன் செய்து வந்த போது தான், பரதன் அவன் மீது மோதி, அவனைத் தள்ளி, ''ஒரு பக்கம் இருக்கிறது'' என்று சொன்னான்.

மருது அவனிடமிருந்து தப்பி ஓடி, ஒரு ஆட்டோவில் பின்தொடர்ந்து சென்று பரதனின் வீட்டைக் கண்டுபிடித்தான்.

மறுநாள் நடுப்பகல், மருதுவும் சண்முகமும் பரதன் வீட்டில் நுழைந்து, தமக்குத் தேவையான கள்ள நோட்டைத் தேடினர். அது கிடைக்காமல் ஏமாந்து ஓட்டலுக்குத் திரும்பினர்.

இருவரும் ஓட்டலில் நுழையும் போதே, அங்கிருந்து வெளியே செல்லும் ஒருவரைக் கண்டு முகம் மலர்ந்தான் மருது. அவர்தான் கள்ள நோட்டின் கோயமுத்தூர் ஸ்டாகிஸ்ட்டான தங்கவேலு.

தங்கவேலுவிடம் மருது, போன் நம்பர் தவற விட்ட கதையைச் சொன்னான். அவர், போன் நம்பர், மயில்சாமித் தோட்ட முகவரி, அங்கே போகும் வழி எல்லாம் சொல்லி, விசிட்டிங் கார்டில் எழுதியும் கொடுத்தார். ஒரு மணி நேரத்துக்குப் பின் சண்முகத்தை ஓட்டலில் விட்டு விட்டு மருது மட்டும் மயில்சாமி தோட்டத்துக்கு வந்து சேர்ந்தான்.

மருது இவ்வளவையும் சொல்லி முடித்தான்.

''தம்பி மருது, நீ சொன்னது ஏதோ மர்மக் கதை படிச்ச மாதிரி இருக்கு'' என்றான் சோமு.

சன்னலுக்கு வெளியே இருந்து அனைத்தையும் கேட்ட பரதன், தானும் விக்டரும் செய்த யூகங்கள் ஓரளவு சரியாக இருந்ததை எண்ணி வியந்தான். ''உள்ளே தன் கதையைச் சொல்பவன் யார்? புருவம் இல்லாதவனா? டூத் பிரஷ் புருவக்காரனா?'' என்று யோசித்த பரதன், அதையும் யூகிக்காமல் பார்த்தே தெரிந்து கொள்ள விரும்பினான்.

தான் இருக்கும் இடத்தைச் சற்று நிதானமாகப் பார்த்தான் பரதன்.


''ஞாயிற்றுக் கிழமை வந்துட்டாலே எனக்கு சுத்தமா பிடிக்காது.''

''ஏன்.... ஸ்கூல் லீவுன்னா...?''

''ஊஹூம்; ஞாயிற்றுக்கிழமை முடிந்ததும், தொடர்ந்து 5 - நாள் ஸ்கூலுக்குப் போக வேண்டியிருக்கே, அதனாலதான்!''

– சீர்காழி வி. ரேவதி





''பத்து ரூபாய் கொடுங்கப்பா – அப்புறம் தர்றேன்!''

''எப்போ தருவே...?''

''உங்க சம்பளம் வந்ததும்!''

– வலங்கை லதா ராஜசேகர்

சிறிது தூரத்தில் ஒரு கல் இருந்தது. அதன் மீது ஏறி நின்றால், சன்னல் வழியே பார்க்கலாம்.

பரதன் அந்தக் கல்லைப் புரட்ட முயன்றான். அது அவ்வளவு எளிதாக இல்லை. என்றாலும் மூச்சுப் பிடித்துத் தள்ளினான்.

ஒருமுறை உருண்ட பின்பு, கல் எளிதாகத் தொடர்ந்து உருண்டது.

சன்னல் அருகே கல் வந்ததும் பரதன் அதன் மீது ஏறி நின்றான்.

அறைக்குள் இருந்த சோமுவின் காதில் கல் உருளும் ஓசை கேட்டது. அவன் எழுந்து சன்னலருகே வரவும், சன்னலில் பரதன் உருவம் தெரியவும் சரி யாய் இருந்தது.

''யாருடா நீ?'' என்று சோமு கேட்டான்.

'என்ன பதில் சொல்லலாம்?' என்று பரதன் யோசித்துக் கொண்டிருந்த போதே, அறைக்குள் இருந்த மருதுவும் சன்னலருகே வந்தான். அவன் பரதனைப் பார்த்ததும், ''அண்ணே, என் மீது ஒரு குள்ளன் மோதினான்னு சொன்னேனே, அவன் தான் இவன். இவனை விடக்கூடாது'' என்று கத்தினான்.

கத்தியவன் புருவமில்லாதவன் என்பதைப் பார்த்த பரதன், சன்னல் கம்பியை விட்டு விட்டுக் கல்லிலிருந்து கீழே குதித்தான்.

உள்ளே இருப்பவர்கள் வடக்கே இருக்கும் கதவைத் திறந்து வெளியே வருவார்கள். அதனால் வடக்கே போகக் கூடாது. தெருவை நோக்கி ஓடினால், ஞானத்தையும் கருமாரையும் அவர்கள் பார்த்து விடலாம். அதனால் கிழக்கு நோக்கி ஓடுவோம் என்று நினைத்த பரதன் கிழக்கு நோக்கி ஓடினான்.

''பரதா, ஓட்டத்துக்குப் பயிற்சி மட்டும் போதாது. ஒரு லட்சியம் வேண்டும். உணவைத் தேடி ஓடுகிற வேட்டை நாயை விட, உயிரைக் காக்க ஓடும் முயலின் ஓட்டத்தில் வேகம் அதிகம் இருக்கும் என்கிறார் ஈசாப். அதனால் லட்சிய வேட்கைக்கு ஏற்பவே ஓட்டத்தின் வேகம் அமையும்.''

குருநாதர் வெள்ளியங்கிரியின் குரல் பரதனின் காதில் விழுந்தது.



நீயம்மா!

அன்னை என்பவள் நீயம்மா!
அன்புத் தெய்வமும் நீயம்மா!
எண்ணத் தீபமும் நீயம்மா!
இதயக் கோயிலும் நீயம்மா!

உண்ணச் செய்பவள் நீயம்மா!
ஒழுக்கம் தருபவள் நீயம்மா!
கண்ணிற் கிமையும் நீயம்மா!
கருணைக் கடலும் நீயம்மா!

உண்மைச் சின்னமும் நீயம்மா!
உழைப்பின் உருவமும் நீயம்மா!
பெண்மைக் கிலக்கணம் நீயம்மா!
பெருமைக்குடையவள் நீயம்மா!

பண்புச் சந்நிதி நீயம்மா!
பாசச் சந்தனம் நீயம்மா!
தொண்டிற் கரைபவள் நீயம்மா!
தொழுகைக் குரியவள் நீயம்மா!

- தளவை. இளங்குமரன்.

''எனக்குப் பேருதவி செய்த நாகவின் தந்தையைப் பழியிலிருந்து மீட்க வேண்டும். சமூகத் துரோகியான கள்ள நோட்டுக்காரர்களைத் தப்ப விடாமல் மடக்க வேண்டும். அதனால் காலே ஓடு! ஓடு! ஓடு! மூச்சு வாங்கினாலும் ஓடு! மூச்சே நிற்பதானாலும் ஓடு! ஓடு! ஓடு!''

பரதனின் மனம் மந்திரம் போல் ஜபிக்க, அந்தக் குள்ளக் கால்கள் புள்ளி மானின் கால்களாய்த் தாவின. பரதன் ஓடினான்! ஓடினான்! ஓடிக் கொண்டே இருந்தான்!

எதிரே திறந்தவெளி! பொட்டல் காடு!

பின்னே அதிசயப் புருவத்தானும் மற்றொருவனும் ஓடி வருகின்றனர்.

பரதன் ஓடினான்.

தோட்டத்தின் நடுவே இருந்த கிணற்றை நெருங்கினான்.

கிணற்றுக்கு அருகே தண்ணீர் பம்பை இயக்குகின்ற சுவிட்ச் இருக்கும். சிறிய கொட்டகை. அதன் பின்னே சென்று, மறைந்து நின்றான், பரதன்.

''விரட்டி வருபவர்களிடமிருந்து, மறைவிடம் இல்லாத திறந்தவெளியில் ஓடித் தப்ப முடியாது. இந்தக் கொட்டகையும் பாதுகாக்காது. என்ன செய்யலாம்?''

பரதன் கிணற்றைப் பார்த்தான்.

அதிலே உள்ளே இறங்கப் படிகள் இருந்தன.

உடனே பரதன் அந்தப் படிகளில் கால் வைத்து உள்ளே இறங்கினான்.


சில விநாடிகளில் கிணற்றருகே வந்த இருவரும் நின்றார்கள். ஒருவன் கொட்டகைக்குள் பார்த்தான். பரதன் அங்கே இல்லை.

''கிணற்றில் இறங்கி இருப்பானோ?'' மோனலிசா புருவத்தானான மருது கேட்டான்.

''இருக்கலாம். வா, நாமும் இறங்கிப் பார்க்கலாம்'' என்றான் சோமு.

இருவரும் பரதன் இறங்கிய அதே படிகளில் கால் வைத்து உள்ளே இறங்கினர்.

(அடுத்த இதழில் பரதன் வாசகர்களிடமிருந்து விடைபெறுகிறான்!)



ஆஸ்திரேலியாவின் வடக்கு பிரதேசத்தில் ஆலிஸ்பிரிங்ஸிலிருந்து 400 கி.மீ. தொலைவில் உள்ள பாலைவனத்தில் உலகிலேயே மிகப் பெரிய கற்பாறை உள்ளது. இதனை முதலில் 1873 - ல் ஒரு பிரிட்டிஷ்காரர் கண்டறிந்து அன்றைய பிரதமர் 'ஹென்றி ஏயர்ஸ்'ன் பெயரைச் சூட்டினார். இதன் சிறப்பு என்ன தெரியுமா? இது அவ்வப்போது நிறம் மாறிக் காட்சியளிக்கிறது! இதன் இயற்கை நிறம் நீலம் கலந்த சாம்பல். ஆனால், வெயிலில் அது சிவப்பாகவும், நண்பகலில் பழுப்பாகவும், மாலையில் நீலம் கலந்த சிவப்புப் பாறையாகவும் காட்சியளிக்கிறது. 600 மீ. உயரமும் 11 கி.மீ. சுற்றளவும் உள்ள இது தொலைவில் இருந்து காண்பதற்கு சிவப்புக் கூடாரம் போன்று காட்சியளிக்கிறது, இந்தப் பச்சோந்திப் பாறை!

– என். சீதாராமன்



ரிக்ஷாவில் வந்த கர்ணன்

சாரதா நாகரத்தினம்

காதுகளில் குண்டலங்களும், மார்பில் கவசமுமாய், மகாபாரதக் கர்ணன், 'சைக்கிள் ரிக்ஷாவில்' வந்து கொண்டிருந்தான்!

சைக்கிள் ரிக்ஷாவில் வந்ததால் அவன் முகத்திலும், வீற்றிருந்த கோணத்திலும் கம்பீரம் குறையவில்லை!

சைக்கிள் ரிக்ஷாவில் கர்ணனா?

ஆமாம்! திகைக்காதீர்கள்! மாறுவேடப் போட்டியில் கர்ணனாக வேடமிட்ட ராஜாதான் வேடத்தைக் கலைக்காமல் தன் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான். வீதியில் அவனைப் பார்த்துச் சிலர் சிரித்தனர்! அவன் அழகையும், கம்பீரத்தையும் பார்த்து வியந்து மகிழ்ந்தனர் பலர்.

கர்ணன் வேடத்தைக் கலைக்காமல் வீடு வருவதற்குக் காரணம், அவனுடைய அம்மாதான். அவன் வேடமேந்திய அழகைக் காண வேண்டும் என்று ஆசைப் பட்டாள். தன் அம்மாவின் ஆசையை நிறைவேற்றுவதற்காகத் தான் ராஜா கர்ணனாக சைக்கிள் ரிக்ஷாவில் வந்து கொண்டிருந்தான்.

வீட்டில்....

அப்பாவும், அம்மாவும் அவனைப் பார்த்துப் பார்த்து வியந்து மகிழ்ந்தார்கள்.

என்னமாயிருக்கிறது வேடப் பொருத்தம்!

தன் கண்ணே பட்டுவிடுமோ என்ற எண்ணத்தில் அம்மா 'திருஷ்டி' சுற்றிப் போட்டாள். ராஜாவை அணைத்துக் கொண்டு முத்தமிட்டாள். அம்மாவின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர்.

அந்தக் காட்சி குந்தியும், கர்ணனும் பாரதத்தில் முதல் முதலாகச் சந்திக்கின்ற காட்சியை நினைவூட்டியது!

அம்மா அப்பொழுதுதான் கவனித்தாள்.

''ராஜா.... நீ போகும் போது போட்டிருந்த சட்டையெல்லாம் எங்கே? பள்ளியிலேயே வைத்துவிட்டு வந்து விட்டாயா?'' என்று தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

''மறக்கவில்லை அம்மா. நினைவோடுதான் கொண்டுவந்தேன். வரும் வழியில் பிச்சை எடுக்கும் சிறுவன் ஒருவன் என்னை ஏக்கத்தோடு பார்த்தான். அவன் உடம்பில் சட்டை இல்லை. நான்தான் கொடுத்து விட்டேன்'' என்றான் கர்ணனாக இருந்த ராஜா.

அம்மா அதிர்ச்சி அடைந்தாள்.

''புதுச் சட்டை ஆயிற்றே! அதையா கொடுத்தாய்?'' - அப்பா வியப்போடு கேட்டார்.

''ஆமாம்... கர்ணனாக நான் மாறிய போது ஏதாவது, எவருக்காவது

கொடுக்க வேண்டும் என்ற உணர்வு எனக்கு அரித்துக் கொண்டே இருந்தது. அந்த ஏழைச் சிறுவனைப் பார்த்ததும் உடனே கொடுத்து விட்டேன்'' என்றான் ராஜா.

அம்மாவும் ஆச்சரியப்பட்டாள்.

'இல்லை' என்று வருபவருக்கு 'இல்லை' என்று கூறாமல் வாரி வழங்கியவன் மகாபாரதக் கர்ணன். அவன் வேடத்தை, சாதாரண மானிடச் சிறுவன் ராஜா போட்டதும், கர்ணனின் குணமும் குடியேறி விட்டது!

அம்மாவால் அவனைத் திட்டவும் முடியவில்லை. கர்ணனைப் பார்த்து 'ஏண்டா தர்மம் பண்ணினே' என்று கேட்கலாமா?

''ராஜா.... நீ உள்ளே போய் வேடத்தைக் கலைச்சுட்டு வா.... எங்களை மகிழவைத்த உன்னை நாங்களும் மகிழ்விக்கப் போகிறோம்'' என்றார் அப்பா.

''என்னப்பா அது?''

''இப்போ சொல்ல முடியாது. உள்ளே போய் பழைய 'ராஜாவாகத்' திரும்பி வா.... சொல்றேன்'' என்றார் அப்பா உறுதியாக.



ராஜா உள்ளே சென்றான்.

வேடத்தைக் கலைத்துவிட்டு, திரும்பி வந்து அப்பாவின் முன்னால் நின்றான்.

''என்னப்பா, சொல்லுங்க?''

''ராஜா.... அழகான வேடத்தில்

பணத்தை ஆசையோடு வாங்கிய ராஜா மிகவும் மகிழ்ச்சி அடைந்தான்.

''ஏங்க... சற்று முன்னால் பணத்தைக் கொடுத்தால் என்னவாம்? 'கர்ணன்' மகிழ்ச்சி அடைந்திருப்பான் அல்லவா!'' என்று கேட்டாள் அம்மா.



அற்புதமாக இருந்த உனக்கு நாங்களும் ஒரு பரிசு தரப்போறோம். என்ன தெரியுமா? நீ பள்ளிக் கூடத்துச் சுற்றுலாவில் கலந்து கொள்ள பணம் கேட்டிருந்தாயே.... இந்தா நூறு ரூபாய்... இது தான் எங்கள் பரிசு'' என்றவர் பணத்தை அவனிடம் தந்தார்.

கர்ணன் வேடத்தில் ராஜாவின் மகிழ்ச்சியைப் பார்த்து மகிழ்ச்சி அடையலாமே என்ற ஆசை அம்மாவுக்கு.

''அதற்கும் காரணமிருக்கிறது'' என்றார் அப்பா.

''என்னங்க காரணம்?''



கோடைவெயில் வந்துவிட...

மழைஇன்றி செடிகொடிகள்
மரம்வாடி வான்பார்க்கும்
உழைப்பாளர் பெருமக்கள்
உடல்வாட வெயில்வீசும்.

உயிர்காக்கும் குளம், குட்டை
உருமாறிப் போய் இருக்கும்
பயிர் காக்கும் கிணறுகளும்
பாதாளம் போய்ச்சேரும்.

துள்ளுகிற ஆறுகளும்
சோகமுடன் நடைபயிலும்
பள்ளிசெல்லும் இளம் செல்வர்
படிக்காமல் ஓய்வெடுப்பார்.

சோலையெனச் சிரித்திருக்கும்
தோட்டமது வாடிவிடும்
பாலைவனம் போல் எங்கும்
பயிர்பச்சை கருகிவிடும்.

உண்பதற்கு மேல்நீரை
ஓயாமல் குடித்திடுவார்.
தண்ணீரைக் குடித்தாலும்
தாகமது தீராது.

ஓடையிலே நீர்வற்ற
ஊர்எங்கும் காய்ந்துவிடும்
கோடைவெயில் வந்து விட
குடிநீரும் கிடைக்காது!

- அழகனார்.

நம்ம ராஜா கர்ணனாக வேடமிட்ட போது மனத்தளவில் அவன் 'கர்ணனாகவே' மாறியிருக்கிறான். இல்லேன்னா, தானாகவே வாங்கிக் கொண்ட அந்த விலை உயர்ந்த சட்டை, பேண்ட்டை கேட்டவுடன் ஏழைக்கு அவன் கொடுத்திருப்பானா? அப்படி கர்ணனா மாறியிருந்த அவனை நாம்ப, கை ஏந்தி கொடுப்பதை வாங்கும்படி வைக்கலாமா? கர்ணனின் கரங்கள் கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்கள் இல்லையா? அவன் எதற்கும், எவரிடமும் ஏந்தியது இல்லை! ராஜா, கர்ணனாக மாறிவிட்ட பிறகு, அதற்குரிய பெருமையை நாமும் தர வேண்டும் என்றே அவன் வேடத்தைக் கலைத்த பிறகு தந்தேன்'' என்றார் அப்பா.

எல்லோரும் சிரித்தனர்.

அடுத்த நாள் ராஜா, பஸ் ஸ்டாப்புக்கு அருகே நேற்றுச் சந்தித்த அதே ஏழைச் சிறுவனைப் பார்த்தான். அவன் உடம்பில் நேற்று கர்ணனாக ராஜா மாறிய போது கொடுத்த நல்ல சட்டை.

எத்தனை நல்ல சட்டை? ஒரு கிழிசல் கூடக் கிடையாது. இரண்டே தடவைதான் போட்டிருந்தான். அத்தனை அருமையான சட்டையைக் கொடுத்துவிட்டோமே என்று இப்போது அவன் மனம் சிறிது வருந்தியது. இது என்ன அற்பத்தனமான எண்ணம்! நேற்று சிறுவன் கேட்டதும் இரங்கி கொடுத்த இளகிய மனம் இப்போது எங்கே போனது.

ஒன்று மட்டும் ராஜாவுக்கு உறுதியாகப் புரிந்தது. நாம் நம்மை என்னவாக எண்ணுகிறோமோ அதுவாகவே ஆகிவிடுகிறோம். நேற்று அவன் கர்ணனாக இருந்தான். அதனால் மனம் இரங்கியது. இன்று வேஷம் கலைந்ததும் பழைய ராஜாவாக ஆகிவிட்டான். இதனால்தான் பெரியவர்கள், உயர்ந்த இலட்சிய புருஷர்களையே நமது முன்னோடிகளாக நாம் எண்ணி அவர்களைப் போலவே நாமும் மாறி வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று போதித்தார்கள்!



கால் முளைத்த நோட்டு!

புதுவை கலைச்செழியன்

இறுதித் தேர்வுக்கு இன்னும் பத்து நாட்களே இருந்தன. அந்தக் கல்வியாண்டில், பள்ளி தொடங்கியதிலிருந்து இது வரை கவனமாக ஏட்டில் எழுதி வைத்திருந்த ஆங்கிலப் பாடக் குறிப்புகளைப் பார்த்துப் படித்துக் கொண்டிருந்தான் கார்மேகம். ஆசிரியர் முக்கிய மானவை என்று கொடுத்த குறிப்புகள் அவை.

வகுப்பில் பாடம் நடக்கும்போது, அப்படி இப்படி பராக்குப் பார்க்க மாட்டான் கார்மேகம். ஆசிரியரின் முகத்தையே, அவனது கண்கள் கூர்ந்து நோக்கும். அவர் பேசுவதை காது கவனித்துக் கேட்கும். உள்ளம், கருத்துக்களை ஆழ்ந்து கிரகித்துக் கொள்ளும். கையிலுள்ள பேனாவோ, எல்லாவற்றையும் தாள்களில் விரைந்து குறித்துக் கொள்ளும்.

இதனால், நடந்த பாடங்களில் முக்கால் பகுதி வகுப்பறையிலேயே கார்மேகத்திற்குப் புரிந்துவிடும். வீட்டில் வந்து குறிப்புகளை ஒழுங்குபடுத்திக் கோவையாக எழுதி, ஒரு முறை படித்துப் பார்த்ததும், கொஞ்ச நஞ்சம் இருக்கும் சந்தேகமும் அறவே நீங்கிவிடும்.

கார்மேகம் எழுதப் போவது, இடைநிலைக் கல்வி இறுதிச் சான்றிதழ்த் தேர்வு எனப்படும் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை. அதற்கு ஆயத்தம் செய்து கொள்வதற்காகப் பத்து நாட்கள் விடுமுறை கொடுத்திருந்தார்கள். இரண்டு நாட்களுக்கு ஒரு பாடம் வீதம் குறிப்புகளை வைத்துக் கொண்டு, திருப்பிப் பார்த்து விட வேண்டுமென்ற திட்டம் அவனுக்கு.

இன்றும், நாளையும் ஆங்கிலத்திற்கு என்று ஒதுக்கப்பட்டு விட்டன. ஏட்டைப் புரட்டி, பாடப்பகுதிகளை மனத்திற்குள் ஒரு முறை சொல்லி நினைவு படுத்திக் கொண்டிருந்த கார்மேகத்தின் கவனத்தைத் திருப்பியது, உள்ளேயிருந்து வந்த அம்மாவின் குரல்.

''கார்மேகம், இங்கே கொஞ்சம் வந்து விட்டுப் போறியா?''

''ஏன்மா? நான் பரீட்சைக்குப் படிச்சிக்கிட்டு இருக்கேனே!''

''ரேஷன்லே சர்க்கரை போடறானாம். வீட்டிலே சர்க்கரை துளிக்கூட இல்லை. துடைச்சு வைச்ச மாதிரி ஜாடி இருக்கு. போய் வாங்கிக்கிட்டு வந்துடுறா, கண்ணு!''



"இராணுவ வீரருக்கு பிடித்த மாதம் எது?"

"'மார்ச்' தான்!"

- சீர்காழி பலராமன்



"குளிருக்கு பயப்படாத கிரிக்கெட் வீரர் யாரு?"

"கம்பிளிதான்!"

- சீர்காழி வி. ரேவதி



"காப்பி போட முடியாத பால் எது?"

"தபால்..."

- கே. சீனுவாசன்

இன்றைக்கு விட்டால், நாளைய மறுநாள்தான் சர்க்கரை வாங்க முடியும். நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. அத னால், அம்மா சொல்வதிலும் நியாயம் இருக்கிறது.

சர்க்கரையை வாங்கிக் கொடுத்து விட்டுத் தன் அறைக்குள் நுழைந்து மேசையைப் பார்த்த கார்மேகம், திடுக் கிட்டான்! அங்கே வைத்திருந்த அவனது ஓராண்டு உழைப்பான குறிப்புகள் அடங்கிய ஆங்கில ஏட்டைக் காண வில்லை! மேசை இழுப்பறை களைத் திறந்து தேடினான். பக்கத்து அலமாரி யைக் குடைந்து துருவினான். ஏடு கிடைக்கவில்லை. தொலைந்தது, தொலைந்ததுதான்!

''நான் கடைக்குப் போயிருந்த போது, யாராவது என் அறைக்கு வந் தாங்களா அம்மா?'' பரபரப்புடன் அம்மாவை வினவினான்.

''நான் வேலை மும்முரத்தில் வீட்டுக்குள்ளேயே இருந்தேன். கவனிக் கவில்லையேடா கார்மேகம்!'' என்ற படியே, அங்கே வந்தாள் அம்மா.

மகனின் முகத்தைப் பார்த்த அவ ளுக்கு, அவன் என்னவோ போல இருப் பது தெரிந்தது.

''கடைக்குப் போய் உடனே திரும் பிடலாம்ங்கிற அவசரத்தில, அறை யைப் பூட்டிக்காம போய்ட்டேன்மா! மேஜை மேல வச்சிட்டுப் போன என் இங்கிலீஷ் நோட்புக்கைக் காணோம்மா! நோட்டுக்குக் காலா முளைச்சுப் போயிருக்கும்?''

''என்னது! பணம் காசு கூட இல்ல... படிக்கிற பாட நோட்டையா காணோம்!'' அம்மா அதிசயித்தாள். ''ஏம்பா, அந்த நோட்டு இல்லாட்டி சமாளிச்சிக்க முடியாதா?''

அம்மாவின் கேள்வி விசித்திர மாகப் பட்டது கார்மேகத்திற்கு.

''என்னம்மா இது? சமாளிச்சிக்க முடியாதான்னு சர்வ சாதாரணமாய்க் கேட்டுட்டீங்க. வருஷம் பூரா எத் தனையோ சிரமப்பட்டு நான் எழுதின விஷயங்கள்லாம் அதிலேதான் இருக்கு. தெரியுமா? அதை ஒரு தடவை




புரட்டிப் பார்த்துட்டா போதும்; நிறைய மார்க் வாங்குவேம்மா! 'மணி மணியா எழுதி வெச்சிருக்கியே! பாஸ் பண்ணிப் போற போது, இந்த நோட்டை என்கிட்ட கொடுத்துட்டுப் போடா'ன்னு எங்க வகுப்பாசிரியரே ஆசைப்பட்டுக் கேட்ட நோட்டுக் அம்மா அது!''

''அவ்வளவு முக்கியமான நோட்டா! அட கடவுளே... எப்படி காணாமல் போயிருக்கும்? யார் வந்து எடுத்துக் கிட்டுப் போயிருப்பாங்க?'' அம்மா தன் ஆதங்கத்தைப் புலப்படுத்தினாள்.

''மறுபடியும் அப்படி ஒரு நோட்டை நான் தயாரிக்கவே முடியாதம்மா! அவனவனும் பரீட்சைக்கு மும்முரமா படிச்சிக்கிட்டு இருக்கிற சமயம். யாரிடமும் உதவி கேட்கவும் முடியாது!'' கண்கள் கலங்கின கார்மேகத்திற்கு.

அன்றையப் பொழுது அவசரம் அவசரமாக ஓடிப் போயிற்று. அடுத்த நாளும் வந்தது.

கார்மேகம் ஆங்கிலப் பாடத்தைக் கடைசி இரு தினங்களில் பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்து மற்ற பாடங்களைப் படிக்க முனைந்தான்.



"உன்னோட பட்டம் மட்டும் உயரப் பறக்குதே எப்படி?"

வேறு எதிலும் சிரத்தை செலுத்த வில்லை. காப்பி குடிக்கவோ, உணவு, சிற்றுண்டி அருந்தவோ அம்மா பல முறை வற்புறுத்தி அவனைக் கூப்பிட நேர்ந்தது. அறைக்குள்ளேயே சதா முடங்கிக் கிடந்தான். இரவு ஒன்பது மணிக்குத் தூங்கச் செல்பவன், பதி னோரு மணி வரைக்கும் கண் விழித்துப் படித்தான். குறிப்பிட்ட கெடுவுக்கு முன்னதாகவே இதர பாடங்களை முடித்து விட்டு, ஆங்கிலத்திற்கு அதிக நேரம் ஒதுக்கிக் கொண்டு விட வேண் டும் என்ற திட்டம் அவனுக்கு.

இயல்பாக இருந்த மகன் அதிகப் படியாக அலட்டிக் கொள்வது போல் பட்டது அம்மாவுக்கு.

''உடம்புக்கு ஏதானும் வந்துடப் போவுது, ராஜா! கொஞ்சம் கொஞ்சம் இடையிலே ஓய்வு கொடுத்துக்கிட்டி யானா தேவலாம்'' என்றாள்.

''எனக்கு அப்படியெல்லாம் ஒண் ணும் வராது, அம்மா! நான் நல்லாவே இருக்கேன். கவலைப் படாதீங்க!'' என்று அம்மாவின் மனத்தைத் திடப் படுத்தினான்.

ஆறு நாட்கள் வேகமாகப் பறந்து போனது தெரியவில்லை.

அன்று ஏழாவது நாள்.

இன்னும் நான்கே நான்கு தினங்கள் தான் பாக்கி.

'ஆண்டவனே, எனக்கு இப்படிப் பட்ட சோதனையைத் தந்து விட் டாயே!.... போனது போகட்டும். தளர்ச்சியடையாமல் ஆங்கிலத்தை முடிக்க மனோ திடம் கொடு' என்று மனத்திற்குள் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு, ஆங்கிலப் புத்தகத்தைப் புரட்டலானான் கார்மேகம்.

மறு நாள் காலை மணி ஆறு.

கை, கால், முகம் கழுவிக் கொண்டு கார்மேகம் தன் அறைக்கு வந்து நாற் காலியில் அமர்ந்தான். வாயிலில் நின் றிருந்த வேப்ப மரத்திலிருந்து சுகமான காற்று ஜன்னல் வழியே உள்ளே வந்து கொண்டிருந்தது.

''கார்மேகம்!'' என்ற மென்மை யான குரல் கேட்டு, வெளியே பார்த் தான் கார்மேகம்.

அங்கே, அவன் எதிர்பாரா வண்ணம் நின்று கொண்டிருந்தான் ஆராவமுதன். அவன் கையிலே... அது என்ன... காணாமல் போன இவனது ஆங்கில நோட்டுப் புத்தகம் அல்லவா இருக் கிறது! இது என்ன விந்தை!

''கார்மேகம்! உனக்குத் தீமை செய்ய நினைத்த என்னை மன்னிச் சுடுடா! இனி, கனவிலும் உனக்கு நான் துரோகம் நினைக்க மாட்டேன்!'' என்று சொல்லி நெடுஞ்சாண் கிடையாக அவன் காலில் விழுந்தான் ஆராவ முதன்.

அவனைப் பாசமுடன் தூக்கி நிறுத் தினான் கார்மேகம். ''நீ சொல்றது ஒண்ணும் புரியலியே, ஆராவமுது! என்ன நடந்தது? விவரமா எல்லாம் சொல்லு!'' என்றான்.

''நீ நன்றாகப் படிக்கிறாய். வகுப் பில் முதல் மார்க் எடுக்கிறாய், உன் கை யெழுத்து கண்ணில் ஒற்றிக் கொள்ள லாம் போலிருக்கே! ஆசிரியரே உன் நோட்புக்கை ஆசைப்பட்டுக் கேட்கும் அளவு உன்னோட நிலைமை உயர்ந் திருக்கு. இதெல்லாம் என் பொறாமை யைத் தூண்டி விட்டுடுச்சு, கார்மேகம். இந்த நோட்டை வச்சுத்தானே வரப் போற எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையில் இங்கிலீஷ்லே மார்க் தட்டப் போறே! இந்த நோட்டைக் கொடுத்துத்தானே ஆசிரியரோட நல்லெண்ணத்தைப் பெறப் போறே! அப்படி நடக்காத படி செய்துடணும்னு வெறி வந்துச்சு

எனக்கு! உன் நோட்டுக்கை, போன சனிக்கிழமை நீ இல்லாத சமயமா பார்த்து, தெரியாம கிளப்பிக்கிட்டுப் போயிட்டேன்....'' என்று சற்று நிறுத் தினான் ஆராவமுதன்.

''அடடே, தெரியாம ஏன் எடுத்துக்கிட்டுப் போகணும்? கேட்டே வாங்கிக்கிட்டுப் போயிருக்கலாமே!'' என்றான் கார்மேகம், சிரித்தபடி.

''உன்னோட இந்தப் பெருந்தன்மை எனக்குப் புரியாமல் போச்சு கார்மேகம்! எடுத்துக்கிட்டுப் போன நோட்டை கிணத்துக்குப் பக்கத்திலிருந்த தண்ணித் தொட்டியிலே நனைச்சு கூரைமேலே போட்டேன். அதில் உள்ள எழுத்து அத்தனையும் அழிஞ்சு, யாருக்கும் பயன்படக்கூடா துன்னு நினைச்சு! ஆனா, பாரு.... எழுத்து ஒண்ணு கூட சுத்தமா அழி யலே! அப்புறந்தான தெரிஞ்சுது - நீ விலை ஒசந்த பால் பாயிண்ட் பேனா வாலே எழுதியிருக்கிறேங்கிற விஷயம்! ஆண்டவன் என்னோட கெட்ட எண்ணத்தை நிறைவேறாம செஞ்சிட்டான். என் மனசாட்சி என்னை உறுத்திச்சு. கடந்த ஒரு வாரமா எப்படி உன் முகத்திலே முழிக்கிறது, நோட்டைக் குடுக்கிறதுன்னு தெரியாம தவிச் சிக்கிட்டு இருந்தேன். இப்ப, ஒரு வழியா மனசை திடம் பண்ணிக்கிட்டு வந்து சேர்ந்துட்டேன். பெரிய மனசு பண்ணி உன்னோட நோட்டை எடுத்துக் கிட்டு, என்னை மன்னிச்சுடு, கார் மேகம்!'' விழிகள் பனிக்க வேண்டு கோள் விடுத்தான் ஆராவமுதன்.

''ஆராவமுது! உன்னைத் திருத்தி நல்லவனாக்கத்தான் கடவுள் இந்த மாதிரி செய்யத் தூண்டியிருக்கிறார்னு நினைக்கிறேன். அவர் செய்த சோதனையை நினைக்க, நினைக்க வியப்பாய் இருக்கிறது. எப்ப நீ தவறை உணர்ந்து நல்லவனாய் விட்டியோ, அப்பவே உனக்கு என்னோட மன்னிப்பு கிடைச்சுட்டுதுன்னு அர்த்தம். கடந்ததை மற. கவலையை விடு!''

கார்மேகத்தின் பெருந்தன்மையான வார்த்தைகள் கோடையில் வறண்ட நாக்குக்குக் குளிர் நீர் கிடைத்த மாதிரி, இதமாய் இருந்தன!



பட்டுப்பூச்சி

பட்டுப் பூச்சியைத்
தொட்டுப் பார்க்கணும்
விட்டு விட் டோடுது
விரட்டிப் பிடிக்கணும்.


பூவின் மேலே - அது
மேவி நிற்குது.
நாவை நீட்டியே - தேன்
நக்கிக் குடிக்குது.

வண்ணத்துப் பூச்சி மேல் - என்
எண்ணம் ஓடுது
மண்மேல் வந்திறங்கி - ஒளி
விண்மீன் ஆடுது!

தொட்டு விட்டால் - அது
துவண்டு போகுமோ?
எட்டி நின்றே - அதன்
எழிலை ரசிக்கணும்.

– மு.கு. ஜகந்நாத ராஜா

விபரீத விளையாட்டு!



வழக்கம் போல் பள்ளிக்குப் புறப்பட்டு வந்த ரகு, தெற்குத் தெருவில் நுழைந்த போது....

'நான் இங்கேதான் இருக்கிறேன்' என்பது போலப் பளிச்சிட்டது அஞ்சல் பெட்டி.

அஞ்சல் பெட்டியைப் பார்த்த ரகுவுக்கு, இனம்புரியாத ஒரு மகிழ்ச்சி.

சுற்று முற்றும் பார்த்தான். கண்ணுக்கெட்டிய தூரம் வரை எவரையும் காணவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு தன் தோளில் மாட்டியிருந்த வாட்டர்பேக்கை எடுத்து அவசர அவசரமாகத் திறந்து, தண்ணீரை அஞ்சல் பெட்டிக்குள் கொட்டி விட்டு வேகமாக நடையைப் போட்டான்.

ரகுவுக்கு இந்த விபரீத விளையாட்டு ஒன்றும் புதிதல்ல. பழகிப் போன ஒன்றுதான். ஆனாலும், இத்தனை நாட்கள் கல்லையும், குப்பைகளையும் அஞ்சல் பெட்டிக்குள் அள்ளிப் போட்டு விளையாடிய அவன், இன்று தண்ணீரைக் கொட்டியது புதுமைதான்.

மறுநாள் காலை.

வழக்கம் போல் பள்ளிக்குப் புறப்பட்டு வாசலுக்கு வந்த ரகுவின் கைகளில் தபால்காரர் தபால் உறை ஒன்றைக் கொடுத்து விட்டுப் போனார்.

உறையை வாங்கிப் பார்த்த ரகுவுக்குத் தலைசுற்றியது.


அந்தத் தபால், ரகுவின் அண்ணன் சுரேஷ் கடைசி நேரத்தில் வேலைக்காகப் போட்ட மனு. பெறுவோர் முகவரி சுத்தமாகத் தண்ணீர் பட்டு அழிந்தும், அந்த இடம் ஊறிப் போய்க் கிழிந்தும் இருந்ததால் திரும்பக் கொண்டு வந்து கொடுத்திருந்தார் தபால்காரர். பின்பக்கம் ரகுவின் வீட்டு முகவரி பால்பாயின்ட் பேனாவால் எழுதப்பட்டிருந்தது இலேசாகத் தெரிய அதைத் திருப்பிக் கொண்டு வந்திருக்கிறார் தபால்காரர்.

''எந்தப் பாவியோ தெரியலே தம்பி, தபால் பெட்டிக்குள்ள தண்ணியைக் கொட்டிட்டுப் போயிருக்கான். முகவரி எல்லாம் அழிஞ்சு போய்க் கிடக்குது. தெரிந்த வரை திருப்பிக் கொடுக்க ஆபீசர் விசேஷ உத்தரவு போட்டிருக்கார்'' என்று சொல்லிச் சென்றார் தபால்காரர்.

ரகுவுக்கு, ''நாம் எத்தனை பெரிய தவறைச் செய்து விட்டோம்'' என்பது அப்பொழுதுதான் உறைத்தது. 'அந்தப் பாவி நான்தானுங்க', என்று அழவேண்டும் போல் இருந்தது அவனுக்கு.

– வலங்கைமான் நூர்தீன்

பத்து ரூபாய் போதாது



அம்மா திகைத்துப் போனாள். மூன்று நாள் முன்புதான் சுந்தருக்கு அவள் பத்து ரூபாய் கொடுத்திருக்கிறாள். இப்போது மீண்டும் ஐந்து ரூபாய் கேட்கிறான். ஒரு எட்டாங்கிளாஸ் பையனுக்கு அப்படி என்ன செலவு?

சுந்தருக்குப் பிடித்த விஜிடெபிள் பிரியாணி மற்றும் கட்லெட் இன்று பள்ளி காண்டீனின் ஸ்பெஷல் ஐட்டமாக இருக்கும். அதனால்தான் அவன் கேட்கிறான்.

ஆனாலும் மூன்று நாளில் பதினைந்து ரூபாய் என்பது ஒரு பள்ளிச் சிறுவனுக்கு அதிகம் என்று அம்மாவுக்குத் தோன்றிற்று. சுந்தரிடமே கேட்டாள்.

''இது அவசியம்தானா சுந்தர்?''

''ஏன்? ஏன் அவசியமில்லாம? அவனவன் தினம் பத்து ரூபாய்க்குத் திங்கறான். பசங்கன்னா அப்படித்தான் இருப்பாங்க. சுந்தர் கேக்கறதுல என்ன தப்பு?''

அம்மா கேட்ட கேள்விக்குப் பதில் கோபியிடமிருந்து வந்தது. கோபி சுந்தரை விட இரண்டு வயது பெரியவன். மாதா மாதம் அப்பா கொடுக்கிற பத்து ரூபாய் அவர்களுக்கு சுத்தமாகப் போதவில்லை.

''கேவலம், தினம் ஒரு நல்ல சாக்லேட் சாப்பிடுவதென்றாலே எட்டணா ஆகி விடுகிறது. மாசத்திற்குப் பத்து ரூபாய் எந்த மூலை?'' என்றான் சுந்தர். தன் கட்சி பலப்படுவதை உணர்ந்த மகிழ்ச்சி அதில் தொனித்தது.

'அதானே!' என்றாள் கமலா. அவள் கடைக்குட்டி. அவளுக்கும் இதே பிரச்னை. அவள் ஐஸ்கிரீம் சாப்பிட்டு எத்தனை நாளாகிறது?

''ஐஸ்கிரீம் இல்லாத வாழ்வும் ஒரு வாழ்வா? அம்மா நீங்கதான் அப்பாவிடம் சொல்ல வேண்டும். பத்து ரூபாய் மாசத்திற்குப் போதவே போதாது'' என்று தன்னுடைய கோரிக்கையையும் வலியுறுத்தினாள் அவள்.

அம்மா அன்றிரவு அப்பாவிடம் இது விஷயமாகப் பேசினாள்.

''குழந்தைகளுக்குக் காசு கொடுத்து வளர்ப்பதே தவறு. அதிலும், கொடுப்பது போதாது என்று அவர்கள் கூடுதலாகக் கேட்பதெல்லாம் ஆரோக்கியமாகப் படவில்லை!''

அப்பா கண்ணை மூடிக் கொண்டு யோசித்தார். பிறகு, ''நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றார்.

மறுநாள்.

''சுந்தர், இங்கே வா.''

குந்தவை

''என்னப்பா?''

''ஸ்கூலுக்குப் போறது தவிர, வீட்டுக்காக நீ என்னென்ன வேலை பண்ணறே?''

''என்னப்பா அப்படிக் கேட்டுட்டீங்க. எங்க மூணு பேர் துணிமணியை அயர்ன் பண்றது, ஷூக்கு பாலிஷ் போடறது, பக்கத்துக் கடைக்குப் போய்த் தினமும் காய்கறி வாங்கிட்டு வர்றது எல்லாம் ஜயாதான்!''

''வெரிகுட். நீ, கோபி?''

''தினம் காலைல யார் குழாயில தண்ணி அடிக்கறாங்களாம்?''

''ஆமாமா. அது ஒண்ணே போருமே. நீ, கமலா?''

''நான்தான் சாப்பிட்டதும் எல்லார் தட்டையும் அலம்பறேன். டிபன் பாக்ஸ்ல நம்ம நாலு பேருக்கும் சாப்பாடு எடுத்து வெக்கறேன். முனியம்மா வராத போது வீட்டைப் பெருக்கறேன்...''

''அம்மாடி! பெரிய பட்டியலா இருக்கும் போலருக்கே! உங்ககிட்ட முக்கியமா ஒரு விஷயம் சொல்லணும். இத்தனை வேலைகளையும் நீங்க செய்யறதுக்கு பதிலா ஒரு ஆள் போட்டா, மாசம் குறைஞ்சது இருநூறு ரூபாயாவது தர வேண்டி வரும். நான் உங்களுக்கு - நீங்க செய்யற வேலைகளுக்குப் பரிசா ஆளுக்கு ஐம்பது ரூபா தரப் போறேன். ஆனா பாக்கட் மணி பத்து ரூபா கிடையாது. சரிதானா?''


''ரொம்ப சரி, ஜாலி, ஜாலி!''

சொன்னது போலவே அப்பா, மூன்று பேருக்கும், ஆளுக்கு ஐம்பது ரூபாய் அவர்கள் பள்ளி சிறு சேமிப் புக்கணக்கில் கட்டினார். மூவரும் அதை எப்போது வேண்டுமானாலும் எடுத்துச் செலவு செய்யலாம். ஒன்றும் கணக்குக் காட்ட வேண்டியதில்லை!

மூன்று பேருக்கும் மகத்தான சந்தோஷம். அம்மாவுக்குத்தான் ஒரே குழப்பம். பத்து ரூபாய் கொடுப்பதே அதிகம் என்றால், ஐம்பது ரூபாய் கொடுக்கிறாரே! ஒன்றும் புரியவில்லையே என்று குழம்பினாள்.

'பொறுத்திருந்து பார்' என்றார் அப்பா.

அன்று கமலாவுக்குப் பள்ளி விடுமுறை. அவள் அப்பாவுடன் கேரம் போர்டு விளையாடிக் கொண்



டிருந்தாள். அப்போது அவள் தோழி உள்ளே வந்தாள். அவள் பெயர் பூர்ணிமா.


பூர்ணிமா, நேரே அம்மாவிடம் சென்று, ''ஆன்ட்டி, உங்க கமலா ரொம்ப மோசம். எங்க ஸ்கூல்ல நடந்த டான்ஸ் காம்படிஷன்ல அவதான் ஃபர்ஸ்ட் வந்தாள். உங்களுக்கே தெரியும். ஒரு ட்ரீட் இல்லை ஆன்ட்டி அதுக்கு. கேட்டாகாக இல்லைங்கறா?'' என்று புகார் செய்தாள்.

அம்மா குழம்பினாள். ஐம்பது ஐம்பதாக மூன்று மாதத்தில் நூற்றைம்பது ரூபாய் கொடுத்தாயிற்று. இதற்குள்ளாகவா அத்தனையையும் செலவழித்தாயிற்று!

கமலாவைக் கூப்பிட்டாள். பூர்ணிமா போனதும் அவளிடம் இது பற்றிக் கேட்டாள்.

''இல்லம்மா! அப்பா அம்பது ரூபா கொடுக் கறச்சே என்ன சொன்னார்? தாங்க செய்யற வேலைக்கு சம்பளம் மாதிரித்தான் இதுன்னுதானே! கஷ்டப் பட்டு சம்பாதிச்சதை யாராவது தண்டச் செலவு பண்ணுவாங்களா?''

அம்மாவுக்கு வியப்புத் தாங்கவில்லை. கமலாவா இப்படிப் பேசுவது? திடீரென்று அவளுக்கு இப்படி ஒரு சிந்தனை எப்படி வந்தது? அவளுக்கு மட்டும்தானா?



''இல்லை'' என்றார்கள் கந்தரும், கோபியும்.

அவர்கள் கையில் பள்ளி வங்கிக் கணக்குப் புத்தகம். போட்ட நாள் முதல் இன்று வரை ஒரு பைசா கூட யாரும் எடுக்கவில்லை!

''எதுக்கும்மா நாங்க காசு எடுக்கணும்? அது நாங்க கஷ்டப்பட்டு சம்பாதிச்சதாக்கும்! லஞ்ச்லேர்ந்து பிஸ்கெட், சாக்லேட் வரைக்கும் தேவையான போது நீயே வாங்கித் தந்துடறே. நாங்க வேற பள்ளிக்கூடத்துல எதுக்கு தண்டச் செலவு பண்ணணும்?''

அம்மா அப்பாவைப் பார்த்தாள். அவர் சொன்னார், ''உழைப்புக்கு ஒரு விலை கிடைக்கும் போது அதை வீணாக்க யாருமே விரும்ப மாட்டாங்க. அதை சொல்லிப் புரியவைக்கிறதை விட அனுபவ பூர்வமா உணரவைப்பதுதான் நல்லது. அதனாலதான் அப்படி செஞ்சேன்.''

அம்மாவுக்கு அப்பாவின் மதிநுட்பம் புரிந்தது. இனி அவளுக்குத் தன் பிள்ளைகளைப் பற்றிய கவலை கிடையாது. ஐம்பது என்ன? ஆயிரம் ரூபாய் கொடுக்கக் கூட அவள் இப்பொழுது தயாராக இருக்கிறாள்!

அண்டப் புளுகன் அய்யாசாமி!

சாய்ந்து ஊஞ்சலில் அமர்ந்தபடி தூங்கிக் கொண்டிருந்தார் அண்டப்புளுகன் அய்யாசாமி. அவரைத்தான் உங்களுக்கு நன்றாகத் தெரியுமே.

''என்னங்க அய்யாசாமி, பட்டப் பகல்ல இப்படிக் குறட்டை விட்டபடி தூங்கறீங்க?'' என்று வந்து எழுப்பினார் பக்கத்து வீட்டு நண்பர் சபாபதி.

''நான் எங்கே தூங்கினேன் சபாபதி? தியானத்தில் அல்லவா இருந்தேன். சத்யலோகம் போய் எமதர்ம ராஜாவைப் பார்த்துப் பேசிக்கிட்டிருந்தேன்'' என்று சரடு விட்டார் அய்யாசாமி.

சபாபதி புதிதாகப் பக்கத்து வீட்டுக்குக் குடிவந்திருப்பவர். அந்த ஊருக்கும் புதிது. அதனால் அய்யாசாமியின் சமாசாரம் அவருக்கு எதும் தெரியாது. அதனால் அவர் அரண்டு போனார். சாதாரண மனிதர், எமதர்மனோடு தியானத்தில் பேசுவதாவது?

''எமதர்ம ராஜா என்ன சொன்னாருங்க? எதைப் பத்திப் பேசினீங்க?''

''நம்ம ஊர் நிலவரத்தைப் பத்திக் கேட்டாருங்க. பொதுவாப் பேசிக்கிட்டிருந்தோம். அதுக்குள்ள நீங்க வந்து எழுப்பிட்டீங்க'' என்று அலுத்துக் கொண்டார் அய்யாசாமி.



''அப்படியா!'' என்று வாயைப் பிளந்தார் சபாபதி.

''ஐயா அடுத்த முறை நீங்க தியானம் பண்ணி எமனோடு பேசும் போது, எங்க தாத்தாவும் பாட்டியும் எப்படி இருக்காங்கன்னு கேட்டுச் சொல்லுங்க'' என்று தனது வேண்டுகோளை வைத்தார் சபாபதி.

சபாபதியின் வாய் மூலம், அய்யாசாமி எமனோடு பேசிய செய்தி ஊரெல்லாம் பரவியது. அடுத்த நாள் இரவு, அய்யாசாமியின் மனைவி யாரோ உறவினருக்குத் திருமணம் என்று வெளியூர் போயிருந்தாள். வீட்டில் அய்யாசாமி மட்டும் தனியாகத் தூங்கிக் கொண்டு இருந்தார்.

திடீரென்று யாரோ அய்யாசாமியை எழுப்பினார்கள். அய்யாசாமி தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்தார். எதிரே கையில் பாசக் கயிறுடன் எமன் நின்றிருந்தார்!

''ஐயோ!'' என்று அலறினார் அய்யாசாமி.

''தினமும் தியானம் பண்ணும் போது என்னோடு பேசுவீங்களாமே! பின்னே ஏன் என்னைப் பார்த்ததும் இப்படி நடுங்கறீங்க?'' என்று கேட்டார் எமன்.

''ஐயோ! அது சும்மா கப்சாங்க'' என்று குளறினார் அய்யாசாமி.

''அப்படியானால் நானும் கப்சாதான்'' என்று வேஷத்தைக் கலைத்தார் சபாபதி. ஆமாம் எமனாக வந்தது அவரேதான்.

''ஏமாளி மாதிரி இருந்து என்னையே ஏமாற்றி விட்டீங்களே!'' என்றார் அய்யாசாமி. அதற்குப் பிறகு அவர் சபாபதியிடம் எதுவும் அளப்பதே இல்லை!

- மு. பூபாலன்

பிருந்தாவனக் கவியரங்கம்

நாற்காலி

எங்கள் வீட்டு நாற்காலி
எஃகால் செய்த நாற்காலி
என்றும் உடையா நாற்காலி
எவரும் விரும்பும் நாற்காலி

புத்தம் புதிய நாற்காலி
புதுமை நிறைந்த நாற்காலி
சத்தம் எழுப்பா நாற்காலி
சொகுசு நிறைந்த நாற்காலி

ஓய்ந்த பொழுதில் தாத்தாவும்
உட்கார விழையும் நாற்காலி
சாய்ந்து அமர்ந்தால் தனி இன்பம்
சரிந்து படுத்தால் தனி இன்பம்!

- வே. பூங்குன்றன்,
வடமாதிமங்கலம்.





விடுமுறை

பரிட்சை எல்லாம் முடிந்தது
புத்தகம் பெட்டியில் ஒளிந்தது!
விரைந்து வந்தது விடுமுறை
வாண்டுகள் தெருவில் திரண்டன!

ஊட்டிக் கெல்லாம் போகலாம்,
பாட்டி கதையும் கேட்கலாம்
கூட்டம் கூடி ஆடலாம்!
கும்மாளங்கள் போடலாம்!

சர்க்கஸுக்குப் போகலாம்!
சறுக்கு மரமும் ஏறலாம்!
மர்மக் கதைகள், நாடகம்
மகிழ்ச்சியாகப் படிக்கலாம்!

பிடித்தமான வழியிலே
பொழுதை நன்கு போக்கலாம்!
அடுத்த ஆண்டு வகுப்புக்கு
ஆயத்தங்கள் பண்ணலாம்!

- கே. எஸ். கோகுலன், சென்னை - 91.




பாப்பா!

சின்னச் சின்ன பாப்பா
சிரிக்கும் நல்ல பாப்பா
அன்னை ஊட்டும் சோற்றை
அழகாய் உண்ணும் பாப்பா

மடியில் வந்து தவழ்ந்து
மகிழும் செல்லப் பாப்பா
மழலை மொழி பேசி
மனதைக் கவரும் பாப்பா

கள்ளமில்லா உள்ளம்
கொண்ட எங்கள் பாப்பா
எல்லையில்லா மகிழ்வை
எமக்குத் தரும் பாப்பா!

- வடுகை. ராஜதீபன்,
வடுகப்பட்டி.



பிருந்தாவனக் கவியரங்கம்

கல்வி


காலையில் எழுந்தவுடன் படிப்பு - என்ற
கவிதை எனக்கு வெறுப்பு!
மாலை வந்தால் விளையாட்டு - என்ற
மயக்கும் வரிகளோ இனிப்பு!

புத்தகம் என்றாலே கசப்பு - இந்தப்
பெற்றோரின் புத்திமதி சலிப்பு!
எத்தனை படித்தாலும் மலைப்பு - இது
எப்படி முடியுமோ வியப்பு!

திட்டம் போட்டுப் படித்தால் - எல்லாத்
தேர்வும் நமக்கு துச்சம்!
ஏற்றம் எல்லாம் அளிக்கும் - படிப்பு
எதையும் நமக்கு சேர்க்கும்!

- ஆ. வினோத், சென்னை - 94.





தோட்டம்

கொல்லைப் புறம் அமைந்த,
கொள்ளை அழகுத் தோட்டம்!
நல்ல நல்ல காய்கறி,
நாளும் தரும் தோட்டம்!

பூச் செடிகள் உண்டு,
புடலங்காயும் உண்டு!
பாத்தி கட்டிக் கீரை,
பாகற் காயும் உண்டு!

கிணறு ஒன்று உண்டு,
குடிக்க நீரும் உண்டு!
மணக்க மணக்க மலர்கள்,
மலர்ந்து சொரிவ துண்டு!

எங்கள் வீட்டுத் தோட்டம்,
எழில் மிகுந்த தோட்டம்!
உங்கள் வீட்டில் இதுபோல்,
உண்டா அழகுத் தோட்டம்?

- எம். திலீப்குமார்,
சிந்தாதிரிப்பேட்டை.


மூன்று பேர்!

ஓயா ஓட்டப் பந்தயம் - அதில்
ஓடும் நண்பர் மூவரே!
பாய்ந்து பாய்ந்து ஓடுவான் - ஒருவன்
பயமே இல்லா ஒல்லி!

ஓடும் நினைப்பில் நடப்பான் - ஒருவன்
உயர்ந்த உடம்புப் பையன்!
படுத்துப் படுத்து நகர்வான் - ஒருவன்
பயந்த குள்ளப் பையன்!

பொருத்தம் இல்லா இவரே - இந்த
பாரினை நடத்தும் மன்னர்!
யாரென்று இவரை அறிவீர் - நல்ல
அழகுக் கடிகாரம் உணர்வீர்!

- அகிலா, திருநள்ளாறு.



பிருந்தாவனக் கவியரங்கம்


நேரு ஸ்டேடியம்!

புத்தம் புதிய ஸ்டேடியம்
பெருமை மிக்க ஸ்டேடியம்
எத்தனை எத்தனை சிறப்புகள்
எல்லாம் நிறைந்த ஸ்டேடியம்!

நேரு மாமா பெயரிலே
நல்ல அழகு ஸ்டேடியம்
யாரும் மறுக்க முடியுமோ
அருமை அருமை ஸ்டேடியம்!

சர்வ தேசப் போட்டிகள்
சென்னை நகரில் நடக்கவே
விரைந்து இதைக் கட்டினார்
வாரும் சென்று காணலாம்!

- எஸ். வடிவேல், சென்னை - 2.









குருவியாம்!

சின்னச் சின்ன குருவியாம்,
சிறகடிக்கும் குருவியாம்!
கண்ணை உருட்டும் குருவியாம்
கண்ணடிக்கும் குருவியாம்!

அன்ன நடை போடுமாம்,
ஆளை மயக்கிப் பறக்குமாம்!
சின்னக் கழுத்தை அசைக்குமாம்,
சத்தம் போட்டுக் கத்துமாம்!

அரிசி தின்னும் குருவியாம்,
அம்பு வேகக் குருவியாம்!
விசிறிக் கட்டை எடுத்ததும்,
விரைந்து பறக்கும் குருவியாம்!

- வி. என். பி. விஷ்ணுப்பிரியா,
திருவள்ளூர்.


குதிரை

கண்ணைக் கவரும் குதிரை
கண்ணன் ஏறும் குதிரை
விண்ணில் பறக்காக் குதிரை
வீட்டில் ஆடும் குதிரை

புல்லும் கொள்ளும் கேட்கா
புதுமை மிக்க குதிரை
தொல்லை ஏதும் இன்றி
தாவி ஆடும் குதிரை

சண்டித் தனம் இன்றி
சாய்ந்து ஆடும் குதிரை
நண்பர் கூடக் கண்ணன்
நாளும் ஆடும் குதிரை!

- பாசு. தமிழடியான், சேலம் - 30.



பிருந்தாவனக் கவியரங்கம்

கரடி மாமா

கரடி மாமா! கரடி மாமா!
கரணம் போடாதே! - நீ
கரணம் போட்டுக் கால் உடைந்தால்
கலங்கி நிற்பாயே!

உருட்டி உருட்டி என்னை நீயும்
முறைத்துப் பார்க்காதே! - உன்
இருட்டு உடம்பைக் காட்டி என்னை
பயமுறுத்தாதே!

ஆசையாகக் கிட்டே வந்தால்
அடிக்க வராதே! - உனக்கு
தோசை, இட்லி, போண்டா தரேன்
துரத்தி வராதே!

- ம. திலீப்குமார்,
சிந்தாதிரிப்பேட்டை.



கோலம்

அக்கா போட்ட கோலம்
அழகு மிக்க கோலம்
சொக்கிப் போன கூட்டம்
சுற்றி நிற்கும் கோலம்!

மஞ்சள் ஊதாப் புள்ளி
மனக் கணக்கு போடும்!
கொஞ்சம் கோட்டை விட்டால்
கோணல் மாணல் போங்க!

- சூர்யா செந்தில்,
தேவனாங்குறிச்சி.

நண்டு!

நண்டுக் கூட்டமே வாங்க!
நடையும் ஜோரு போங்க!
கட்டு உங்களைத் திங்க
சுற்றிக் கூட்டம் தாங்க!

எட்டிப் பார்த்தா நீங்க
எமனைக் காணு வீங்க!
குள்ள நரியும் இங்கே
காத்தி ருக்குது ங்க!

- எ. எல். சண்முகம், கண்டனூர்.



லட்டு!

லட்டு நல்ல லட்டு பார்!
லாலா கடை லட்டு பார்!
பிட்டு வாயில் போட்டுப் பார்!
பிடிக்கும் இனிப்பு லட்டு பார்!

பாட்டி விற்கும் லட்டு பார்!
பார்த்து நிற்கும் கூட்டம் பார்!
போட்டி போட்டு பிள்ளைகள்
பிரியம் கொண்டு வாங்குறார்!


பந்து போன்ற லட்டு பார்!
பசியை நீக்கும் லட்டு பார்!
குண்டு பையன் கையிலே
குடியிருக்கும் லட்டு பார்!

- ஓவியா, முகவையூரணி.



கறையானுக்குக் கண் உண்டா?

ரேவதி



கிரிக்கெட் பேட்டை மாமரத்தின் அடிமரப் பொந்துக்குள் அழுத்தி மறைத்து வைத்து விட்டு, சாதனை புரிந்த வீரனைப் போல் இறங்கினான் நம்பி.

''அண்ணா, இரு இரு என்னை ஒப்புக்குச் சப்பாணின்னு தானே பேட்டிங் தர மாட்டேன்னே? உன் பேட்டையே ஒளிச்சு வைச்சுட்டேன். இனிமே எப்படி ஆடுவே பார்க்கிறேன்'' என்று மனதுக்குள் கருவிக் கொண்டான் நம்பி.

அன்று, மாலை முடிந்து இருள் தொடங்கும் அந்தி சந்தி நேரம். சில வீடுகளில் விளக்கு வைத்து விட்டார்கள். திடீரென்று அந்தப் பகுதியில் ஆயிரக் கணக்கான ஈசல்கள், விளக்கு வெளிச்சத்தை நாடி வந்தன. சுவர், சன்னல், கதவு என்று எங்கு பார்த்தாலும் ஈசல்கள்தான்! ஒரே ஈசல்மயம். விஷயம் அறிந்தவர்கள் விளக்கை அணைத்து வைத்தனர். அணைக்க முடியாதவர்கள் திண்டாடினர். கழுத்துக் காலர் வழியாக சட்டைக்குள் புகுந்து குறுகுறுத்த ஈசலை என்ன செய்வது என்று புரியாது நம்பி திகைத்து வெளியே ஓடினான்.

விளக்கை நாடி வந்த ஈசல்கள், விளக்கில் மோதிக் கீழே விழுந்து மீண்டும் மீண்டும் பறக்க முயன்று, தரையில் நகர்ந்தபடி சுற்றின. பல்லிகளுக்கு நல்ல வேட்டை. மீண்டும் மீண்டும் முயற்சி செய்து, அந்த முயற்சியிலேயே ஈசல்கள் உயிரை விட்டன!

அரை மணி நேரத்திற்குள் ஈசல்கள் ஓய்ந்தன. நம்பி வீட்டிற்குள் படையெடுத்து வந்த ஈசல் கூட்டத்தில் தப்பிப் பிழைத்தவை இரண்டே இரண்டு தான். அந்த இரண்டும் தோட்டத்தில் இருந்த மாமரத்தின் அடிமர வேரின் இடைவெளிக்குள் புகுந்தன. சிறகுகளை உதிர்த்து விட்டுக் குடும்பம் நடத்த விரைந்தன.

''இந்த மரவேரும், மழை நீரில் ஊறிப் பதமா இருக்கு. மண்ணும் ஈரப் பசையோடு மென்மையா இருக்கு. மண்ணைக் குடைஞ்சு ஓடு பாதை அமைக்க வசதியா இருக்கும். இந்த மாமர வேரின் அடியிலேயே நம்ம கறையான் சாம்ராஜ்யத்தை ஆரம்பிப்போம். நீ முட்டை இட ஆரம்பிக்கலாம்'' என்றது ஓர் ஈசல். அதை ஏற்றுக் கொண்டது இரண்டாவது ஈசல். இனி இவைகளை ஈசல் என்று கூறுவது தவறு. ராணிக் கறையான், ராஜாக் கறையான் என்று அழைப்பதே பொருத்தம். இரண்டும் மாமரத்தின் அடிப்புறத்தில், வசதியான ஒரு பள்ளத்தில் குடும்பம் நடத்த ஆரம்பித்தன. ராணிக் கறையான் முட்டையிடத் தொடங்கியது.

முட்டையிட ஆரம்பித்தது என்றால்



ஏதோ ஒன்றிரண்டு அல்ல. ஒரு நாளைக்கு முப்பதாயிரத்திற்கு மேல் ஓய்வு ஒழிவு இன்றி முட்டையிடத் தொடங்கியது.

ஒரு வாரம் ஓடி விட்டது. இப்பொழுது மாமரத்தின் அடிப் பாகமே தெரியவில்லை. அதைச் சுற்றிலும் ஒன்றரை அடி உயரத்திற்கு செம்மண்ணால் பத்துப் போட்டது போல் கறையான் புற்று வைத்திருந்தது.

மரப் பொந்தில் ஒளித்து வைத்த பேட் பத்திரமாக இருக்கிறதா என்று பார்க்க நம்பி தோட்டத்திற்கு வந்தான். அடிமரம் முழுவதும் கறையான் புற்று செம்மண் காப்பிட்டுக் கிடந்த காட்சி அவனுக்குத் திகைப்பைக் கொடுத்தது.

கறையான் புற்றில் படாமல் காலை உயரத் தூக்கி வைத்து ஏறப் பார்த்தான். கால் தவறி புற்றில் பட்டு, செம்மண் உதிர்ந்தது. உதிர்ந்த அந்த ஓட்டை வழியாக நூற்றுக்கணக்கான கறையான்கள் மொலுமொலுவென்று ஓடுவதை நம்பி திகைப்புடன் கவனித்தான். பேட் விஷயம் மறந்து விட்டது. அண்ணனைக் கூட்டிக் கொண்டு வந்து காட்ட உள்ளே ஓடினான்.


எங்கிருந்தோ சிட்டுக் குருவிகள் அடி மரத்தின் உதிர்ந்த புற்றுக்கு அருகே கூடின. கண்ணில் பட்ட கறையான்களைக் கொத்தித் தின்னத் தொடங்கின.

புற்றைப் பாதுகாத்துக் கொண்டிருந்த போர் வீரக் கறையான்கள் புற்றின் சுவற்றைத் தம் கால்களால் தட்டி அதிர்வுகளை எழுப்பின. அந்த அதிர்வின் செய்தியை புற்றில் இருந்த லட்சக் கணக்கான கறையான்கள் அறிந்து கொண்டன. ''புற்றுக்கு ஏதோ ஆபத்து. புற்றுக் கோட்டையின் வலது மேல் பக்கம் உடைந்து விட்டது. எச்சரிக்கையாக இருங்கள்'' என்பதுதான் அந்தச் செய்தி. செய்தி, ராணிக் கறையானை வந்தடைந்தது.

''அரசியரே, ஒருவேளை ஆபத்து இங்கேயும் வந்து விட்டால் கவலைப் பட வேண்டாம். இங்கே கீழ்ப்பக்கம் நிலவறையில் ஆழமாக நீண்ட ஓடு பாதை அமைத்திருக்கிறோம். நீங்கள், நம் மன்னருடன் தப்பி அங்கே சென்று விடலாம்'' என்றது போர் வீரக் கறையான்.

''உடைந்த பகுதி மிக அகலமாக இருப்பதால், அதைச் சரிசெய்ய முடியும் என்று தோன்றவில்லை. அதனால், அதன் கீழ்ப் பகுதி வாயிலை மூடி விட முயற்சிகள் நடக்கின்றன'' என்று அறிவித்து விட்டுப் போனது இன்னொரு போர் வீரன்.

''பேராபத்து வந்து விட்டது'' என்று அதிர்வுச் செய்தியின் எச்சரிக்கையைத் தொடர்ந்து, 'சரசர'வென்ற சத்தம் கேட்டது. புற்றுக்குள் புகுந்து விட்ட பாம்பு ஒன்று, இஷ்டத்திற்குக் கறையான்களைத் தின்றபடி மகிழ்ச்சியாக முன்னேறி வந்து கொண்டிருந்தது.



''அப்பா! எப்படி ஏர்கண்டிஷன் பண்ணின மாதிரி 'குளுகுளு'ன்னு இருக்கு! எத்தனை அழகான ஓடு பாதைகள். தரையெல்லாம் மெத்தை விரிச்ச மாதிரி மென்மையா எப்படி இருக்கு! கூரையின் அழகை, இன்னைக்கு முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கே! எத்தனை அறைகள்! நீயும் ராஜாவும் குடும்பம் நடத்த ஓர் அறை. முட்டையிட ஓர் அறை. நீ இடும் முட்டைகளை அடுக்கிப் பாதுகாக்க ஓர் அறை. குஞ்சுகளை வளர்க்க ஓர் அறை. பயற்சி தந்து அனுப்ப ஓர் அறை! அப்பா எத்தனை அறைகள். மனிதர்களால் கூட இத்தனை அழகா பிளான் போட்டுக் கட்ட முடியாது போல் இருக்கே!'' என்று தன் வியப்பை வெளியிட்ட நாகப் பாம்பு, ''ஆமாம், மூன்று மாதம் முன்னால் கூட நான் இங்கே இதே மாமரத்தின் அடியில் இருந்த பொந்தில் வந்து இரண்டு நாள் தங்கி விட்டுப் போனேன். அப்போ உங்களோட இந்த கறையான் சாம்ராஜ்யம் இருக்கலையே! இங்கே எப்போ வந்தீங்க?'' என்று கேட்டது.


கேள்வி கேட்டுக் கொண்டே நாகம் நூற்றுக்கணக்கான கறையான்களைத் தின்றபடி இருந்தது.


''நான் மகாராஜாவோட இங்கே வந்தே ஒரு வாரம்தான் ஆச்சு'' என்றது ராணிக் கறையான்.

''அப்பாடி! ஒரு வாரத்திற்குள்ளாகவா இத்தனை பெரிய சாம்ராஜ்யத்தை அமைத்திருக்கிறாய்!''

''எல்லாம் என் குழந்தைங்களோட திறமைதான். ஈரம் காக்கும் இடமும், அரிக்க ஏத்தபடி காகிதம், துணி, மரம், இருந்தால் என் குழந்தைங்க கோட்டையே கட்டிடுவாங்க'' என்று பதிலளித்த ராணி, ''இப்படி எங்களைப் புகழற மாதிரி புகழ்ந்துகிட்டே, என் கண்ணெதிரிலேயே என் குழந்தைகளை நூற்றுக்கணக்கில் புடிச்சு முழுங்கறியே! இது நியாயமா? ஒரு தாயின் மனம் என்ன பாடுபடும் என்பது உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டு விசும்பியது.

''உண்மையாகவே, நீ ஒரு தாய் மாதிரி நடந்துக்கிட்டிருந்தால் உன் கேள்வி நியாயமே. ஒரு நாளைக்கு முப்பதாயிரம் முட்டைகளுக்கு மேல் ஓய்வு ஒழிவில்லாமல் இடுகிறாய். உனக்கு ஆபத்து எதுவும் இல்லேன்னா,





சுமார் பத்து வருஷம் வரை நீ தொடர்ந்து முட்டையிட்டு இந்த மாமரத்தையே அரித்து கறையான் மரமாக்கி விடுவாய். இப்படி இலட்சக்கணக்கில் முட்டை யிடுகிறாயே தவிர, இவைகள் எல்லா வற்றிடமும் நீ ஒரே மாதிரிதான் அன்பாக இருக்கிறாயா? உன் மனதைத் தொட்டுச் சொல். உனக்கு ஆபத்து வந்தால், ஆள வேண்டும் என்று சில குழந்தைகளை உன்னைப் போலவே பிறக்க வைக் கிறாய். உனக்கும் அரச குடும்பத்துக்கும் தேவையானவைகளைச் செய்வதற் காகவே சில குழந்தைகளைப் பிறக்க வைக்கிறாய். உன் அகண்ட புற்று சாம் ராஜ்யத்தை இரவும் பகலும் பாதுகாக்க வென்றே விசேஷ அமைப்புகளுடன் சில குழந்தைகளைப் பிறக்க வைக் கிறாய். நீ இடும் கோடிக்கணக்கான முட்டைகளைப் பராமரித்துப் பொரிய வைக்கவும், அவைகளிலிருந்து வெளி வரும் குஞ்சுகளையும் பராமரிக்க வென்றே கண்ணில்லாமலும், பார்வை யில்லாமலும் குழந்தைகளைப் பிறக்க வைக்கிறாயே... நீ இடும் முட்டைகளி லேயே இத்தனை பாகுபாடா? உண்மை யாகவே நீ ஒரு தாய்தானா? 'என் குழந் தைகளைத் தின்கிறாயே' என்று நீ போய் என்னைக் கேட்கிறாயே?'' என்று சீறியது நாகம்.

ராணி தலைகுனிந்து நின்றது.

''கவலைப்படாதே. நான் உன்னை யும் ராஜாவையும் தின்று விட மாட் டேன். நீங்கள் இருவரும் இருந்தால் தான் எனக்கு உணவு கிடைக்கும். நீ பாட்டுக்கு முட்டை இட்டுக்கிட்டே இரு. நான் தின்று கொண்டே இருக் கேன்'' என்று வசதியாகப் படுத்துக் கொண்டது நாகம்.

''இந்த மரத்தின் அடிமரப் பொந் துக்குள்தான் பேட்டை ஒளித்து வைத் தேன்'' என்று அழுதபடி அண்ணனை அழைத்து வந்து காட்டினான் நம்பி.

அண்ணன் மரத்தடியில் பொந்துக் குள் கையை விட்டு இழுத்துப் பார்த் தான். பேட் கிடைக்கவில்லை. கறை யான் அரித்த செம்மண்தான் பிடிபிடி யாக வந்தது. அதோடு, பெயர் பொறிக் கப்பட்ட ஒரு சிறு உலோகத் தகடு கிடைத்தது. அதில் ''நேஷனல் ஸ்போர்ட்ஸ் கம்பெனி, சென்னை - 8'' என்ற எழுத்துக்கள் தெரிந்தன. ஆமாம், அந்த பேட்டைச் செய்த கம்பெனியின் பெயர்தான் அது!

அறிவியல் உண்மைகள்

★ கறையானை ஆங்கிலத்தில் வெள்ளை எறும்புகள் என்று பொருள்பட WHITE ANTS என்று அழைத்தாலும் அவை எறும்பு இனம் அல்ல.

★ மழை பெய்து தரை குளிர்ந்த ஓரிரு நாட் களுக்குப் பின், அந்தி சந்தி நேரத்தில், சிற குள்ள ஆயிரக்கணக்கான ஈசல்கள் இயற்கை யின் உந்துதலால், கறையான் புற்றில் இருந்து கிளம்பி, விளக்கு ஒளியைத் தேடிப் பறந்து வரும். விளக்கில் முட்டி மோதிப் பாதி உயிரிழக்கும். வரும் போதே பறவை களுக்கு சில இரையாகும். தப்பிப் பிழைப் பவை ஒரு சிலவே. இப்படித் தப்பிப் பிழைக் கும் ஜோடிகள், ஈரம் காக்கும் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து, சிறகுகளை உதிர்த்து விட்டுக் கூடு அமைத்துக் குடும்பம் நடத் தும். இதுவே ராணிக் கறையான், ராஜாக் கறையான்.

★ ராணிக் கறையான் நாளொன்றுக்குசுமார் 30,000 முட்டைகளுக்கு மேல் தொடர்ந்து 10 ஆண்டுகள் வரை இடும். இடும் முட்டை களில் இருந்து வெளிவருபவை கறையான் குஞ்சுகளே. இவைகளில் அரச குடும்பம், போர் வீரர்கள், தொழிலாளிகள் என்று செய் யும் பணிகளுக்கு ஏற்ப வகைகள் உண்டு. உருவத்தில் இவை வேறுபட்டிருக்கும். இந்த வகைப் பிரிவு நிகழ்வதற்குக் காரணம் இவற் றின் ஃபெரமோன்கள் எனப்படும் உயிர்ப் பொருளே.

★ கறையான் உலகின் முதுகெலும்பு தொழிலாளர்களே. இவை 90% இவைகளுக் குக் கண்கள் பெரும்பாலும் கிடையாது. அப் படியே இருந்தாலும் பார்வை இராது. இவை மலடுகள். பிறப்பே அப்படி.

★ அதிர்வின் மூலம் இவை செய்திகளைப் பரிமாறிக் கொண்டு எச்சரிக்கை செய்து கொள்கின்றன.


★ காகிதம், மரப் பட்டை, துணி, ஈரம் காக் கும் தரை இவை கறையான்களுக்குக் கொண் டாட்டம்.

★ ஒரு முழு மரத்தை ஒரு கறையான் குடும்பம் ஒரே மாதத்தில் அரித்துச் சாய்த்து விடும். இது கூடு கட்டும் அழகு, வேகம், அதற்குப் பயன்படுத்தும் மண், மரக்கலவை எல்லாமே வியக்க வைப்பவை.

★ ராணிக் கறையான் சாதாரணமாக நம் கண்களில் படாது. இதைக் கண்டுபிடித்து அழிக்காதவரை புதிய புதிய புற்று உரு வாகிக் கொண்டே இருக்கும்.


★ காடுகளில், உதிரும் மரப் பட்டை களையும் இலைகளையும் அரித்து, மண் ணில் சேர்த்து, மண்ணைச் சத்துள்ளதாக்கும் இதன் பணி மகத்தானது.

கோகோவும் சாக்லெட்டும்



சாக்லெட்டுகள் கோகோ விதையிலிருந்து தயாரிக்கப் படுகின்றன.

ஆழி ———





1498 – இல், கிறிஸ்டோபர் கொலம்பஸ் தென் அமெரிக்காவைக் கண்டபோது, அங்கே முதன் முதலில் 'கோகோ' மரத்தைப் பார்த்தார்.

தென் அமெரிக்காவிலிருந்து பெருமதிப்புடைய பொருள்களுடன் இந்த கோகோ விதைகளையும் ஸ்பெயினுக்குக் கொண்டு போனார்.


அப்போது இருந்த ஸ்பெயின் மன்னர் பெர்டினாண்டுக்கு இதன் முக்கியத்துவம் அவ்வளவாகத் தெரியவில்லை. கோகோவுடன் சர்க்கரையைச் சேர்த்துச் சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும் என்பது அவருக்குத் தெரியாது!

... ஆனால், மெக்ஸிகோவின் சக்கரவர்த்தி 'மான்டி ஸீமா'வுக்கு கோகோவின் அருமை தெரிந்திருந்தது. ஆடம்பரமான வாழ்க்கையைக் கொண்டிருந்த, சாப்பாட்டுப் பிரியரான அவரது அரண்மனையில், தினமும் அடிமைகள், அவருக்காக கோகோவினால் தயாரிக்கப்பட்ட பானத்தைத் தங்கத்தாலான பெரிய ஜாடிகளில் நிரப்பிக் கொடுத்துக் கொண்டிருந்தனர்!





'மெக்ஸிகோ'வில் உள்ள செவ்விந்தியர்கள், கோகோ மரம், சொர்க்கத்திலிருந்து கடவுளால் அனுப்பப்பட்டது என்று நினைத்தனர். கோகோ விதைகளைச் சாப்பிட்டால், நிறைய அறிவு உண்டாகும் என்று அவர்கள் நம்பினார்கள். கோகோ விதைகளைப் பணத்துக்குப் பதிலாகவும் அவர்கள் பயன்படுத்தினர்!



இன்று கோகோ சாகுபடியில் முதல் இடம் வகிப்பது ஆப்பிரிக்காவில் உள்ள நைஜீரியா. உலக உற்பத்தியில் சுமார் 67 சதவீதம் இங்கு தான் கிடைக்கிறது.

இந்தியாவில், மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்திலும், நீலகிரி மலைகளிலும் பரிசோதனை அளவில் மட்டுமே கோகோ சாகுபடி செய்யப்படுகிறது.

மேற்கு ஆப்பிரிக்காவில் 'பெர்னாண்டோ போ' என்னும் சிறிய தீவில், ஸ்பானியர்கள், கோகோ மரத்தை 16-ஆம் நூற்றாண்டில் அறிமுகப் படுத்தினார்கள்.



கோகோ செடிகள் 4.5 மீட்டரிலிருந்து 12.5 மீட்டர் உயரம் வரை வளர்கின்றன. ஒவ்வொரு செடியிலிருந்தும் சுமார் 20 முதல் கோகோ காய்கள் கிடைக்கின்றன.

இதற்கு 'கோகோ' என்று பெயரிட்டவர் 'லின்னயஸ்' என்னும் ஸ்வீடன் நாட்டு விஞ்ஞானி. இதன் முழுப் பெயர் 'தியோப் ரோமா கோகோ! இதற்குப் பொருள்: தேவர்களின் பானம்!



முதன் முதல், கோகோ பானக் கடை, லண்டனில் 1657-இல் திறக்கப்பட்டது. கோகோ பானம் விலை அதிகமாக இருந்ததால் மிகப் பெரிய செல்வந்தர்களே அதைப் பருக முடிந்தது.


இங்கிலாந்தில், 1660-இல் கோகோ பானங்களுக்கு வரி விதிக்கப் பட்டது.



1824-ஆம் ஆண்டு, கோகோ வரலாற்றில் மிகவும் முக்கியம் வாய்ந்தது. ஜான் காட்பரி என்பவர், பர்மிங்ஹாமில் ஒரு கடை திறந்து, கோகோவையும், அதனால் தயாரிக்கப்பட்ட சாக்லெட்டுகளையும் மக்களுக்கு விற்பனை செய்தார். சாக்லெட்டுகளை மிகுதியான அளவில் தயாரித்து விற்று, வாடிக்கையாளர்களையும் ஏற்படுத்திக் கொண்டார். 1874-இல், ஜான் காட்பரியின் சாக்லெட் தயாரிப்பு, உலகில் மிகவும் முக்கியமான வியாபாரப் பொருளாகி விட்டது.

கோகோவிலிருந்து தயாரிக்கப்பட்ட தின்பண்டத்திற்கு 'சாக்லெட்' என்று பெயர் வைத்தவர் 'மண்டிஸுமா' என்பவர்.


உங்களுக்குப் பிடித்தமான சாக்லெட் எப்படி தயாரிக்கப்படுகிறது?



1

உலர்ந்த கோகோ விதைகள், மணம் தருவதற்காக ஒரு பெரிய எந்திர அடுப்பின் மூலம் மணலுடன் சேர்த்து வறுக்கப்படுகின்றன. பிறகு அவற்றின் மேல் ஓடு உடைக்கப் படுகிறது.


2



அடுத்து, கோகோ வின் உள் பகுதி, கொழகொழப்பான 'மாஸ்' என்னும் நிலையில் பக்குவப்படுத்தப் படுகிறது.


3

இதனுடன் சர்க்கரையும் பால் பவுடரும் சேர்க்கப் படுகின்றன.




பிறகு, இந்தக் கலவை இயந்திரத்தின் மூலம் மணிக் கணக்கில் முன்னும் பின்னு மாகக் குழுக்கப்படுகிறது.

4




இப்பொழுது, இந்தக் கலவை, மிருதுவாக, சுவையானதாக மாறு கிறது. இதை, அச்சில் ஊற்றி, கட்டியாக இறுகு வதற்காக, குளிரூட்டப் பட்ட அறையில் வைக்கிறார்கள்.

5



6

இந்த இயந்திரம், அச்சில் தயாரான சாக்லெட் கட்டிகளை அழகிய உறையில் வைத்துச் சுருட்டுகிறது. பூர்த்தி செய்யப்பட்ட வடிவில் சாக்லெட்டுகள் இயந்திரத்தி லிருந்து வெளிவருகின்றன. சாக்லெட் தயார்!



கோகோவிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு வகை வெண்ணெய், சோப்புகள் மற்றும் அழகு சாதனங்கள் தயாரிக்கப் பயன்படுகின்றன. கோகோவில் கொழுப்புச் சத்து மிகுதியாக உள்ளது.



இடக்கை மனிதர்கள்!

உலகத்தில் மனித உபயோகத்திற்காகத் தயாராகும் பல பொருள்களும் வலக்கையால் பயன்படுத்துவதற்கு ஏற்பவே வடிவமைக்கப்பட்டு, தயாரிக்கப்படுகின்றன. கத்தரிக்கோல், டூத் பிரஷ், சைக்கிள், மோட்டார் என்று இப்படிப் பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனால் வலது கையைப் போலவே இடது கையையும் நம்மால் பழக்கிக் கொள்ள முடியும். இறைவனின் படைப்பில் இரு கைகளும் ஒரே மாதிரியாகவே படைக்கப்பட்டுள்ளன. நாம், நமக்கு வசதியாக இருக்கிறது என்பதற்காக வலது கைப் பழக்கத்திற்கு இலக்காகி, இடது கையை 'ஒப்புக்குச் சப்பாணி' ஆக்கி விடுகிறோம். இரண்டு கைகளையும் பழக்கிக் கொள்வதுதான் ஆரோக்கியமான பழக்கம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.



உலகம் தோன்றிய நாள் முதலே, இடக்கைப் பழக்கம் உள்ளவர்களும் இருந்திருக்கிறார்கள் என்பதை வரலாறு நமக்குக் காட்டுகிறது. வரலாற்று நாயகர்களான ஜூலியஸ் சீசர், உலகையே கலக்கிய மாவீரன் அலெக்சாந்தர், இங்கிலாந்தை அச்சுறுத்திய நெப்போலியன், போன்றவர்கள் இடக்கைப் பழக்கமுடையவர்களே.

பிரபல விளையாட்டு வீரர்களான காரிசாபர்ஸ், ஆலன்பார்டர், ஆலன் டேவிட்சன் ஆகியோரும் இடக்கைப் பழக்கமுடையவர்களே.

காந்தியடிகள் இடது கையாலும் எழுதும் திறமை பெற்றிருந்தவர்.

எனவே, எதுவும் நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே அமைகிறது.

இடக்கைப் பழக்கமுடையவர்களின் எண்ணிக்கை மேலைநாடுகளில் கூடி வருகிறது. வின்பார்ன் (மிஸ்ஸோரி) என்ற நகரத்தின் போலீஸ்காரர் ஒருவர் இடக்கைப் பழக்கம் உள்ளவர்.

அவருடைய பதவிக்கு ரிவால்வரை (கைத் துப்பாக்கி) இடுப்பு பெல்டில் செருகிக் கொள்ள வேண்டும். அவர் இடக்கைப் பழக்கம் உள்ளவர். அத னால் ரிவால்வரை பெல்டின் இடது பக்கம் செருகிக் கொண்டிருக்கிறார். இதை மேலதிகாரிகள் ஏற்கவில்லை. இந்தப் போலீஸ்காரரும் வலதுபுறத்தில் ரிவால்வரை செருகிக் கொள்ள மறுத் திருக்கிறார். இது நீதிமன்றம் வரை போயுள்ளது!

சியாட்டில் நகரத்தின் தபால்காரர் ஒருவர் இடக்கையர். இவர் பிரிக்க வேண்டிய தபால்களை தன்னுடைய வச திக்கு ஏற்ப வலது கையில் அடுக்கி வைத்துக் கொண்டு இடது கையில்தான் தள்ளித் தள்ளிப் பிரித்து அடுக்கி வைத் துக் கொண்டு கொடுக்கிறார்.


பிரான்சில் புகழ்மிக்க ஒரு தையற் கலைஞர், இடது கையில் கத்தரியை வைத்துக் கொண்டு, தான் தைக்க வேண்டிய துணிகளை வெட்டுகிறார்!


உலகெங்கும் உள்ள இடக்கையர் களுக்கென கான்ஸாஸ் நகரில் ஒரு




சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. நமது பழக்கப்படி நாம் இடதுகையாலேயே சல்யூட் அடிப்போம், இடது கையைக் கொடுத்தே கை குலுக்குவோம் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள் இவர் கள்!

– டி. தேவராஜன்





கரடி பொம்மை சொல்லும் கதை!



ஹாய்!

என்ன பாக்கறே! என்னடா இது பொம்மை பேசறதேன்னா? என்ன பண்றது? எத்தனை நாளைக்குத்தான் நீயே என்னை மடில வெச்சிக்கிட்டு, 'புஜ்ஜு' குட்டி' 'செல்லக் குட்டி' அது, இதுன்னு என்கிட்ட பேசிட்டிருப்பே? சரி; ஒரு நாளைக்கு நாமும்தான் பேசுவோமேன்னு தோணிச்சு! அதான்!

ம்... என்ன பேசறது உன்கிட்டே? ஆங்... கதை கேக்கறியா? சூப்பர் கதை ஒண்ணு சொல்லட்டுமா? கரடி பொம்மை என்ன பெரிய கதை சொல்லும்னுதானே பாக்கறே! என்னோட கதையையே சொல்லட்டுமா? ரொம்ப இன்ட்ரஸ்டிங்கா இருக்கும்!

என் பேர்தான் உனக்கே தெரியுமே. 'டெடிபேர்' கரடி பொம்மை! பார்த்தா இப்படி குள்ளப்பட்டா மாதிரி இருக்கேனே, எனக்கு என்ன வயசு தெரியுமா? தொண்ணூறு! 'கரடித் தாத்தா'ன்னு கிண்டல் பண்ணத் தோணுதா? ஒதைப் பேனாக்கும்!

நீ மட்டும் இல்லே; உலகத்துல இருக்கற எல்லா குட்டிப் பசங்களுக்கும் நான்தான் பெஸ்ட் ஃபிரெண்டாக்கும்! கடைல என்னைப் பார்த்தா போதும், அத்தனை பசங்களும் அவங்க அப்பா, அம்மாவைத் துளைக்க ஆரம்பிச்சிடுவாங்க!

என்னோட தேன் கலர் உடம்பும், வட்டமான முகமும், துருத்திய மூக்கும், டூமா கோலி போன்ற கண்களும், எடுப்பான காதுகளும் தூக்கிக் கொள்ளத் தூண்டும் பெரிய கைகளும் யாருக்குத்தான் பிடிக்காது?


இப்படி ஒரு அழகான உருவமா என்னைப் படைச்சது யார் தெரியுமா?

ஜெர்மனில இருந்த மார்க்கரெட் ஸ்டெஃப் (MARGARETE STEIFF) என்கிற அம்மாதான்! அவங்க ஒரு தையல் கலைஞர். குழந்தைகள் டிரெஸ் தைக்கறதுல ரொம்ப பெரிய எக்ஸ்பர்ட்! அப்படித் துணி தைக்கும் போது வீணாகும் துணிகளையெல்லாம் சேர்த்து, குட்டி குட்டியா பொம்மைகள் செய்து, சின்னப் பசங்களுக்கு அன்பளிப்பாக்

கொடுப்பாங்க! அதனால பசங்களுக்கெல்லாம் இவங்க கடைல துணி தைக்கறதுன்னா செம ஜாலி! அப்புறம் என்ன? மார்க்கரெட் அம்மா கடைல எப்பவும் நல்ல கூட்டம்தான்!

அவங்க யோசிச்சாங்க. 'அடடா! இப்ப்டி குட்டி குட்டியா பொம்மைகள் செய்வது குழந்தைகளுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கே. நாமே ஏன் இந்த பொம்மை தயாரிப்பை ஒரு தொழிலாகவே தொடங்கக் கூடாது?' அப்படீன்னு யோசிக்க ஆரம்பிச்சாங்க.

உடனே, பொம்மைகளில், புது மாதிரிகளைப் புகுத்தி, இன்னும் அழகழகான பறவைகள், விலங்குகள்



ஆகியவற்றைத் தயாரித்து விற்க ஆரம்பித்தார். அவ்வளவுதான்! பயங்கரமான வியாபாரம்! இவரைப் போலவே பல நபர்கள் இந்தத் தொழிலில் போட்டி போட வந்து விட்டனர்! போலிகள் நிறைய வர ஆரம்பிச்சிடுச்சு. அதனால, மார்க்கரெட் என்ன பண்ணாங்க தெரியுமா? தன் பொம்மைகளின் காதுப் பக்கம் ஒரு கறுப்பு பட்டன் வைத்தார்! இப்போது இன்னும் அமோக விற்பனை!

எல்லா பொம்மைகளுமே நல்லா வித்தாலும் கரடி பொம்மை மட்டும் எல்லாத்தை விடவும் அதிகமா வித்துது.

'அதனால மார்க்கரெட் என்ன பண்ணாங்க தெரியுமா?

நிரந்தரமா ஒரு கரடி பொம்மை மாடல் செஞ்சி, அதுக்கு "BEAR 55PB" அப்படீன்னு பேர் வெச்சாங்க. அந்த மாடல் கரடி பொம்மை எக்கச்சக்கமா, உலகம் முழுக்க விக்க ஆரம்பிச்சுது. அதன் பேர் என்ன தெரியுமா?

நீ நினைக்கறது கரெக்ட்!

'டெடி பேர்' - நானேதான்!

என்னங்கறே? *1913* ஆம் வருஷம் வரைக்குமே மொத்தம் பத்து நாடுகளில் எட்டு மில்லியன் அளவுக்கு வித்திருக்கேனாக்கும்!

இத்தனை பெரிய அளவில நான் விக்க ஆரம்பிச்சதும் என்னை உற்பத்தி செய்யற கம்பெனியும் பெரிய அளவுல விரிவுபட ஆரம்பிச்சுது! வேலை செய்பவர்களின் எண்ணிக்கை 750 பேர்! இது தவிர கைத் தொழில் மாதிரி வீட்டில் இருந்தபடியே 1400 பேருக்கும் மேல என்னைத் தயார் பண்ண ஆரம்பிச்சாங்க!


இன்னிக்கு ஜெர்மனியில் இருக்கிற மார்க்கரெட் ஸ்டெய்ஃப்பின் பொம்மைத் தொழிற்சாலை, உலகிலேயே ரொம்பப் பெரிசு! விற்பனை அதிகம் ஆக, ஆக, என்னைப் பல்வேறு வகையில் பண்ண ஆரம்பிச்சாங்க! ஓடும் கரடி, நடக்கும் கரடி, தாண்டும் கரடி, இடுப்பில்



"புலிகளெல்லாம் எதுக்குப் போராட்டம் நடத்துதுங்க?"

"நாட்டில எங்கும் மான் சரணாலயம் வைக்கக் கூடாதுன்னு தான்!"

- இரா. சரவணன்,
நாகரசம்பட்டி.



இராமருக்குப் பிடிச்ச 'மான்' எதுடா?"

"அனுமான்தான்!"

- எஸ். முத்துலக்ஷ்மி,
சென்னை - 18.



ஆசிரியர் : A, B, C, D எத்தனை எழுத்து சொல்லு?"

மாணவன் : A, B, C, D நாலு எழுத்து சார்!"

- கே. அருள்பிரகாசம்,
சின்னம்பள்ளி.

உட்காரும் கரடி, படுக்கையில் அணைத்துக் கொள்ளும் கரடி இப்படி நான் மொத்தம் 700 வகையில இருக்கேன்!

என்னோட ஸ்பெஷாலிட்டியே என் உடம்பும் முகமும்தான்! மெத்து மெத்துனு ஜோரா இருப்பேன். உனக்குத்தான் தெரியுமே! டர்க்கி டவல்லேர்ந்து பட்டு நூல் வரைக்கும் என்னைத் தயாரிக்கறத்துக்கு நிறைய பொருள் வேணும்! ரொம்ப கவனமும் வேணும். தினமும் சோப்பு போட்டுக் குளிப்பாட்டினாக் கூட எனக்கு ஒண்ணுமே ஆகாத மாதிரி கூடத் தயாரிக்கிறாங்க!

காதோட ஒரு விஷயம்! நீ மட்டுமில்லை - நீ இல்லாத போது உன் அப்பா, அம்மா கூட என்னோடு விளையாடுவாங்க! என்னைக் கண்டா, பிடிக்காதவங்களே இல்லைன்னு சொல்லலாம்!

எத்தனையோ பொம்மைகள் இருக்கும் போது, எனக்கு மட்டும் ஏன் இத்தனை மதிப்புன்னு சில பேர் ஆராய்ச்சி பண்ணாங்க! அவங்க என்ன சொல்றாங்க, தெரியுமா? நான் புஸு புஸுன்னு பார்த்ததுமே வாங்கத் தூண்டும்படி இருக்கேனாம்! அதோட என் கையில் FOR EVER YOURS ('என்றும் உங்கள் அன்புடன்') அப்படீன்னு எழுதி வச்சிருந்தா சட்டு இருக்கோல்லியோ, அது உங்களுக்கெல்லாம் ரொம்பப் பிடிச்சிருக்குதாம்!

என்னோட ஓல்ட் மாடல்களைத் தேடி சில பேர் அலையறாங்க! அது எங்கே இப்ப கிடைக்குது? மார்க்கரெட் ஸ்டெஃப்போட கம்பெனியிலேயே 1903 வருஷ மாடலெல்லாம் இப்போ இல்லே! இன்னொரு விஷயம் தெரியுமா? என்னோட பழைய மாடல் 1989-ம் வருஷம் 55,100 பவுண்ட்டுகள் லண்டனில் ஏலம் போச்சாம்! இது கின்னஸ் சாதனையாம்! தமாஷா இல்லே?

இன்னிய தேதிக்கு, வருஷா வருஷம் சுமார் மூன்று லட்சம் டெடிபேர் பொம்மைகள் - நான்தான் - தயாராகி, உலகம் முழுக்க விற்கப்படுகிறேன்!

இருக்காதா பின்னே?

உன்னை மாதிரி எத்தனையோ குழந்தைகளுக்கு நான்தானே பெஸ்ட் ஃப்ரெண்ட்?

அட்டையில் : டெடிபேர் பொம்மையுடன் ரூபா, அனிதா பொன்னப்பன்

அட்டை வண்ணப்படம் : யோகா



முதலில் கற்க வேண்டியபணிவு!

ராமு, சோமு, தாமு மூவரும் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம் பினர். விடுமுறை நாட்களில் மூவரும் எங்கேயாவது சென்று அட்டகாசம் செய்து கொண்டு இருப்பார்கள். குறிப்பாக, கிராமப் பக்கம் சென்று கூலி வேலை செய்யும் சிறுவர் களைக் கேலி செய்து கொண்டு, வயதான பெரியவர்கள் யாராவது கோலை ஊன்றிச் சென்று கொண்டிருந்தால், கோலைத் தட்டி விடுவார்கள். இதுதான் அவர்களுடைய வேலை.

இன்றும் அப்படித்தான்! அருகில் இருந்த கிராமத்திற்குச் சென்று ஆற்றில் குளித்தார்கள். பின்னர் உடை அணிந்து கொண்டு ஒரு பாறை மேல் அமர்ந்தனர்.

அங்கே ஒரு சிறுவன் ஆட்டை மேய்த்துக் கொண்டு வந்தான். அவனைக் கண்டதும் குறும்புத்தனம் செய்ய எண்ணிய ராமு, ''டேய் பையா இங்கே வா'' என்றான்.

சிறுவன் வேகமாக வந்தான். ''என்னங்க?'' எனக் கேட்டான்.

''உன் பேரு என்ன?'' என்று கேட்டான் சோமு.

''கண்ணாயிரம்'' என்றான் சிறுவன்.

''எத்தனையாவது படிச்சிருக்கே?''

''என்னை, சின்ன வயசிலிருந்தே ஆடு மேய்க்க விட்டுட்டாங்க. அதனால பள்ளிக்கூடத்துல சேர்த்து படிக்கலே. ஆனா எழுத்துக் கூட்டி படிப்பேன்.''

''உன் மூஞ்சிக்கு இந்த வேலைதான் லாயக்கு!'' என்றான் சோமு.

''ஆமா. உன் பேரை எழுதுவியா?'' - கேட்டது ராமு.

''தெரியாதுங்க'' என்றான் சிறுவன்.

''நீ மேய்க்கிறியே ஆடு, அந்த ரெண்டு எழுத்தையாவது எழுதுவியா?'' எனத் தாமு கேட்டான் கிண்டலாக.


சிறுவன் மௌனமாக நின்றான்.

சோமு ''நீ சுத்த மடையண்டா. வள்ளுவர் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா? கண் உள்ளவர்கள் என்பவர்கள் கல்வி கற்றவர்கள். கல்வி அறிவு இல்லாதவர்கள் பெற்றுள்ள கண்ணானது வெறும் புண்ணுன்னு சொல்லி இருக்கார்'' என்றான்.

அதனைக் கேட்டு மற்ற இருவரும், ''உனக்குப் போய் கண்ணாயிரம்னு பேர் வைத்து இருக்கிறார்களே!'' எனக் கூறிச் சிரித்தனர்.

சிறுவன், ''எனக்கு இதெல்லாம் தெரியாதுங்க. ஆனா ஒண்ணு தெரியும். பெரியவர்களிடம் மரியாதையாக நடந்து கொள்ளல்; எல்லோரிடமும் அன்பாகப் பழகுதல்; எளியவர் என்று யாரையும் கேலி செய்யாதிருத்தல் ஆகியவை எல்லாம் தெரியும். இதெல்லாம் இருந்தால் மற்றதெல்லாம் தன்னால் வரும். நீங்களும் முதல்ல அதைக் கத்துக்குங்க. அப்புறமா எனக்கு வந்து வள்ளுவர் கூறினதைச் சொல்லுங்க'' எனக் கூறி விட்டு, ஆட்டை மேய்த்துக் கொண்டு சென்றான். மூவரும் வெட்கத்துடன் தலை குனிந்தனர். இப்போது மூன்று நண்பர்களும் சுத்தமாக மாறி விட்டனர். யாரிடமும் முன் போல் வாலாட்டி கேலி செய்வதில்லை.

- கே. யுவராஜ், ஆரணி



★ பிருந்தாவனக் கவியரங்கத்தின் எல்லாக் கவிதைகளும், 'தேனில் தோய்த்த பலாச்சுளை' யாக இனித்தன. - திருவொற்றியூர் ப. ராகவன், குன்டூர் செல்லப்பா, தாம்பரம் சந்தியா, புதுக் கோட்டை நாகமணி, விருதுநகர் செளந்தம், நாகூர் குத்புதீன் அலி, ஏம்பல் காமராஜன், சின்னக்கலி முத்துசாமி மற்றும் பலர்.

★ டாக்டரின் பதில்கள் வீட்டுக்குள்ளேயே வைத்தியர் இருப்பது போல் நிறைவைத் தந்தது. - சாத்தூர் செந்தாமரை, மதுக்கூர் மு. சாதிக் அலி, அத்தங்கரை பி. கோவிந்தசாமி மற்றும் பலர்.

★ 'எனது லட்சியம்' போன்ற பகுதிகளுக்கு எங்களைப் போன்ற வெளியூர் சிறுவர்களிட மும் பேட்டி கேட்கக் கூடாதா? - கடைசல்பட்டி சி. ஜார்ஜ், சங்கராபுரம் ஆ. முருகன்.

★ 'மணம் தரும் மலர்கள்' தாங்கள் இதுவரை கேட்டறியாத தகவல்கள்! - கொண்டர சம்பட்டி எஸ். பெருமாள், எஸ். கிருஷ்ணன், எம். பாலாஜி, கே. சின்கா, பி. மெய்யழகன், பி. சோலைமலை, வி. குமார், டி. தனபாக்கியம், கே. தேசிங்கன், சி. வீரமணி, எஸ். கவிதா, மீஞ்சூர் ஸ்ரீகாந்த் மற்றும் பலர்.

★ 'இங்கிலாந்தில் செஞ்சது' சிறுகதை, வெளிநாட்டு மோகம் கொண்ட எல்லோருக்குமே ஒரு நெத்தியடி. - குடியாத்தம் ஜே. நெடுமாறன், திருச்சி - 14, இரா. திலீப், குறுக்குப்பாளையம் ஆர். கார்த்திகேயன், சங்கராபுரம் ஆ. முருகன் மற்றும் பலர்.

★ மத ஒற்றுமையை வலியுறுத்தும் அட்டைப் படம் இன்றைய இந்தியாவின் சூழ் நிலைக்கு ஏற்ற படம்! - மேலப்பாதி எஸ். நாக ராஜன், கூடப்பாக்கம் பி. கல்பனா பானு, கும்ப கோணம் புலவர் எஸ். கே. மூர்த்தி, ஜோதிநகர் வி. கணேஷ் மற்றும் பலர்.

★ ஊருக்கு ஒரு கௌரிசங்கர் நிச்சயம் தேவை. அவரது சேவை போற்றுதலுக்குரியது. அவரது முகவரியைத் தரக் கூடாதா? - மதுக்கூர் மு. சாதிக் அலி, திருச்சி ஜே. குத்புதீன் அலி அகமது, கொண்டாரம் கன்னியம் மாள், வேம்பூர் முனிராஜ், பாரதிபுரம் லட்சுமிநாதன், செண்டிப்பட்டி திருப்பதி ராஜா மற்றும் பலர். (குறித்துக் கொள்ளுங்கள்! 12, சடையப்பன் தெரு, இராசிபுரம், 637 408. சேலம் மாவட்டம் - இதுதான் கௌரிசங்கரின் முக வரி. - ஆர்.)

★ கிரிக்கெட் அலசல் அருமை. 'சான்றிதழ் வேண்டுமானால் அம்பயரா நிற்கட்டும்' என்பதைப் படித்ததும் 'குபீர்ச் சிரிப்பு' சிரித்தேன்! - காவேரிப்பட்டணம் கே. சோம சேகர்.

★ 'மேஜிக் கலையைப் பாடமாக்க வேண் டும்' படித்த போது உள்ளம் மகிழ்ந்தது. ஆஹா! அப்படி மட்டும் ஆகி விட்டால் எத்தனை நன்றாக இருக்கும்? - தருமபுரி, சோமசுந்தரம்.

★ கடல் குதிரைக்கு 'அடைகாக்கும் அப்பா' என்று தாங்கள் சூட்டிய பெயர் அருமையிலும் அருமை - சிறுபுலியூர் க. ஜெயகாந்தம், க. கவிதா, முடிகொண்டான் எஸ். சாவித்ரி, புதுவை நா. குமரன், கே. கே. நகர், பி. ராமகிருஷ்ணன்.

★ 'கண்ணனுக்கு இணையான வீரன்' நன் றாக இருந்தது. இது போல் நல்ல கருத்து மிக்க கதைகளைத் தொடர்ந்து வெளியிடவும். - இஞ்சிக்கொல்லை வ. தாம்பரநாதன், வ. குரு நாதன், மதுக்கூர் எம். சாதிக் பாட்சா, அம்மை யார்குப்பம் சிவா, ரவி, ஜயப்பன், கிருஷ்ணன் மற்றும் பலர்.

★ கேளுங்கள் சொல்லப்படும் பகுதியில் இடம்பெற்ற செய்திகள் யாவும் பயனுள்ளவை. படித்து, அறிந்து கொள்ள வேண்டியவை. - மதுக் கூர் எம். அகமது அலி, பெரம்பலூர் எஸ். காம ராஜ்.

★ 'நிலா வேண்டும்' ஒரு அருமையான, கலையான கதை. செல்லப்பிள்ளை என்று அதிகம் செல்லம் கொடுக்கும் தாய்மார்களுக்கு இது ஒரு பாடமாக அமையட்டும்! - அம்மை யார்குப்பம் மா. வெ. கிருஷ்ணன்.

★ கோகுலத்தில் நாங்கள் விரும்பிப் படிக் கும் 'எங்கள் ஊரில் நடந்தது', பிருந்தாவனம் இரண்டும் இந்த மாதம் காணவில்லையே? - ஸ்ரீதேவிநகர் கிருபாநந்தன், தியாகராயபுரம் என். ஸ்ரீதர், கருங்காலி பி. கார்த்திகேயன், பங்களூர் கே. ரமணி, வி. பாபு, டி. சுரேஷ், மற்றும் பலர்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.

வானதி வழங்கும் சிறுவர் நூல்கள்

வாண்டு மாமா

	ரூ.பை.
விந்தை விநோதம் விசித்திரம்	28.00
மூளைக்கு வேலை - II	22.00
நிலாக் குதிரை	32.00
பலே பாலுவும் பறக்கும் டிராயரும்	15.00
தேநியும் சேதியும்	42.00
கண்ணாடி மனிதன்	25.00
புலி வளர்த்த பிள்ளை	20.00
துப்பறியும் புலிகள்	12.00
ஒளவையார் அருளிய ஆத்திச்சூடி விளக்கம்	14.00
ஒளவையார் அருளிய கொன்றைவேந்தன்	12.00
இதையும் தெரிந்து கொள்ளுங்கள்	10.00
மர்ம மனிதன்	16.00
சி.ஐ.டி. சிங்காரம்	18.00

சாந்தா மூர்த்தி

பாரதப் பண்டிகைகள்	25.00
மாதர்குல திலகங்கள்	24.00

விசாகன்

மாயாவி இளவரசன்	20.00
மாஜிக் மாலினி	24.00

பூவண்ணன்

புள்ளிமான்	10.00
இதோ ஒரு ஹீரோ	12.00

பொன். பரமகுரு

நீதிநெறிக் கதைகள்	14.00

மாறன்

மிலிட்டரி சங்கர்	18.00

வீர. வசந்தன்

மஞ்சள் ரோஜா	12.00

மாணிக்கப் பாண்டியன்

	ரூ.பை.
உன்னால் முடியும்	9.00
இரத்தினக் குவியல்	12.00

கொ. மா. கோதண்டம்

நீலன் நமது தோழன்	12.00

பூதலூர் முத்து

தங்கச் சுரங்கத்திற்கு ஒரு சாவி	14.00

வேணுசீனுவாசன்

சிலந்தியும் வண்ணத்துப் பூச்சியும்	12.00

நாகை மனோகரன்

காற்று நமக்கு நண்பன்	8.00

ஆர். பொன்னம்மாள்

பாட்டி சொன்ன அறிவுக் கதைகள்	20.00

திருமலை

கண்மணிப் பூங்கா	12.00

தி. வேங்கட கிருஷ்ணய்யங்கார்

இராமாயணக் குட்டிக் கதைகள் - IV	20.00

சம்பந்தம்

பொது அறிவுக் குவியல்	20.00
அதிசயங்கள் புரியும் அற்புதக் கம்ப்யூட்டர்	13.50

எஸ். சங்கரன்

அறிவு வளர்ச்சிக்கு 1000 விஷயங்கள்	12.00

* தேவையான பிரதிகளை வி.பி.பி.யில் பெற கடிதம் எழுதுங்கள். வி.பி.பி. தபால் செலவு தனி.

* புத்தக வியாபாரிகள், பள்ளி, கல்லூரி நூலகங்களுக்கு தக்கக் கழிவு தரப்படும்.

வானதி பதிப்பகம்,

தபால் பெட்டி எண் : 6151
13, தீனதயாளு தெரு, தி.நகர்.,
சென்னை - 600 017.

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka